மலர் – 4 இதழ் – 02

தமிழணங்கு

(தமிழராய் இணைவோம்)

இலக்கியம்,
சமயம், பண்பாட்டு
ஆய்விதழ்
ஆகஸ்ட் 2025

தனிச்சுற்றுக்கு மட்டும்

ஆசிரியர்: முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

இலக்கணப் பயிற்சி இலக்கிய இன்பத்தின் திறவுகோல்
பேராசிரியர் முனைவர் மு. முத்துவேலு

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்ததா ??!!!
முனைவர் தேமொழி

ஆடி மாத வேளாண் வளமைச் சடங்குகள்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

Gene Notes in Vengai Anchor Ch-6
தமிழ்மகன்

தமிழ்நாடு பெயர் வேண்டும்
முனைவர் சிவ இளங்கோ

பொருளாதாரப் புதிர்கள்
முனைவர் ச.அய்யம்பிள்ளை

சங்கத்தமிழின் நீட்சி
முனைவர் தே. ஞானசேகரன்

கங்கை கொண்டான்
மாரிராஜன்

இனிய சுதந்திரதின வாழ்த்துக்கள்



தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழணங்கு

(தமிழராய் இணைவோம்)

மலர்-4 இதழ்-2

ஆகஸ்ட் - 2025

சிறப்பாசிரியர்
பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர். திருமதி செ. இராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர்
முனைவர். சந்திரிகா சுப்பிரமணியன்

உதவி ஆசிரியர்கள்
முனைவர் தேமொழி (அமெரிக்கா)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

வடிவமைப்பு
C. சந்திர விமல் M.A., B.Ed

Thamizhanangu

Printed & Published by
E. Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street,
Dinamani Nagar, Madurai,
Tamil Nadu 625 018.
Ph: +91 7871123226, +91 7010997639

கட்டுரைகள் அனுப்ப..
thamizhanangu1@gmail.com

இவ்விதழில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அந்த கருத்துக்களுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

- இதழ் ஆசிரியர்

உள்ளடக்கம்

1. *சங்கத்தமிழின் நீட்சி* — 3
   - முனைவர் தே. ஞானசேகரன்
2. *எது நடந்ததோ அது நன்றாகவே நடந்ததா?* — 10
   - முனைவர் தேமொழி
3. *ஆடி மாத வேளாண் வளமைச் சடங்குகள்* — 14
   - முனைவர் செ. இராஜேஸ்வரி
4. *பொருளாதாரப் புதிர்கள்* — 19
   - முனைவர் ச. அய்யம்பிள்ளை
5. *கங்கை கொண்டான்* — 27
   - மாரிராஜன்
6. *இலக்கணப் பயிற்சி இலக்கிய இன்பத்தின் திறவுகோல்* — 32
   – பேராசிரியர் முனைவர் மு. முத்துவேலு
7. Gene Notes in Vengai Anchor — 37
   - தமிழ்மகன்
8. *எளிய முறையில் யாப்பறிவோம்* — 47
   - நெருப்பலையார் இராம. இளங்கோவன்
9. *தமிழி நகரம் மதுரை* — 52
   - சி. அபிஷேக்
10. *கீழடி அகழாய்வில் தமிழ்க் கடவுள் முருகன்* — 59
    - ப. தேவி அறிவுசெல்வம்
11. *சாதி பேதம் பார்க்காத பாரதியார்* — 61
    - கிருஷ்ணன் சங்கரன்
12. *வேளாண் மரபில் ஆடி மாதம்* — 64
    - முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி
13. *தமிழ்நாடு பெயர் வேண்டும்* — 72
    - முனைவர் சிவ இளங்கோ
14. *சித்தர் காகபுசுண்டர்* — 74
    - டாக்டர். அண்ணாமலை சுகுமாரன்
15. *சார்லஸ் தியோப்பிலஸ் ஈவால்ட் இரேனியஸ்* — 79
    - பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே
16. *இங்கிலாந்து மண்ணில் இனிய தமிழ்விழா ‘தமிழணங்கு’ எழுத்தாளர்களுக்குப் பாராட்டு விருது* — 87

ஆகஸ்ட் 15

ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
ஆடுவோமே

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு
எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு நாம்
எல்லோரும் சமமென்பதுறுதியாச்சு
எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு நாம்
எல்லோரும் சமமென்பதுறுதியாச்சு
சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே
சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே

சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே
இதை தரணிக்கெல்லாமெடுத்து ஓதுவோமே
சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே
இதை தரணிக்கெல்லாமெடுத்து ஓதுவோமே

இனிய சுதந்திர தின வாழ்த்துக்கள்

சங்கத்தமிழின் நீட்சி

கலைமாமணி முனைவர் தே. ஞானசேகரன்
பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ்த்துறை,
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 046

கவிதை ஒரு சொல் விளையாட்டு என்று சொல்லலாம். கவிதை தேர்ந்த சொற்களின் கட்டமைப்பு. கவிஞனின் உணர்விற்கேற்ப; அழகிய சொற்கள் வந்து சேரும் ஓர் உன்னதக் கலை கவிதை. கவிதை இலக்கணம் சொல்லணியியலோடும் அணியிலக்கணத்தோடும் தொடர்புடையது. கவிதை அணிகளை மிகுதியாகப் பயன்படுத்தும் ஒரு மொழியாகும். மேலும் கவிதை மொழி பிறரைத் தூண்டி இணங்க வைத்தலில் ஆற்றல் பெறுவதை நோக்கமாகக் கொண்டது.

“கவிதை, ஏமாற்றும் திறன் கொண்டது. வாசகனது மனத்தை மென்மைப்படுத்திவிடுவது கவிதை” என்று பிளேட்டோ கூறுவர். அரிஸ்டாடில் “கவிதை தீவிர உணர்ச்சிகளின் வெளியீட்டுக்குப் பாதுகாப்பான வடிகாலாக உள்ளது” என்று வாதிடுவார். மேலும் அவர் ஒன்றைப் பார்த்து ஒன்றைப் படைக்கிற ஆற்றல் மனிதனோடு பிறந்தது.

படைத்த ஓவியங்களையோ, பொருள் பொதிந்த சொற்களையோ நாம் கண்டு ரசித்துப் பிரதிபலிக்கும் திறனும் நமது உடன்பிறப்புகள். கலைக்கும் கவிதைக்கும் மனிதனோடு உள்ள ஒட்டுறவு கவித்துவம் கொண்டது. இதை இயல்பாகவே அதிகம் பெற்றவன் கலைஞனாகவும், கவிஞனாகவும் மேம்படுகிறான். இவனிடம் தன்மயத் தன்மை சிறந்திருக்கும் என்பார். ஆலிவர்கோல்ட் ஸ்மித் “சூரிய - சந்திரர்களைக் கண்டு பிரமித்துப் பரவசமடைந்தபோதுதான் மனித மனத்தில் கவிதை ஊற்றெடுக்கத் தொடங்கியது” என்று ஷெல்லி கூறுவார்,

“கவிதைதான் எல்லாப் பொருள்களுக்கும்
ஒரு தெய்வீக மலராய் விளங்குகிறது
வாழ்க்கை விருட்சத்தின் உச்சாணியில்
மலரும் வாடாமலா; கவிதை”

என்று கவிதைக்குப் பொருள் சொல்லுவார் அன்புத் தம்பி முத்தமிழ் விரும்பி இயற்கையையும் மனிதக் கூட்டத்தையும் நேசித்துக்கிடப்பவர். அவரின் கவிதைகளில் எனக்கு மிகவும் பிடித்த சின்னஞ்சிறு கவிதை:

“தனி மரம்

தோப்பாகாது

தோப்பாகலாம் வா”

ஆமாம். அவர் எப்போதும் தனித்திருக்க விரும்பாத “மானுட விரும்பி”. இயற்கையையும் மனிதர்களின் உரையாடல்களையும் மிக நுட்பமாக நோக்கி அதைத் தனது எழுத்துக்களில் உருவம் கொடுத்து உலவ வைக்கும் சாமர்த்தியம் பெற்றவர். அவரது “பூமர நிழல்” கவிதை நூலாகட்டும் “வறட்சியின் பாடல்கள்” கவிதை நூலாகட்டும் சொற்கட்டு இல்லாத ஒரு வரிகூட இடம்பெறாது. தான் காணும் நிகழ்வை இரசித்து, அந்த இரசிப்பு தரும் உணர்வை மொழியினுள் கொண்டுவரும் அற்புதம் முத்தமிழ் விரும்பியின் எழுதுகோலுக்கு மிக எளிதாக வருகிறது. இவரின் கவிதை மொழி மிகத் தனித்துவமானது. வாசிப்பவனுக்கு முதல் வாசிப்பிலே அகப்படாதது; திரும்பத் திரும்ப வாசித்தால் மட்டுமே இவரின் கவிதையினுள் பொதிந்திருக்கும் உணர்ச்சியையும், பொருளையும் அறியமுடியும். “உன்னோடு உரையாடுதல்” எனும் இந்தக் கவிதை நூலின் முதல் கவிதை வருமாறு தொடங்குகிறது.

“இரண்டு மூன்று

சொற்கள்

பேசி

மூன்றரை நாட்களைக் கடந்து

விடுகிறாய்.

ஒற்றைச் சொல்லைக்

கடக்க முடியாதவன்

ஓடம் ஏறியென்ன

வெண்தோள் தொட்டு விளையாடும்

நெளி பனைக் கூந்தல்

மலர் மணம்

நாகப்படமெடுத்தாட

மகுடியான

எனதிரு கண்கள்”



என்று நீளும் இக்கவிதையை வாசகன் சட்டென வாசித்துக் கடந்துவிட முடியாது. காதலியிடம் நிறைய பேச விரும்பும் தலைவன் அவளோ ஓரிரு

வார்த்தை பேசவே ஓராயிரம் முறை யோசிப்பவள். ஆனால் அவள் ஒற்றை வார்த்தையே இவனைத் திக்குமுக்காடச் செய்கிறது. அவள் நிறையப் பேசினால் இவன் என்ன ஆவான். பேச்சைவிட அவளின் அழகு இவனை மகுடிக்குப் படமெடுத்தாடும் நாகமென ஆக்கிவிடுகின்றது. “வெண்தோள் தொட்டு விளையாடும் நெளி பனைக் கூந்தல்” என்று தலைவியின் கூந்தலை வர்ணிக்கும் அழகில் சங்ககாலப் புலவனாய் முத்தமிழ் நமக்குள் நுழைவார். கவிஞர் முத்தமிழ் தமிழக நிலமெங்கும் காரிலேயே பயணம் செய்துகொண்டிருக்கும் வாய்ப்பைப் பெற்றவர். அதனால் அவரின் கவிதைகளில் அவர் காணுகின்ற இயற்கை கவிதைச் சித்திரமாய் உருப்பெற்றிருப்பதை நிறைய இடங்களில் காண்கின்றேன்.

“தார்ச்சாலை இளகி
அருவியொன்று
வீழ் பறவை
இரு மேனிச் சிறையில்
மாயம்

புணலாடு
வெண் சிறகெடுத்து
மாமழை வீழ் பறவை
சமவெளியில் தத்தி தாவி ஓடும்”

பறவை பறக்கிறது. ஆனால் வெயில் காலம். தார்ச்சாலையே இளகி அருவிபோல ஓடும் கொடுங்கோடை. இதில் பறவை வீழ்ந்தால் என்ன ஆகும். அதனால்; வெயிலைத் தாளாது பறவை மாயமாய் மறைகிறது. தன் உயிர் காக்க என்றும் வாசிக்கலாம். இல்லை

வெப்பத்தால் இளகிய தார்ச்சாலையில் விழுந்து மாண்டுபோன வீழ் பறவை என்றும் வாசிக்கலாம். இதற்கடுத்த பகுதி மழை பெய்கிறது. அதனால் நீர்ப்பெருக்கெடுத்து சாலை முழுவதும் ஆறாகிறது. இந்தப் புனலில் அதாவது மழையில் நனைந்து வீழ்ந்த பறவை தன் உயிர் காக்க சமவெளி நோக்கி தத்தித் தாவி ஓடுவது அடுத்துவரும் கவிதையில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்க முடியும். இந்தவகைச் சித்திரிப்பு மழையில் காரில் பயணம் செய்துகொண்டே அவதானிக்கும் வாய்ப்புப் பெற்றதால்தான் படைப்பாளனுக்குள் கவிதையாய் ஊற்றெடுக்கிறது. கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் மனிதர்களைக் காட்டிலும் இயற்கையின் அழகுகள் மிக அற்புதமாய் அதுவும் மிக நுட்பமான கவிதையாய் படைக்கப்பட்டிருப்பதைக் காண முடியும்.

இயற்கை மனிதனைத் தன்னுள் எல்லாமுமாக இணைத்துக்கொள்ளும் சக்தி படைத்தது. இயற்கையை நேசிக்காமல் எவரும் உயிர்வாழ முடியாது. மனிதன் என்பவனே இயற்கையின் இன்னொரு வடிவம்தான். அதனால்தான் இயற்கைக்கு மாறாக மனிதம் எல்லை மீறும்போது அது தண்டிக்கப்படுகிறது என்று இன்றைய சுற்றுச்சூழல்வாதிகள் சொல்வதில் உண்மை இருக்கவே செய்கிறது. கவிஞர் முத்தமிழ் விரும்பி காதலியோடு பேசும்போதுகூட; ஆறும், புனலும், காற்றும், மழையும் கைகட்டிச் சேவகம் செய்யும். அதற்கு பின்வரும் கவிதை சாட்சி,

“அடியே

நாளை ஆடிப்பெருக்கு

நானும் வருகிறேன்

காவிரித் தீரத்துக்கு

நீயும் மாநகர்க்

குழாய்த் தண்ணீர் எடுத்துக்கொள்”

காதலியைக் காவிரி ஆற்றுக்கு வரச்சொல்லும் கவிஞர்; மாநகர்க்குழாய் தண்ணீரை வாட்டர் பாட்டிலில் எடுத்துவரச் சொல்கிறார். எதற்காக இந்தப் புனைவு. அந்தக் காலத்தில் ஆடிப்பெருக்கென்றால் காவிரியில் வெள்ளம் கரைபுரண்டோடும், இன்றோ குடிக்கக்கூட காவிரியில் தண்ணீர் இல்லையாம்; சரி தண்ணீர் இருந்தால் குடிக்கத்தான் முடியுமா! ஆறெல்லாம் மாசு என்பதை ஓர் உள்ளுறையாகக் கொண்டுள்ளது இக்கவிதை. முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் சங்கக்கவி உத்தியான உள்ளுரைத்துச் சொல்லும் உத்தி நிறையவே காணப்படுகின்றன என்பது என் கருத்து. முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் உள்ளுறை இறைச்சி எனும் தலைப்பில் தமிழ் ஆய்வு மாணவர்கள் ஆய்வு செய்யலாம்; இன்னும் கூடுதலாகச் சங்ககாலக் கவிதைகளுடன் ஒப்பீடு செய்தும் ஆய்வு மேற்கொள்ளலாம்.

முத்தமிழ் விரும்பியின் கவிதை நடை தனித்த பாணியுடையது என்று முன்பு சொன்னேன். இதற்குச் சான்றாக அமைகிறது இக்கவிதை,

"பதில்களும்
பாவனைகளும்
சில பொழுதுகளில்
மௌனம் கூட
திணை மயக்கம்தான்"

திணை மயக்கம் எனும் சொல்லை தெளிவில்லாமல் குழம்பிய நிலையில் இருக்கும் காதலியின் மனநிலைக்கு குறியீடாக்கியிருக்கும் கவிஞரின் கவிதை உத்தி மிகச் சாதுர்யமானது. உண்மையைச் சொன்னால் "நீயேன் தேரின் கடையாணி சுழன்றோடும் பெருந்தேர்போல வெகுண்டெழுகிறாய்" என்பதில் வெகுண்ட மனநிலை கழன்றோடும் கடையாணி என்று படிமம் ஆக்கப்பட்டிருப்பது முத்தமிழ் விரும்பியின் கவிதையின் வெற்றிக்குச் சாட்சியாக அமைகிறது

மனமொத்த காதலர்களுக்குள் குழப்பம் வருகையில் அது; அவர்கள் மட்டுமே தெளிவுபடுத்திச் செயலாற்றிட வேண்டும்; இல்லையேல் குழப்பம் மேலும் குழப்பமாகிவிடும் என்பதே காதலின் உண்மை. இங்கே காதலில் குழப்பித் திரியும் காதலியின் மனநிலையை கவிஞர் முத்தமிழ் விரும்பி எருமை கலக்கிய ஊருணியை உவமையாக்குகின்றார். இல்லை உள்ளுறை ஆக்குகிறார் என்றே சொல்லலாம்.

"நீயும் நானும்
குழம்பித் திரிந்திருப்போம்
தெளிவற்ற கணங்கள்
என்றுமே
தெளிவை நோக்கி
நகர்த்துகையில்

எருமைகள் ஊர்ந்திடும்
நேற்றைய
ஊருணியில்
தெளிவதெப்போ?

நான் தமிழ்க்கவிதை மரபில் படித்தறியாத உவமை இது. இங்கே யார் எருமை என்ற கேள்வி வருகிறது. குழப்பம் விளைவிக்கும் ஊராரை எருமை என்கிறது இக்கவிதை. குழம்பிய ஊருணியிலா! நாம் தாகம் தீர்க்க முடியும் என்று கேட்க நினைக்கும் காதலன்.

''நாம் தாகம்

தீர்ப்பதெப்போ!

என்று காதலியிடம் அதிரடியாய் ஒரு கேள்வி எழுப்புகிறான். என் மீது குற்றம் கண்டாயா! யார் மீது இங்கு குற்றம் இல்லை. என் மீது மட்டும் குற்றம் கண்டுபிடித்துக் கொண்டே இருக்கிறாய். காதல் விருப்பத்தேர்வு. குற்றம் காண இங்கே இடமில்லையே! கவிஞன் பெற்ற தெளிவு காதலிக்கு இல்லை என்பதால்;

''யார் மீதும்
புகாரில்லை கண்ணம்மா

ஆனால் என்மீது
புகார்களுண்டு

என் மீது வருத்தங்களுண்டு
நான் ஒன்றும் கனவுகளுடன்   வாழ்பவனில்லை

தோற்றவனில்லை
ஆனாலும் வென்றவனில்லை

கரந்தை வெட்சி வாகைப் பூக்களைச்
சூடும் நிலையிலுமில்லை''

என்று இந்தக் காதலர்களின் உரையாடல் நீள்கிறது. இங்கே கரந்தை என்பது ஆநிரைமீட்டல், வெட்சி என்பது ஆனிரை கவர்தல், வாகை என்பது வெற்றி. இது தொல்காப்பியர் புறத்திணையில் தமிழரின் போர் மரபிற்காகச் செய்துள்ள இலக்கண வரையறை. வெட்சி எனும் புறத்திணை குறிஞ்சி எனும் அகத்திணைக்கு புறமாகி வருமென்பது தமிழ் இலக்கண மரபு. குறிஞ்சி என்ற திணையின் உரிப்பொருள்

அதாவது அகஒழுக்கம் ‘‘புணர்தலும் புணர்தல் நிமித்தமும்’’ ஆகும். புணர்தல் என்பது காதலர்களின் மனம் ஒன்றுபடுதல். இது களவுக் காலத்தில் நிகழும் அக ஒழுக்கம். நம் காதல் வெற்றியில் முடிய வேண்டும். அதனால் நான் வாகைப் பூவைச் சூட விழைகின்றேன். வாகை என்றால் வெற்றி என்று பொருள். வாகைக்கு பாலை எனும் அகத்திணை புறமாகும். பாலை என்பது பிரிவும் பிரிவின் நிமித்தமாகும். வா தலைவி உன் பெற்றோரைப் பிரிந்து; நாம் நம் காதலில் வாகை சூடலாம் என்ற குறிப்புப்பொருள் இந்தக் கவிதையில் நிரம்பி வழிகிறது. முத்தமிழ் விரும்பியின் கவிதையை ஒரே மூச்சில் படித்தால் எவருக்கும் பொருள் விளங்காது; சங்கச் செய்யுளைப் படிப்பதுபோல திரும்பத் திரும்பப் படித்தால் அது படிக்கப் படிக்க எல்லையில்லா வானம் போல பொருள் விரியும் கவிதைப் பாங்குடையது.

‘‘உன்னோடு உரையாடுதல்’’ என்ற இக்கவிதை நூல் கவிஞர் தன் காதலியுடன் உரையாடுதல் மொழியை ஒரு நெடும் பாட்டாக்கியுள்ளார்; இந்நெடும் பாடலில். காதலன் காதலியிடம் ரொம்பவே கெஞ்சுகின்றான். பெண் மிக மிகப் பேசா மடந்தையாய் இருக்கிறாள். இது ஒருவகையில் குறிஞ்சித் திணைப் பாடல் போலவே இருக்கிறது. ஆனால் வளமான குறிஞ்சியல்ல! முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்த பாலைக் குறிஞ்சியில் இப்பாடல் களம் அமைக்கப்பட்டிருக்கிறது. காதல் பூக்களின் சிநேகமாய் மலர்வதுண்டு; இல்லை முட்டலும் மோதலுமாய் மலர்வதுண்டு; இல்லை காதல் ஒன்றுமே பேசாமல் மலர்வதுண்டு; ஆமாம் காதலுக்குப் பேச்சு வேண்டுமென்பதில்லை வான்மறையாளன் சொல்லுவான். கண்கள் மட்டுமே போதும். ஏன் ஓரக்கண்ணு மட்டுமே போதுமானதுதான். ஆனால் யாருக்கு எது அமைகிறதென்பதில்தான் இருக்கிறது பெரும் விளையாட்டு. பேச்சே வராதவன் கூட காதலிக்க முடியும், காதலுக்குப் பேச்சு தேவையில்லைதான். காதலில் சொல்லாத சொல்லுக்குத்தான் விலை அதிகம். உரையாடலிலேயே காதல் உரையாடல்தான் மிகக் கடுமையானது. அங்கே பொய்தான் உண்மை. உண்மையெல்லாம் பொய். காதலில் என்ன பேசினாலும் சில நேரம் இனிக்கும், சிலநேரம் கசக்கும். அன்பு தம்பி முத்தமிழ் விரும்பியின் ‘‘உன்னோடு உரையாடுதல்’’ படிக்கப் படிக்க இனிக்கிறது.

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்ததா ??!!!

முனைவர் தேமொழி
சான் பிரான்சிஸ்கோ.

''எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது'' என்று தொடங்கி பகவத்கீதையின் சாரம் என்ற குறிப்புடன் ''கீதாசாரம் சுவரொட்டி"யில் இடம் பெறும் கருத்துகள் யாவும் ஓர் ஆன்மீகப் புனைவு அல்லது கட்டுக்கதை.

வேதங்களின் சாரம் உபநிஷத்துகள்; அந்த உபநிஷத்துகளின் சாரம் பகவத்கீதை. உபநிஷத்துகளின் சாரமான பகவத்கீதையை கண்ணன் மக்களுக்காக அருளிச் செய்தார் என்பது ஆன்மீக வாதிகள் கொண்டிருக்கும் ஒரு நம்பிக்கை. இவ்வாறாக பகவத்கீதை என்பதே எழுநூறு வசனங்களில் கொடுக்கப்பட்ட உபநிஷத்துகளின் சுருக்கமான சாரம் என்ற நிலை இருக்கையில், அந்த சாரத்திற்கும் சாரம் என்று கீழ்க்காணும்;

"எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது

எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையதை எதை இழந்தாய்,

எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?

எதை நீ எடுத்துக் கொண்டாயோ,

அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

எதைக் கொடுத்தாயோ,

அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ

அது நாளை மற்றொருவருடையதாகிறது

மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்.

இதுவே உலக நியதியும் எனது படைப்பின் சாராம்சமாகும்."

பதினைந்து வரிகள் கொண்ட சொற்றொடர்கள் மிகப் பரவலாக அறியப்படுகின்றன.

அப்துல் கலாம் அவர்கள் குடியரசுத் தலைவராக வேட்புமனு தாக்கல் செய்ததும் ஊடகவியலாளர்களுக்கு அது குறித்து அவர் அளித்த செய்தியில்;

"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது"

என்று தமது சமயச்சார்பற்ற உள்ளத்தை வெளிப்படுத்தினார்.



கீதையின் சுருக்கமாக கீதையின் இறுதியில் இரண்டே வசனங்களில் கண்ணனே கூறும் சாரத்திற்கும், கீதாசாரம் என அறியப்படும் இந்த 15 வரி சொற்றொடர்களுக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை என்றும்; பகவத்கீதையை முழுமையாகப் படித்தவர்கள், கீதாசாரம் சுவரொட்டியில் இருக்கும் வரிகள், கீதையில் எங்கே உள்ளன என்று தேடிப் பார்த்தால், அவை அங்கு இல்லை என்பதை உணரலாம். கீதாசாரத்தில் உள்ள கருத்துகளைக் கீதையிலிருந்து மறைமுகமாகக் கொண்டு வரலாம்; ஆனால் அவை கீதையின் நேரடி வாக்கியங்கள் அல்ல, கீதையின் சாரமும் அல்ல. இந்த கீதாசாரத்தை எழுதியவர் யார் என்பது யாருக்கும் தெரியாது என்கிறார் ஸ்ரீ கிரிதாரி தாஸ் (https://www.facebook.com/profile.php?id=100005426808787). மேலும் அவர்,

கீதாசாரத்தின் இந்த அழகிய வரிகளை ஒரு நல்ல கவிதையாக ஏற்றுக்கொள்ளலாம்; ஆனால் கீதாசாரமாக ஏற்க முடியாது. இதிலுள்ள கருத்துகள் கீதையின் சாரமும் அல்ல, கீதையின் தத்துவத்திற்கு ஒத்துவரக்கூடியவையும் அல்ல, கீதாசாரம் சுவரொட்டியில் உள்ள முதல் கருத்து, கீதைக்கு முற்றிலும் முரணானது என்பதில் துளியும் சந்தேகமும் இல்லை. என்கிறார்.

அனைத்தும் நன்மைக்கே என்பதைக் கீதையில் காண இயலாது.

"இவ்வுலகம் துன்பம் நிறைந்தது, தற்காலிகமானது." (பகவத்கீதை: 8.15) என்கிறது கீதை.

இவை ஒன்றுக்கு ஒன்று முரண் படும் கருத்துகள்.

தொடர்ந்து வரும் மற்ற வரிகளும் கீதை சொல்லும் பூர்வ ஜன்ம கர்ம வினைப்பயன் கருத்துக்கு மாறான கருத்துகளாகவே அமைந்துள்ளன என்கிறார் ஸ்ரீ கிரிதாரி தாஸ். அதாவது, புண்ணியம் செய்தோர் நற்பலன்களையும், பாவம் செய்தோர் துன்பத்தையும் அனுபவிக்க வேண்டும், இவ்வுலகிலுள்ள அனைத்தும் ஒவ்வொருவரின் கர்ம வினைப்படியே நடக்கின்றது என்பது கண்ணன் கீதையில் கூறும் தத்துவம். இவ்வுலகில் வாழும் அனைத்து உயிர்களும் கண்ணனைச் சரணடைய வேண்டும் என்பதே உண்மையான கீதாசாரம். என்பது இவர் வைக்கும் கருத்தாகும்.

திருவண்ணாமலை முனிவர் பகவான் ரமண மகரிஷி அவர்கள் பகவத்கீதையின் 700 வசனங்களில் 42 வசனங்களைத் தேர்ந்தெடுத்து, முழு கீதையின் சாரத்தையும் கீதாசாரம் என்று வழங்கியுள்ளார்.

கண்ணனின் கூற்றாகக் கீதை சாரத்தைக் கவிஞர் கண்ணதாசன் அவர்களும் மிகச் சுருக்கமாக கர்ணன் திரைப்படப் பாடலில் தந்துள்ளார்:

"மரணத்தை எண்ணிக் கலங்கிடும் விஜயா, மரணத்தின் தன்மை சொல்வேன்

மானிடர் ஆன்மா மரணமெய்தாது மறுபடிப் பிறந்திருக்கும்

மேனியைக் கொல்வாய் மேனியைக் கொல்வாய் வீரத்தில் அதுவும் ஒன்று

நீ விட்டுவிட்டாலும் அவர்களின் மேனி வெந்துதான் தீரும் ஓர்நாள்

என்னை அறிந்தாய் எல்லா உயிரும் எனதென்றும் அறிந்து கொண்டாய்

கண்ணன் மனது கல்மனதென்றோ காண்டீபம் நழுவவிட்டாய், காண்டீபம் நழுவ விட்டாய்

மன்னரும் நானே மக்களும் நானே மரம் செடி கொடியும் நானே

சொன்னவன் கண்ணன் சொல்பவன் கண்ணன் துணிந்து நில் தர்மம் வாழ

புண்ணியம் இதுவென்றிவ் வுலகம் சொன்னால் அந்தப் புண்ணியம் கண்ணனுக்கே

போற்றுவார் போற்றலும் தூற்றுவார் தூற்றலும் போகட்டும் கண்ணனுக்கே

கண்ணனே காட்டினான் கண்ணனே சாற்றினான் கண்ணனே கொலை செய்கின்றான்

காண்டீபம் எழுக நின் கைவன்மை எழுக இக்களமெலாம் சிவக்க வாழ்க!

பரித்ராணாய சாதூனாம் விநாசாய சதுஷ்க்ருதாம்

தர்ம சம்ஸ்தாபனார்த்தாய சம்பவாமி யுகே

[நல்லவர்களைக் காக்கவும், தீயவர்களை அழிக்கவும்,

தர்மத்தை நிலைநாட்டவும் நான் யுகந்தோறும் அவதரிக்கிறேன்]

கண்ணதாசன் (கர்ணன் - 1964)

கீதாசார சுவரொட்டியில் உள்ளவை பாபர் மசூதி இடிப்புக்குப்பின் அதை நியாயப்படுத்த ஆர் எஸ் எஸ்ஸால் பரப்பப்பட்ட வரிகள். ஆர் எஸ் எஸ்ஸால் உருவாக்கப்பட்ட எல்லா கோவில்களிலும் இவ்வரிகள் கீதாசாரம் என்ற பெயரில் எழுதப்பட்டிருப்பதாகவும் கருத்தொன்று மக்களிடையே இருப்பது தெரிகிறது.

சான்றாதாரம்:

1. கீதாசாரம் போஸ்டரும் கீதாசாரமும். ஸ்ரீ கிரிதாரி தாஸ். ஞான வாள். டிசம்பர் , 2012. https://tamilbtg.com/whatever-happened-it-happened-well-is-this-gitacharam/

2. கீதாசாரம் போஸ்டரும் கீதாசாரமும். ஸ்ரீ கிரிதாரி தாஸ். ஞான வாள். ஜனவரி 3, 2013

https://tamilbtg.com/what-is-real-gita-charam/

3. கீதாச்சாரம் யாரால் உருவானது?

https://ta.quora.com/கீதாச்சாரம்-யாரால்

4. ரமண மகரிஷி வழங்கிய பகவத் கீதை சாரம் - 42 வசனங்கள்

https://www.facebook.com/watch/?v=4881951441837476

ஆடி மாத வேளாண் வளமைச் சடங்குகள்

முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி
தமிழணங்கு இதழாசிரியர்
மொழிபெயர்ப்பாளர்,எழுத்தாளர், பதிப்பாளர்

வேளாண் வளமைச் சடங்கு [AGRO FERTILITY RITUAL] என்பது வேளாண் தொழில் செய்வோர் தமது வயல்களில் நல்ல விளைச்சல் வரவேண்டும் என்று நடத்தும் சடங்குகள் ஆகும். உலகெங்கும் இச்சடங்குகள் நடைபெறுகின்றன. இதில் மூடத்தனம் என்று எதுவும் கிடையாது. தங்கள் ஆசையை வெளிப்படுத்தும் செயல்பாடே சடங்கு ஆகிறது. விதைப்புக்கு வயல்களில் கூடி மகிழ்தல், வளர்த்திக்கு முளைப்பாரி விளைச்சலுக்கு காய்கறி கருவாடு சேர்த்த கூழ் ஊற்றுதல், கனிகளுக்கு முப்பழ சேவை என்று வேளாண் வளம் சார்ந்த சடங்குகளை முன் கூட்டியே ஆடி மாதத்தில் செய்து மகிழ்கின்றனர். வயலைப் போலவே மனித குலத்தின் விருத்திக்குக் காரணமான பெண்ணும் மகப்பேறு சார்ந்த விஷயங்கள் இம்மாதத்தில் சடங்காக நிகழ்த்தப்படுகிறது.

மண்ணும் பெண்ணும்

ஆடி மாதம் என்பது கதிரவனின் திசை மாறும் நிகழ்ச்சியையும் தென் மேற்கு பருவக் காற்று தொடங்கும் நிகழ்ச்சியையும் உள்ளடக்கியது. இக்காலத்தில் வயல்களில் விதைப்பு தொடங்குகிறது. விதைப்பு நல்ல பலனை விளைச்சலைத் தர வேண்டுமென்று வேளாண் குடியினர் செய்யும் வழிபாட்டு சடங்குகள் அம்மன் வழிபாடாக மலர்ந்துள்ளன. பெண் என்பவள் வளமையின் சின்னமாக இருப்பதால் தான் அவளது பெருமையைக் குறிக்கும் அம்மன் வழிபாட்டுக்கும் வணக்கத்துக்கும் உரியவள் ஆகிறாள். நிலம் விதைப்புக்குத் தயார் என்பதைக் குறியீடாகக் குறிக்கும் வகையில் அம்மன் [பார்வதி] பூப்படைந்த நாளாக ஆடி பூரம் கொண்டாடப்படுகிறது. [பெண்ணும் விதைப்புக்குத் தயார்]. நிலத்துக்குரிய பதிலியாக பெண்ணும் பெண்ணுக்குரிய பதிலியாக [substitute] அம்மன் விளங்குகிறாள்.

விதைப்பின் பலனறியும் முளைப்பாரி

விதைத்த பயிர் வளர்ந்து செழிக்க வேண்டும் என்பதை அறிய அம்மனிடமே முளைப்பாலிகை வளர்த்து வேண்டுகின்றனர். இது ஓர் அறிவியல் முயற்சி அல்லது பரிசோதனை. ஆடி மாத காலநிலையில் இருட்டில் வளர்க்கப்படும் பயிர் மஞ்சள் பூத்து நின்றால் அந்த ஆண்டு நல்ல மழை பொழியும் பயிர் செழிக்கும் என்பதற்கான முன்னோடி பரிசோதனை [pilot PILOT STUDYstudy] ஆகும்

முளைப்பாரி என்பது வழமைச் சடங்கு மட்டுமல்ல தம் வேளாண் குடியினரின் அறிவியல் அறிவின் எடுத்துக்காட்டு.

குழந்தை நலம்

வேளாண் மரபில் மண்ணுக்கு அளித்த முக்கியத்துவம் பெண்ணுக்கும் கொடுக்கப்பட்ட காரணம் அவர்களுக்கு மண்வளம் போலவே மனித வளமும் தேவைப்பட்டது. வயலில் உழைக்கவும் தமது நிலத்தைப் பிறர் அபகரிக்க படையெடுத்து வரும் போது போரில் நின்று வெற்றி பெறவும் வீர மைந்தர்கள் தேவைப்பட்டனர். எனவே பெண்ணின் அருமையும் மகப்பேறு காரணமாக உணரப்பட்டது. மகப்பேறுக்கு அடுத்து அக்குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்க்க வேண்டிய கடப்பாடு இவர்களுக்கு இருந்தது. தட்ப வெப்பம் மாறும் ஆடி மாதத்தில் அம்மை, கண் வலி, மணல்வாரி , அக்கி போன்ற நோய்கள் குழந்தைகளை அதிகம் தாக்கும் என்பதால் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அம்மனுக்கு விழா எடுத்து ஊரெங்கும் விதி எங்கும் வேப்பிலை தோரணம் கட்டி நோயத் தாக்குதலைத் தடுத்தனர். இதுவே அம்மனிடம் குழந்தை ஆரோக்கியம் வேண்டி நடத்தப்பட்ட சடங்குகள் ஆயின. நோய் தாக்கியவருக்கு அம்மன் காப்பு என்ற பெயரில் வேப்பிலை மஞ்சள் சேர்த்து அரைத்து கொடுத்து வந்தனர். வெப்பு நோய்கள் பெரியவர்களைத் தாக்கும் போதும் இந்த அம்மன் காப்பு என்ற அரு மருந்து நோய் தீர்த்தது. அம்மனுக்கு வளையல் அணிவித்து வளைகாப்புத் திருவிழா கொண்டாடும் நிகழ்வும் பெண்ணின் வளமையைப் பெருக்கும் வளமைச சடங்காகும். இதுவும் நாட்டில் குழந்தை நலம் வேண்டியே செய்யப்படுகிறது.

வானம்-ஆண், பூமி-பெண், மழை-வித்து

ஆடி மாதம் இங்கு நடக்கும் வேளாண் சடங்குகள் போல அல்லது ஜூன் 21 க்கு பிறகு ஜூலை 15 க்குள் ஒவ்வொரு நாட்டிலும் நாள் வேறுபட்டாலும் மேலை நாடுகளிலும் இந்த கொண்டாட்டங்களுக்கும் சடங்குகளும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. ஜூன் ஜூலை மாதங்களில் தொடங்கும் கோடை வேளாண்மை வளமைச் சடங்குகள் உலகெங்கும் சிற்சில வேறுபாடுகளுடன் நடக்கின்றன. உலகெங்கும் இச்சடங்குகள் நடப்பதற்கு மூல காரணம் பண்டைய காலத்தில் இருந்து மனிதர் வானத்தை ஆணாகவும் பூமியை பெண்ணாகவும் கருதி வந்த நம்பிக்கையின் தொடர்ச்சியே ஆகும். மழை பெய்வது பூமியின் விதைப்பாக்கக் கருதப்பட்டது. இதன் தொடர்சசியாகவே ஆரம்பத்தில் வானத்துத் தேவர்களின் வேந்தனான இந்திரன் ஆயிரம் விரைப் பைகள் கொண்டவனாக ‘ச்கஸ்ரமுஷ்கா’ என்று சமஸ்கிருதத்தில் அழைக்கப்பட்டான். அவன் முக்கியத்துவத்தைக் குறைக்க நினைத்த வைதீக மதங்களின் வளர்ச்சி இதை ஆயிரம் யோனியன் என்று பேர் மாற்றி அதற்கேற்ப புதிய கதையும் புனைந்தது. ஆக வானமும் வானத்தின் தேவனும் விதைப்பு சடங்குக்கு உரியவன் என்பது தெளிவாகிறது.

வானத்தைக் காளையாகவும் பூமியைப் பசுவாகவும் கருதி இவர்களுக்கு இடையே நடக்கும் திருமணத்தைப் பல நாடுகளிலும் தெய்வத் திருமணமாகக் [HEIROGAMHEIROGAMYHEIROGAMHEIRO] கருதுகின்றனர். இந்தத் திருமணத்தின் விளவிவு தான் நல்ல விளைச்சல் என நம்புவதால் இத்தெய்வங்களின் இணை சேர்க்கையாகவே வயல்களில் இணை சேர்க்கை சடங்கு ஆரமப காலங்களில் நடத்தப்பட்டு வந்தது. இப்போதும் கொண்டு நாட்டு பகுதியில் புணர்ச்சி நிலையில் சுடும்ண் சிலைகளைச் செய்து வயல்களில் வைக்கின்றனர்.

வேளாண்விளைச்சலும் கூழ் ஊற்றுதலும்

ஆதி காலத்தில் மனிதர்கள் காய் கறி கனிகள் நன்றாக விளைய வேண்டும் என்ற வேட்கையில் எதிர்பார்ப்பில் போலச் செய்தல் சடங்குகளை நிகழ்த்தினர். தாம் வேண்டுவதாய் அது நடந்து முடிந்தவாறு சடங்கு செய்தல் போலச் செய்தல் சடங்கு [IMITATIVEIMITATIVE RITUAL] எனப்படும். மழை வேண்டும் என்றால் மழை பெருகி நீர் வாழ்வன பெருகியது போல தவளை, மீன், நண்டு ஆகியவற்றை ஒரு பாத்திரத்தில் போட்டு வைப்பர், மழை பெய்வதால் நனைவதைப் போல ஒருவர் மீது ஒருவர் தண்ணிர் ஊற்றி மகிழ்வர். இதை போலவே ஆடி மாதத்திலும் விதைப்பின் பலன் சிறப்பாக இருக்க வேண்டும் பசி தீர உணவு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கேப்பையைத் திரித்து மாவாக்கி அதில் காய் கறிகளையும் கருவாட்டையும் [மீன் ஒரு வளமைச் சின்னம்] சேர்த்து கூழ் வைத்து கோயில்களில் எலலோருக்கும் இலவசமாக வழங்குகின்றனர். கனிகள் பழுக்கும் அக்காலத்தில் சிறப்பான விளைச்சலை அளித்த ஆண்டவனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கோயில்தோறும் முப்பழ சேவை நடைபெறுகிறது. முப்பழ அபிஷேகம் நடைபெறுகிறது.

விதைப்பும் கருத்தரிப்பும்

வயல் வெளிகளில் நடக்கும் விதைப்பைப் போலவே மனுக்குலத்தில் நடக்கும் கருத்தரிப்பும் ஆடி மாத காலத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. ஆடி மாதத்தில் இந்தியாவில் புது மணமக்களைப் பிரித்து வைக்கிற மரபு உள்ளது. ஒரு வீட்டில் மாமியாரும் மருமகளும் ஒருவர் முகத்தில் ஒருவர் விழிக்க கூடாது என்று சொல்லி வட நாட்டில் மருமகளைத் தாய் வீட்டுக்கு அனுப்பி விடுவர். தென்னாட்டில் ஆடி மாதத்தில் கருவுறுதல் கூடாது என்று மணமகளை தாய் விட்டுக்கு அனுப்பி வைப்பர். ஆனால் மேலை நாடுகளில் இந்த கோடை காலத்தில் வேளாண் பணிகளைத் தொடங்கும் முன்பு MAYஒரு கம்பம் நாட்டும் அதனைச் சுற்றிலும் ஆணும் பெண்ணும் ஆடிப் பாடும் மரபு காணப்படுகிறது. இந்தக் கமபத்தை MAYMAY POLE என்பர்.

மேலை நாடுகளில் குழந்தை பேறு வளமைச் சடங்குகள்

மேலை நாடுகளில் கற்கள் பெண்களைக் கருவுறச் செய்யும் ஆற்றல் பெற்றவை என்பதால் கல்லின் முன் நின்று ஆடிப்பாடி கூடுவதாக நம்புகின்றனர். ச்ரோம்லேக், மென்ஹிர் என்று அழைக்கப்படும் கற்கள் முன்பு ஆண் பெண் சேர்க்கை நடைபெற்றால் பிள்ளைப்பேறு இன்றி பல ஆண்டுகள் இருந்த பெண் கூட கருத்தரிப்பாள் என்ற நம்பிக்கை உண்டு. இவற்றில் க்ரோம்லே அல்லது க்ரோம்லேக் என்பது கற்கால மனிதர்கள் இரண்டு மூன்று கற்களை நட்டு வைத்து அதன் மீது ஒரு படுக்கைக் கல்லைக் கிடத்தி வைத்த ஒரு கல்வீடு போன்றது. மென்ஹிர் என்பது லிங்கத்தின் பானம் போன்று மூன்று நான்கடி உயரத்தில்

மனிதர்களால் பழங்கால நட்டு வைக்கப்பட்ட கற்கள் ஆகும். எகிப்திலும் கோடேஷ் கோயில்களில் அங்கெ உள்ள கூர்மையான கல்லின் மீதமர்ந்தால் பெண்ணுக்கு குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. இங்கிலாந்தில் ஸ்டோன்ஹெஞ் என்ற இடத்தில் வட்டமாக குத்துக்கற்கள் பல நடப்பட்டிருக்கும் அங்கு இளைஞர்கள் சென்று ஆடிப் பாடி மகிழ்வர். தென் அமெரிக்காவில் ஒரே கல்லாலான குத்துக் கற்கள் இருக்கும் இடத்துக்கு போய் ஆண்களும் பெண்களும் ஆடிப்பாடி மகிழ்வதை ஒரு சடங்காகக் கொண்டாடி வருகின்றனர். இந்த இடத்தை *GATE OF THE SUN STONE* என்பர். கோடைகாலத்தில் கருவுறுதலை நல்லதென மேலை நாட்டார் கருதினர். நம் நாட்டில் இக்கருத்து ஆடி மாதத்தில் இல்லாமல் ஆவணி மாதத்தில் திருமணங்கள் நடத்தப்பட்டு அதன் பின்னர் நடந்தது. ஆடியில் வயலில் மட்டுமே விதைப்பு நடந்தது.

நிறைவு

ஆடி மாதம் உலகெங்கும் விதைப்பு வேளாண்மை தொடர்பான வளமைச் சடங்குகள் நடைபெறுகின்றன. அது போல இங்கும் விதைப்பு விளைச்சல் தொடர்பான சடங்குகள் மண்ணுக்கும் பெண்ணுக்கும் நடத்தப்படுகின்றன. பெண் நலம் *man* நலம் சார்ந்தே மனித நாகரிகம் தன் சிறப்பை மதிப்பிடுகிறது தன ஆக்கிரமிப்பை அதிகாரத்தை நிலை நிறுத்துகிறது. எனவே விதைப்பு மற்றும் கருத்தரிப்பு என்ற அடிப்படையில் கதிரவன் திசை திரும்பும் வேளையில் பருவ மலை தொடங்கும் காலத்தில் சில முக்கிய நிகழ்வுகளாக இவ் வேளாண் வளமைச் சடங்குகள் நடைபெறுகின்றன.

பொருளாதாரப் புதிர்கள்

முனைவர் ச.அய்யம்பிள்ளை,

மேனாள் பேராசிரியர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி



தன்னைச் சுற்றி நடந்துகொண்டு இருப்பதை அறிய, புரிய ஆர்வம் உள்ளவர்களுக்கு, பொதுவாகக் குழந்தைகளுக்கு, நல்ல மாணவர்களுக்கு, அன்றாடம் அதிக வினாக்கள் வந்துகொண்டே இருக்கும் என்பது இயல்பே. பல சமயங்களில், அவர்கள் திருப்தி அடையும் அளவிற்கு சரியான பதில் கிடைக்காமல் போனதையும், போவதையும் நான் கண்டிருக்கிறேன்; போதுமான நேரம், இடம் கிடைக்காததால், நானும் அவர்கள் புரியும் அளவிற்குச் சரியான பதில் அளிக்க முடியாமல் போனதும் உண்டு. அவற்றுள், நான் நீண்டகாலமாக நேசித்து, வாசித்து, யோசித்து, பேசி, படித்து, எழுதிவரும் பொருளாதாரம் தொடர்பான குறிப்பிட்ட சில வினாக்களைக் கீழே தந்துள்ளேன். அவற்றை அடுத்து, சமீபத்தில் (ஜுலை 2025) ஊடகங்களில் எழுதப்பட்டு, பேசப்பட்டு வரும் அடிப்படையான வினாவிற்கு சற்றே விரிவான விளக்கத்தினையும் கொடுத்துள்ளேன்.

*நம் அரசின் நிதிநிலை அறிக்கையில் பற்றாக்குறை வரும்போதெல்லாம், பணம் தேவைப்படும்போதெல்லாம், நம் மைய வங்கி **(Reserve Bank of India)** ஏன் அதிகமாகப் பணம் அச்சடிக்கக் கூடாது?*

நாம் வாங்கியுள்ள கடனுக்கு, ஒவ்வொரு ஆண்டும் சுமார் பத்து இலட்சம் கோடி ரூபாய் வட்டி கொடுக்க வேண்டியுள்ளதே. பணத்தை அதிகமாக அச்சடித்து, நம் கடன்களை எல்லாம் அடைத்துவிடலாம் அல்லவா? பணத்தை அச்சடிக்கும் போது பின்பற்றவேண்டிய வரன்முறைகள் யாவை?

ஏன் நம் பணத்தின் மதிப்பு பிற (அமெரிக்கா, இங்கிலாந்து ....) நாடுகளின் பண மதிப்பைவிடக் குறைவாகவே உள்ளது? அத்தோடின்றி, மேலும் மேலும் சரிந்துகொண்டே செல்கிறது?

எவ்வளவு பணத்தாள்கள் அச்சிட வேண்டும் என யார் முடிவு செய்வது?

கேட்போருக்கு எல்லாம் பணத்தையும் கடனையும் வங்கிகளால் எவ்வாறு கொடுக்க முடிகிறது?

ஏன் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்ந்துகொண்டே செல்கிறது? சில சமயம் விலைகள் அதிகரித்துக்கொண்டு இருப்பதாக, நாம்,

பொதுமக்கள் உணரும்போதும், பணவீக்க வீதம் குறைகிறது என அரசு அறிவிக்கிறதே! அது எப்படி?

பணவீக்கம் / பணவாட்டம் எவ்வாறு உருவாகின்றன? அவை எப்படி அளவிடப்படுகின்றன? அவற்றிக்கான காரணங்கள், அவற்றின் விளைவுகள் யாவை? சமூகத்தில், பொருளாதாரத்தில் பல நிலைகளில் உள்ள மக்களை அது எவ்வாறு பாதிக்கிறது? அதை மக்கள் எவ்வாறு எதிர்கொள்கிறார்கள்? இவற்றைக் கட்டுப்படுத்துவதில் அரசு மற்றும் வங்கிகளின் பணிகள் யாவை?

உலகப் பணச் சந்தையில், இந்தியப் பணத்தின் மதிப்பு, வட்டி வீதம், பணவீக்க வீதம், தேசிய வளர்ச்சி வீதம், நிதிப் பற்றாக்குறை வீதம், முதலீடு வீதம்.... போன்றவற்றிக்கு இடையே உள்ள உறவு எப்படிப்பட்டது? அவை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன? கட்டுப்படுத்தப்படுகின்றன?

நம்முடைய தேசிய உற்பத்தியை மட்டும் அதிகரித்தால் (இப்போது பேசப்படுவதைப்போல), நாம் வல்லரசு நாடாக ஆகிவிட முடியுமா? நம் நாடு என்றாவது ஒரு நாள் வல்லரசு ஆக முடியுமா?

உயிர் வாழத் தேவையே இல்லாத (உண்டால் இறப்பைத் தருகிற) வைரத்தின் விலை, உயிர் வாழ அவசியமான தண்ணீர், உணவுப் பொருள்களின் விலையைவிட அதிகமாகவே உள்ளது? ஏன்? அது எப்படி?

இயற்கை வளங்கள் மிகக் குறைவாகவே உள்ள நாடுகள் (உம். ஜப்பான்) இயற்கை வளங்கள் (தண்ணீர், தங்கம், வைரம், நிலக்கரி, ஆறுகள், காடுகள்...) மிகுந்துள்ள ஆப்பிரிக்க, ஆசிய, தென் அமெரிக்க நாடுகளைவிடப் பொருளாதார

வளர்ச்சியில் சிறந்து விளங்குகின்றன. அது எப்படி? இந்தியாவிற்குள்ளும், மாநிலங்களுக்கு இடையே இதே போன்ற முரண்பாடான நிலைமை இருக்கிறதே; அது என்? தமிழகத்திற்குள்ளேயும் காவிரி பாய்கின்ற, நெற்களஞ்சியம் என அழைக்கப்படுகிற, கோயில்கள் அதிகம் உள்ள தஞ்சாவூர் பகுதியைவிட, தண்ணீரையும் வயல் வெளிகளையும் அதிகமாகக் காண முடியாத கோயமுத்தூர் பொருளாதரத்தில் சிறந்து விளங்குகிறதே! அது எப்படி? உலகிலேயே அதிக இயற்கை வளங்களைக் கொண்டுள்ள (ஆப்பிரிக்க, ஆசிய, தென் அமெரிக்க) நாடுகளில் அதிகமான அளவிற்கு வறுமை தாண்டவமாடுகிறதே! அது எப்படி?

*திடீர் திடீர் என, சில நாடுகளில் பொருளாதாரச் சிக்கல்கள் எப்படி வருகின்றன? உலகத்திலேயே உயர்ந்த நாடாகக் கருதப்படுகிற அமெரிக்காவில் **2007-08**ல் எப்படிப் பொருளாதாரச் சிக்கல் வந்தது? அது எப்படி சரி செய்யப்பட்டது? வேகமாக வளர்ந்துவந்த, தென்கிழக்குச் சிங்கங்கள் எனப் பாராட்டப்பட்ட, ஆசிய நாடுகள் திடீரென ஒரே நாளில் **(June 30, 1997)** எப்படி பொருளாதாரச் சரிவுக்குள் மாட்டிக்கொண்டன? அவை எப்படி மீண்டு வந்தன? அதுபோல நம் நாட்டிலும் நடக்குமா?*

கல்வியிலும், நோபல் பரிசு பெறுவதிலும், அறிவியலிலும், ஆராய்ச்சியிலும், தொழில் நுட்பத்திலும், தலைவீத வருவாயிலும் உயர்ந்து விளங்குகிற அமெரிக்காவில், ஏன் சமூகக் குற்றங்கள் மலிந்து கிடக்கின்றன? கல்வி நிலையங்களில், குறிப்பாகப் பள்ளிகளில், வகுப்பறைகளில் துப்பாக்கிச் சூடுகள் நடக்கின்ற செய்தியை அடிக்கடிக் காண முடிகிறதே! அது எப்படி?

***1991**ல், நம் ஒன்றிய அரசு, புதியப் பொருளாதாரக் கொள்கையை (தனியார்மயம், தாராளமயம், உலகமயம்) நடைமுறைப்படுத்தியதற்கான காரணம் என்ன? அதனால் என்னென்ன மாற்றங்கள், விளைவுகள், எங்கெங்கு நிகழ்ந்தன?*

*இந்தியப் பொருளாதாரத்தை நிர்வகிப்பதில் உலக வங்கி **(World Bank),** பன்னாட்டு நிதியம் **(International Monetary Fund),** உலக வர்த்தக அமைப்பு **(World Trade Organisation)** போன்ற அமைப்புக்களின் பங்கு என்ன? அவை ஏன், எப்படி உருவாகின?*

நம் விவசாயிகளுக்கு ஒரு விடிவு காலம் வருமா? ஏன் கிராம மக்கள் விவசாயத்தை விட்டுவிட்டு நகர்ப்புறம் நோக்கித் தொடர்ந்து பயணித்துக்கொண்டே இருக்கிறார்கள்? ஏன் விவசாய நிலங்கள் பிற பயன்பாடுகளுக்குப் பயன்படுத்துவது அதிகரித்துக்கொண்டே உள்ளத்து?

பொருளாதார வளர்ச்சியை மட்டும் அடைந்தால் போதுமா? வருமானப் பகிர்வு, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், கல்வி, உடல்நலம், உற்பத்தித் திறன், சுற்றுச்சூழல், வேலைவாய்ப்பு, தலைவீத வருமானம் ஆகியவற்றைப் பற்றி நாம் யோசிக்க வேண்டாமா? வறுமையும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும், பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலைமையும் ஏன் நம் நாட்டில் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கின்றன?

நேர்முக, மறைமுக வரிகளும் அவற்றில் கொண்டுவரப்படும் மாற்றங்களும் எவ்வாறு பலதரப்பட்ட மக்களைப் பாதிக்கின்றன?

இவை தவிர, சமீபத்தில் **(Rahul Menon, What is the state of inequality in India?, The Hindu, July 13, 2025, p.13; Ram Singh, Indian inequality and the World Bank's claim, The Hindu, July 19, 2025, p.8)** ஒரு பெரிய சர்ச்சை ஊடகங்களில் ஓடிக்கொண்டு இருக்கிறது. அது பற்றிக் கொஞ்சம் யோசிப்போமா?

சர்ச்சை என்னவெனில், பொருளாதார ஏற்றத்தாழ்வு மிகக் குறைவாக உள்ள ஐந்து நாடுகளுக்குள் ஒன்றாக இந்தியா உயர்ந்துவிட்டது என இந்தியாவைப் புகழ்ந்து உலக வங்கி ஓர் அறிக்கையினை **(India Poverty and Equity Brief: April 2025)** வெளியிட்டது. ஏதோ சில தனி நபர்கள், ஏதாவது கூறினால், கண்டுகொள்ளாமல் விட்டுவிடலாம். உலக வங்கியே கூறும்போது அதைக் குறை கூறலாமா? அதில் உண்மை இல்லாமல் இருக்குமா? என்பதே பலரின் ஐயப்பாடு. இது எந்தளவுக்கு உண்மை என்று பலர் வினாக்கள் தொடுக்க ஆரம்பித்துவிட்டனர். [அதைத் தவறு என்று கூறுபவர்கள் தேசப்பற்றே இல்லாதவர்கள் என்று கூடச் சிலர் எழுதினர். குறைகள் இல்லாத நாடு, சமுதாயம், மனிதர்களைக் காண முடியுமா? குறைகளைக் கூறுபவர்கள் குற்றவாளிகளா? எல்லா சூழ்நிலைகளிலும் புகழ்ந்து கொண்டே இருப்பது சரியா, நல்லதா? "நகுதல் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண் மேற்சென்று இடித்தல் பொருட்டு" (குறள்:784) என்று வள்ளுவர் கூறி உள்ளாரே!]

பொருளாதார ஏற்றுத்தாழ்வு என்பது, நுகர்வு, வருமானம் மற்றும் சொத்துக்களில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை உள்ளடக்கியது. ஆனால், உலக வங்கி பேசியுள்ளது நுகர்வில் உள்ள ஏற்றத்தாழ்வு பற்றியதே. மற்ற இரு (வருமானம், சொத்து) ஏற்றத்தாழ்வுகள் பற்றி இங்கு பேசப்படவில்லை. நுகர்வில் ஏற்றத்தாழ்வு குறைந்தது போலத் தோன்றியதற்குக் காரணம் புள்ளிவிவரங்களைத் தவறாகப் பயன்படுத்தியதே என்கின்றனர் ஒரு சாரார். ஏழை மக்களுக்கு அரசு அளித்த மானியம் மற்றும் உதவித்தொகைகள், பொருள்கள் ஆகியவற்றை ஏழை மக்களின் நுகர்வுடன் சேர்த்து விட்டனர் என்பதும், செலவந்தர்கள் பயன்படுத்தும் பல நுகர்வுப் பொருள்களை அவர்களின் நுகர்வோடு சேர்க்கவில்லை என்பதும், இவ்வாறு செய்ததால், ஏழை-

பணக்காரர்களுக்கு இடையே உள்ள இடைவெளி குறைந்துவிட்டது என்பதும் ஒரு சாராரின் வாதம்.

நம் நாட்டில், அரசு, ஏழை மக்களுக்கு ஒதுக்கும் நிதி முழுக்க ஏழைகளுக்குச் செல்கிறது என்று கூறமுடியுமா? இடைத்தரகர்கள் எத்தனையோ பேர் இருக்கின்றனரே! அவர்கள் எடுத்துகொண்டது போக மீதி தானே ஏழை மக்களுக்குப் போய்ச் சேருகிறது. எனவே, மேலே கூறப்பட்ட புள்ளிவிவரங்கள் தவறாக, ஏழைகளின் நுகர்வுச் செலவை அதிகப்படுத்தியும், செல்வந்தர்களின் நுகர்வுச் செலவைக் குறைவாக்கியும் காட்டி, நுகர்வு ஏற்றத்தாழ்வு குறைந்துவிட்டது என்பதுவே வாதம். இக்கணிப்பால், சரியாக உண்மை நிலையைக் காட்ட இயலாது என்பது அவர்களின் நிலை.

நம் நாட்டில் உணவுப்பொருள்கள், காய்கறிகள், பழங்கள், பால், மீன், இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தி கடந்த எழுபத்து ஐந்து ஆண்டுகளில் எவ்வளவோ உயர்ந்து, உலகில் முதல் மற்றும் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளோம் நாம் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவற்றை எல்லாத் தரப்பினரும் சமமான அளவிற்கு வாங்கி இருப்பார்களா? வாங்கி இருக்க முடியுமா? ஏழைகள் வாங்கும் அளவிற்கு அவர்களுக்கு, அறிவோ, பணமோ இல்லையெனில், அவை அவர்களுக்குத் தேவையான அளவு கிடைக்குமா? கிடைத்துள்ளதா? என்று கேட்டால், இல்லை என்பதே பதில்.

நம் சமூக, அரசியல், பொருளாதார அமைப்பில், பொருளாதாரத்தில் மேலே உள்ள மக்கள் அத்தியாவசியப் பொருள்களைத் தேவைக்கு அதிகமாக வாங்குவதை, வீணடிப்பதைத் தடுக்க இயலாது. மறுபுறம், மதுவுக்கும் போதைப் பொருள்களுக்குமே அதிகப் பணத்தைச் செலவு செய்யும் ஏழை மக்களால், தேவையான அளவுகூட பொருள்களை, பணிகளை வாங்க இயலாது. இப்படி

இருப்பதால், அதிக உற்பத்தி மட்டும், வறுமையைப் போக்கிவிடாது; ஏற்றத்தாழ்வைக் குறைத்துவிடாது. சரியான பகிர்வும் அவசியம்.

செல்வந்தர்களைப் போல, ஏழை மக்களால் சேமிக்கவோ முதலீடு செய்யவோ இயலாது. எனவே, செல்வந்தர்களுக்கு சொத்து அதிகமாகச் சேர்ந்து கொண்டே இருக்கும்; மேலும், அதன் மூலம் வருமானம் பெருகிக் கொண்டே இருக்கும். ஆகையால், செல்வந்தர்களின் (கணக்கில் காட்டப்படாத) நுகர்வும் அதிகமாகவே இருக்கும். நம் நாட்டைப் பொறுத்தவரை, நுகர்வு பற்றி ***(Household Consumption Expenditure Survey, 2022-23)*** ஓரளவே புள்ளிவிவரங்கள் கிடைக்கின்றன; அவற்றின் நம்பகத்தன்மையும் மிகமிகக் குறைவு; வருமானம் மற்றும் சொத்து பற்றிய புள்ளிவிவரங்கள் கொஞ்சம்கூட இல்லை. எனவே, வருமானம், சொத்து பற்றிய ஆய்வுகளுக்கு வழியில்லை.

பல உலகளாவிய சிறந்த ஆய்வு நூல்களை எழுதியுள்ள, பாரிஸ் ஸ்கூல் ஆப் எகோனோமிக்ஸ் ***(Paris School of Economics)*** நிறுவனரான தாமஸ் பிகெட்டி ***(Thomas Piketty)*** என்பவரிடம் உலக நாடுகளைப் பற்றிய ஏராளமான புள்ளிவிவரங்கள் ***(World Inequality Database: WID)*** சில நூறு ஆண்டுகளுக்குக் கிடைக்கின்றன. அந்தத் தரவுகளின்படி, வருமானம் மற்றும் சொத்துக்களின் ஏற்றத்தாழ்வு விகிதம் ***(Gini Concentration Ratio: GCR)*** நம் நாட்டில் முறையே ***2000*** இல் ***0.47*** மற்றும் ***0.70*** ஆக இருந்தது; அது ***2023***இல் ***0.61*** மற்றும் ***0.75*** ஆக உயர்ந்துள்ளது. இது அநேகமாகப் பல நாடுகளிலும் நடந்துள்ளது. இதுபற்றி அவ்வளவாக வாதங்கள் எழவில்லை; உண்மையாக இருக்கலாம் என ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

சரி, இந்த ஏற்றத்தாழ்வுகள் இருந்தால் என்ன பிரச்சனை? என்பது பலரின் வினாக்கள். இதனால், எளிதாகப் புலப்படாத ஏகப்பட்ட பிரச்சனைகள் எழுகின்றன என்பதே உண்மை. மிகக் குறிப்பாக, இந்த ஏற்றத்தாழ்வுகள்,

அரசாங்கத்தையும் அங்காடிகளையும் ஏழை மக்களையும் தவறாக வழிநடத்தும். மிக நன்றாகப் படிக்கும் மாணவர்களும் படிப்பில் மிகவும் பின்தங்கி இருக்கும் மாணவர்களும் ஒரே வகுப்பறையில் இருந்தால், பாடம் நடத்துவது ஆசிரியர்களுக்கு எவ்வளவு சிரமமாக இருக்குமோ, அது போலத்தான் ஏற்றத்தாழ்வுப் பிரச்சனைகளும்.

மேலே உள்ள ஒரு சதவீத மக்கள், கீழே உள்ள ஐம்பது சதவீத மக்களிடம் உள்ள சொத்துக்களையும், வருமானத்தையும் நுகர்வுப் பொருள்களையும் கொண்டிருந்தால் எப்படி இருக்கும்? ஏழை மக்களின் வாழ்வினைச் சிறப்பிக்க அரசு கொண்டுவரும் திட்டங்களை, செல்வந்தர்கள் வீண், பண விரயம் என்பார்கள்; ஏழைகளின் வாக்குகளைப் பெறவே இப்படியான திட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன என்பார்கள். மறுபுறம், அரசு செய்ய வேண்டிய பணிகளை செல்வந்தர்களே ஏலம் எடுத்து, செய்து அதிகப் பணம் சம்பாதிக்கிறார்கள் என்று ஏழைகள் அரசைக் குறை கூறுவார்கள். **1950**க்கும் **1970**க்கும் இடையே செய்ததைப்போல, பொதுவான வளர்ச்சிப் பணிகளை அரசு மேற்கொண்டால் செல்வந்தர்களே அதிகப் பலனை அடைவார்கள். இது நம் நாட்டில் நடந்தது. அந்த கால கட்டத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் கூடின; ஆளும் கட்சிகள் மாறின. பின்னர், **1970**களில், ஏழை மக்களுக்கு நேரடியாகப் பலன் சேரும்படித் திட்டங்கள் தீட்டப்பட்டன. அதனால் விலைவாசிகள் உயர்ந்தன; செல்வந்தர்கள் தம் பணத்தை வெளிநாட்டு வங்கிகளுக்குக் கடத்தினர்; தனியார்மயத்தை வலியுறுத்தினர். பின்னர், வேறு வழியின்றி அரசு சிறிது சிறிதாகத் தன் நிலையிலிருந்து பின்செல்ல ஆரம்பித்தது; தனியார் கல்வி, மருத்துவ நிலையங்கள் வளர்ந்தன; இயற்கை வளங்கள் செல்வந்தர்களால் சுரண்டப்பட்டன; இப்போது, அத்தியாவசியப் பொருள்களும் (குடி தண்ணீர்), பணிகளும் (ஆரோக்கியம், சுகாதாரம்) பெற ஏழை மக்கள் அதிகம் செலவு செய்யவேண்டும்; இல்லையெனில் ஒதுங்கிவிட வேண்டும்.

அடுத்து, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகமாக இருந்தால், அங்காடியிலும் செல்வந்தர்களின் ஆக்கிரமிப்பு அதிகரிக்கும். அவர்கள் எதற்கும் அதிக விலை கொடுக்கத் தயாராக இருப்பர்கள்; ஆனால் ஏழை மக்களோ, அவ்வளவு பணம் செலவு செய்ய முடியாமல் விலகிவிடுவார்கள். அனாவசிய (தங்கம், வைரம், போதைப் பொருள்கள் போன்ற) பொருள்களின் அங்காடியிலிருந்து ஏழைகள் விலகிவிட்டால் தவறில்லை; ஆனால், இன்று

கல்வியும் மருத்துவச் சேவைகளும் (ஏன், பிராண வாயுவும், தண்ணீரும் கூட) அங்காடிப்படுத்தப்படுகின்றன. இவற்றையும் செல்வந்தர்கள் தேவைக்கு அதிகமாக வாங்கி வீணடிக்கலாம் (வீணடிக்கிறார்கள்); ஏழைகள், இவற்றை வாங்க இயலாமல் நுகர்வைக் குறைத்துக் கொள்ளலாம்; குறைத்துக்கொள்கிறார்கள். வசதி உள்ளவர் வைத்தது எல்லாம் சட்டம் ஆகிறது; ஏழைகள் எல்லாம் பாவம் செய்தவர்களாகவும், முட்டாள்களாகவும் சித்தரிக்கப்படுகிறார்கள்.

அடுத்து, தாழ்வு மனப்பான்மையைக் கொண்டுள்ள ஏழைகள் செல்வந்தர்கள் போல அனாவசியச் செலவுகள் செய்து, அந்தஸ்தில் உயர்த்திக் காட்ட முற்படலாம். அப்படி முயன்றால் என்னாகும்? புலியைப் பார்த்து, பூனை தன் உடலைக் கீறிக் கோடுகள் போட்டுக்கொள்ளும் கதையாக ஆகிவிடும் அல்லவா? இன்று அநேக ஏழை மக்கள் செல்வந்தர்களைப் போல வாழ ஆரம்பித்து, கடன்கள் வாங்கி, சிக்கல்களில் மாட்டிக்கொண்டு சீரழிவதை ஊடகங்கள் தொடர்ந்து தெரிவித்துக்கொண்டுள்ளன.

இவ்வாறாகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஏகப்பட்ட சிக்கல்களை விளைவிக்கும். இது நம் நாட்டில் நடந்துகொண்டுள்ளது. சரி, இதிலிருந்து மீள முடியுமா? முடியும். ஆனால், செல்வந்தர்களையே நம்பி, அவர்களின் பணத்தையும் பலத்தையுமே நம்பி, அரசியல் நடத்தி, தேர்தல்களில் வெற்றி பெற்று, அரசு அதிகாரங்களைப் பெறும் நிலைமை நீடிக்கும்போது, எப்படி ஏற்றத்தாழ்வுகள் குறையும்? ஏழ்மை இருந்தால்தான், செல்வந்தர்களுக்குக் குறைவான கூலிக்கு (அடி) ஆட்கள் வேலைக்குக் கிடைப்பார்கள்; ஏழ்மையை ஒழிக்கத் திட்டங்கள் தீட்ட முடியும்; அவற்றின்மூலம் பணம் சம்பாதிக்க முடியும். தம் ஏழ்மையைக்கூடப் புரிய இயலாத நிலையில் ஏழைகள் இருக்கும்போது, அவர்களை யாரால் காப்பாற்ற இயலும்? அவர்களின் அந்த இயலாமையைப் போக்குவதற்கு யாரேனும் வந்தால், வறுமை ஒழியும், ஏற்றத்தாழ்வுகள் குறையும். யார் வருவார்? யாரேனும் வருவார் என்று நம்புவோம். நம்பிக்கையே நமது கை.

கங்கை கொண்டான்

மாரிராஜன்

சோழர்ஆய்வுமையம், காரைக்கால்

இராஜேந்திரன் கங்கைவரை படையெடுத்து சென்றதற்கு என்ன ஆதாரம்.? அவரது மெய்கீர்த்தி வரிகளைத்தவிர கல்வெட்டு ஆதாரங்கள் உண்டா.?

குறிப்பாய் வடஇந்தியாவில் இராஜேந்திரன் கல்வெட்டு உண்டா..? கங்கைகொண்டான் என்பதற்கு என்ன சான்று.? எவ்விடத்தில் கங்கை நீர் எடுத்தாராம்.?

கங்கை கொண்ட சோழபுரம்

The City of the Chozha who Conquered the Ganga.

இதெல்லாம் நடக்கவேயில்லை, இதெல்லாம் கற்பனை என்பவர்கள் இன்றும் தமிழ்நாட்டில் எழுதுகிறார்களாம்.

இவர்கள் கேள்விக்கு இதோ பதில்...

இராஜேந்திரனின் மெய்கீர்த்தியில் காணப்படும் கங்கைப்படையெடுப்பில் அவர் வென்ற நாடுகளின் பட்டியல்..

1. சக்கரக்கோட்டம்.

இன்றைய சட்டீஸ்கர் மாநிலத்தில் உள்ள சித்திரக்கூடா என்னும் நகரம்..

2.மதுரை மண்டலம்.

இன்றைய பீகார் மாநிலத்தில் உள்ள மதுரா.

3.நாமனைக்கோனை.

இன்றைய ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள ஒரு பகுதி என்று யூகிக்கப்படுகிறது.

4.பஞ்சப்பள்ளி.

ஒடிசா மாநிலம் புவனேஷ்வர்

அருகே உள்ள பஞ்சப்பள்ளி.

5.மாசுனிதேசம்.

சட்டீஸ்கர் மாநிலப்பகுதியாக இருக்கலாம்.

6. ஆதிநகர்.

ஒடிசா மாநிலத்தின் கான்ஜம் மாவட்டப்பகுதி.

7.ஒட்டவிஷயம்.

இன்றை ஒடிசா மாநிலத்தின் வடக்கு மற்றும் தெற்குப்பகுதி.

8.கோசலைநாடு.

இன்றைய ஜார்கண்ட் மாநிலம்.

9.தண்டபுத்தி.

மேற்குவங்காளத்தின் மேற்குப்பகுதி.

10. தக்கணலாடம்.

இன்றைய பீகாரின் ஒரு பகுதி.

11.வங்காளதேசம்.

இன்றைய அஸ்ஸாம் , பங்களாதேஷ் நாட்டின் ஒரு பகுதி..

மேற்கண்ட நாடுகளை இராஜேந்திரன் தலமையிலான சோழர் படை வென்றுள்ளாது..



No. 1352.

(*A.R. No.* 397 *of* 1896).

ON THREE STONES LYING NEAR THE KUNTI SHRINE, ON THE SAME HILL.

A.

1 ணையும் எதி
2 ஹேந்திர
3 ண்டு ஸ்ரீமஹேந்திர
4 த்தில் ஜயஸ்தம்பம் நாட்

B.

1 ஸ்ரீ மதுரா-
2 ந்தக ராஜேந்த்ரசோழ-
3 ப்பல்லவரையன் ராஜராஜ-
4 மாராயன் மஹேந்த்ரபர்வ[தி*]த்து கொ-
5 ண்டான் வி[ரா]ங்கு[சமும்] விட்டி
6 வாரணமல்ல

C.

ஒடிசா மாநிலம்.
மகேந்திரகிரிக் கல்வெட்டு.

இப்படையெடுப்பில் சோழர்கள் வெற்றி பெற்றதன் நினைவாக அந்தந்த நாட்டின் கலைச் செல்வங்களை வெற்றிச் சின்னமாக தமிழகம் கொண்டுவந்தனர். அவைகளை இன்றும் தமிழகத்து கோவில்களில் காணலாம்.

அந்நாடுகளில் சோழர்களது சாசனங்களும் பொறிக்கப்பட்டன.

ஒட்டரதேசம் என்று சாசனங்களில் குறிப்பிடப்படும் இன்றைய ஒடிசா மாநிலத்தில் கஜபதி மாவட்டத்தில் மகேந்திரகிரி மலைச்சிகரம் ஒன்றில் மூன்று கற்கோவில்கள் உள்ளன. தர்மர் கோவில், பீமன் கோவில், குந்திகோவில் என்று அழைக்கப்படுகிறது.



தர்மர் கோவிலின் வாயில் நிலைப்படியில் ஒரு கல்வெட்டுப்பொறிப்பு உள்ளது. வடமொழியில் அமைந்த இக்கல்வெட்டின் தமிழாக்கம்...

" இராஜேதிரன் தனது தோள் வலிமையால் விமலாதித்யனை வென்று மலை மிகுந்த நாடுகளையும் மற்ற நாடுகளையும் கைப்பற்றி கலிங்கபதி போன்றோரை அடக்கி மகேந்திரமலை உச்சியில் தனது வெற்றித்தூணை நட்டான்."

இக்கல்வெட்டுப் பொறிப்பின் கீழே சோழர் கால இலச்சினையும் கோட்டோவியமாக உள்ளது. அமர்ந்த புலியின் முன்பாக கயல்கள் இருக்கும் சோழர் முத்திரை பொறிக்கப்பட்டுள்ளதுத்

தர்மர் கோவிலுக்கு அருகே இருக்கும் குந்தி கோவிலில் மூன்று கல்வெட்டுப் பொறிப்புகள் உள்ளன..

முதல் கல்வெட்டு.

மகேந்திரகிரி மலை உச்சியில் சோழர்கள் விஜயஸ்தம்பம் நட்ட செய்தியைப் பதிவு செய்கிறது.

இரண்டாவது கல்வெட்டு..

இராஜேந்திரனின் படைத்தளபதியான ...

இராஜேந்திர சோழபல்லவரையன் என்னும் ராஜராஜ மராயனுக்கு இக்கோவிலில் விட்டி வாரண மல்லன் என்ற பட்டத்தை அளித்து (எதிரிகளின் யானைப்படையை வென்ற தலைவன்) வீர அங்குசம் ஒன்றை வழங்கி சிறப்பித்துள்ளார் சோழப்பேரரசர் இராஜேந்திரன்.

மூன்றாம் கல்வெட்டு..

இப்பகுதியை ஆண்ட விமலாதித்தனை குறிப்பிடும் துண்டு கல்வெட்டு ஆகும்..

வீர அங்குசம் பெற்ற இராஜேந்திர சோழ பல்லவரையனான இராஜராஜராஜன் மராயன் என்பவரே கங்கைபடையெடுப்பின் சோழர் படைத்தளபதி ஆவார்.. இராஜேந்திரனின் மெய்கீர்த்தி சாசனத்தில் கங்கைநீரை எடுத்த இடம்பற்றி கூறுகையில்..

"நித்தில நெடுங்கடல் உத்திரலாடமும் வெறிமலர் தீர்த்தத்து எறிபுனல் கங்கையும்"

நெடுங்கடல் போல் பரந்து நிற்கும் உத்திரலாடம் என்னும் இடத்தில் நறுமணமிக்க மலர்களையுடைய தூய்மையான கங்கை நீரை சோழர் படை எடுத்தது.. இராஜேந்திரனின் கங்கைவெற்றியை பறைசாற்றும் கல்வெட்டுகள் –

கும்பகோணம் திரிலோக்கி.

(a.r.e.1932 para 13)

"இராஜேந்திர சோழ தேவர் கங்கை கொண்டு எழுந்தருகின்ற இடத்து திருவடி தொழுது.."

என்ற கல்வெட்டு பதிவு செய்கிறது.

எண்ணாயிரம் என்ற ஊரில்
காணப்படும் கல்வெட்டில்..

(A.r.e. 1931 -32 part 2 para 3)

"உடையார் ஸ்ரீஇராஜேந்திர சோழதேவர்

உத்ரபாதத்தில் பூபதியாரை ஜயித்தருளி

யுத்தோத்சவ விபவத்தால் கங்காப்பரிகிரகம் பண்ணி

யருளின கங்கை கொண்ட சோழனென்னும் திருநாமத்தால்..."

கங்கைப் படையெடுப்பில் வடபுலத்திலிருந்து வெற்றிச் சின்னங்களாகக் கொண்டுவரப்பட்ட திருமேனிகள்.

உத்ரபாதம் என்னும் உத்திரலாடத்தில் கங்கை அரசர்களை வென்று கங்கை நீரை கொண்டு வந்து கங்கை கொண்ட சோழன் என்னும் பெயர் பெற்ற உடையார் இராஜேந்திர சோழதேவர்..

ஒரு நீண்ட பயணம்.

இந்தியாவின் வடபகுதி முழுவதும் சோழர்களின் இராஜாங்கம்.

ஒரு ஒற்றைச் சொல்.

தமிழர்களின் வீரத்தையும் தீரத்தையும் பராக்கிரமத்தையும் பறைசாற்றிய அந்த ஒரு சொல்.

இராஜேந்திரச் சோழன்

இலக்கணப் பயிற்சி இலக்கிய இன்பத்தின் திறவுகோல்

பேராசிரியர் முனைவர் மு. முத்துவேலு

முதல் பதிவாளர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
சென்னை

கவிதை என்பது இன்பத்தை ஏந்தி நிற்கும் இலக்கிய வடிவமாகும். கவிதையில் கனிந்து ஒழுகும் இலக்கிய இன்பத்தைத் துய்ப்பதற்கு இலக்கணப் பயிற்சியும் தேவை என்பது நம் முன்னோர் கருத்து.

ஆனால் இன்றைக்குச் சிலர் இலக்கியத்தைச் சுவைப்பதற்கும் இலக்கிய இன்பங்களை அனுபவிப்பதற்கும் இலக்கணம் தெரிந்திருக்க வேண்டிய தேவை இல்லை என்ற கருத்தை முன் வைக்கிறார்கள். இலக்கியங்களைப் படித்துப் புரிந்து கொள்ள இலக்கணத்தில் ஆழ்ந்த புலமையும் அறிவாற்றலும் தேவையில்லை என்பது உண்மைதான்.

ஆனால் கவிதைக்கான அடிப்படை இலக்கணத்தை அறிந்திருக்காவிட்டால் கவிதையில் பொதிந்திருக்கும் அழகைக் கண்டறிந்து சுவைப்பதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும்.

இலக்கியச் சுவையானது ஒருவருக்கு இருக்கிற இலக்கணப் பயிற்சிக்கு ஏற்ற வகையிலேயே அமைகிறது. இலக்கணப் பயிற்சி உடையவர்கள் மட்டுமே அந்தக் கவிதையின் அழகை முழுமையாகத் துயக்க முடியும்.

இலக்கணப் பயிற்சி இல்லாதவர்களுக்கு அவர்களது இலக்கண அறிவின் அளவிற்கே அந்த இன்பமும் சுருங்கிவிடும். எனவே இலக்கணப் பயிற்சி என்பது இலக்கிய இன்பத்தை முழுமையாகவும் செம்மையாகவும் துய்ப்பதற்கு அடிப்படை தேவைகளில் தலையாயது என்பது பொருத்தம் உடையதாகும். இலக்கணப் பயிற்சி இல்லை என்றால் சொற்களின் பொருளைக் கூட சரியாகப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படாது.

எடுத்துக்காட்டாகப் பூங்காடு பூக்காடு என்ற இரண்டு சொற்கள் இருக்கின்றன. பூங்காடு என்பதற்கும் பூக்காடு என்பதற்கும் வேறுபாடு உண்டு.

பூங்காடு என்பது அழகிய காட்டைக் குறிக்கும்.

பூக்காடு என்பது பூக்கள் நிறைந்த காட்டைக் குறிக்கும்.

பூங்காடு என்பது பண்புத்தொகையாகவும் பூக்காடு என்பது வேற்றுமைத் தொகையாகவும் அமைகிறது.

எனவே இந்த இலக்கண வேறுபாட்டை அறிந்தால் மட்டுமே பூஞ்சோலை என்பதைப் போல பூங்காடு என்பதும் அழகிய காடு என்ற பொருளை உணர்த்தும் சொல் என்பதை அறிந்து கொள்ள முடியும்.பூம் என்பது இங்கே அழகிய என்ற பொருளை உணர்த்துகிறது. பூம் கூட்டல் காடு பூங்காடு என்று வருகிறது. பூ கூட்டல் காடு பூக்காடு என்றும் அமையும். இங்கே இது பூக்கள் நிறைந்த காடு என்ற பொருளை உணர்த்துகிறது.

பூங்காடு என்பது பண்புத்தொகை என்றும் பூக்காடு என்பது வேற்றுமைத் தொகை என்பதையும் இலக்கணப் பயிற்சி உடையவர்கள் எளிதாகப் புரிந்து கொள்ளுவர்.

பாவேந்தர் பாரதிதாசனும் தமிழைப் பற்றிப் பாடுகிற பொழுது,

நான் ஒரு தும்பி

நீ ஒரு பூக்காடு

என்று பாடியிருப்பதையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

எனவே இலக்கணப் பயிற்சி மட்டுமே இலக்கியத்தின் சுவையை மேலும் கூட்டிக் காட்டுவதற்குப் பயன்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதைப்போலவே

பூம்போழில் :பூப்பொழில்

பூஞ்சோலை :பூச்சோலை

என வருவனவற்றையும் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இந்த இரு சொற்களுக்கும் இடையிலான பொருள் வேறுபாட்டை அறிந்து கொள்வதுடன் தமிழின் தொகை இலக்கணச் சிறப்பையும் நாம் அறிந்து மகிழ முடியும்.

இதன் தொடர்பாகப் பல எடுத்துக்காட்டுகளைத் தந்து இந்தக் கருத்தை நிறுவ முடியும்.

செய்யுளிலே விகாரங்கள் என்ற ஒரு இலக்கணப் பகுதி உண்டு.

ஒரு மெல்லின ஒற்றெழுத்து வரவேண்டிய இடத்தில் அங்கு அதற்கு இனமான வல்லின ஒற்றெழுத்து வந்தால் அது வலித்தல் விகாரம் என்று அழைக்கப்படும். அதைப்போலவே வல்லின ஒற்றெழுத்து வர வேண்டிய இடத்தில் அதற்கு இனமான மெல்லின ஒற்றெழுத்து வந்தால் அது மெலித்தல் விகாரம் என்று அறியப்படும்.

அவ் வகையில் தமிழ்ப் பாக்கள் இரண்டில் வல்லின ஒற்றெழுத்து ஒன்று மெல்லினமாகத் திரிந்து பொருளின் சிறப்பை உணர்த்துகின்ற பாங்கினை எடுத்துக்காட்டுகளாகக் காணலாம்.

திருமந்திர நூலின் காணப்படும் ஒரு பாடலாக சொல்லப்படுகிற பாடல் ஒன்று.

"ஐந்து கரத்தனை
ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை
போலும் எயிற்றினை
நந்தி மகன்தனை
ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி
போற்றுகின் றேனே!"

இந்தப் பாடலின் பொருள், “ஐந்து கரங்களை உடைய ஆனைமுகம் கொண்ட இளம் பிறை வடிவிலான எயிறுடைய நந்தியாம் சிவபெருமானின் மகனாகிய ஞான வடிவாகிய விநாயகரை என் புத்தியில் வைத்துப் போற்றுகிறேன்” என்று அமைகிறது..

ஆனால் பாடலில் புத்தி என்ற சொல் வரவேண்டிய இடத்தில் புந்தி என்று சொல் வந்துள்ளது.

இதனை இலக்கணத்தின் படி மெலித்தல் விகாரம் என்று சொல்லுகிறோம்.

இந்தப் பாடலில் புத்தி என்ற சொல் பயன்படுத்தப்படாமல் புந்தி என்ற சொல் பயன்படுத்தப்பட்டதற்குக் காரணம்

ஐந்து/ இந்தின்/நந்தி/என்று அமைகிற எதுகைக்கு இயைந்து செல்வதற்காக உந்தி என்ற அமைத்ததாக கொள்ளப்படுதல் ஆகாது.

புத்தி என்பதற்குப் பதிலாகப் புந்தி என்று பயன்படுத்தப்பட்டுள்ளது புத்தியின் இயல்பைக் குறிப்பதாக அமைகிறது.

மனித புத்தி என்பது வலிமையானது இல்லை.அது திடமானதும் இல்லை. அது எப்பொழுதும் அசைந்து கொடுக்கக் கூடியது. சஞ்சலமடையக் கூடியது.சலனமடையக் கூடியது. அது இயல்பிலேயே மென்மையானது.

எப்பொழுதும் எதற்கும் வளைந்தும் நெகிழ்ந்து இடம் கொடுக்கக்கூடிய தன்மைகளைக் கொண்டது. இத்தகைய புத்தியின் மென்மையான இயல்பைக் குறிப்பதற்குக் கவிஞர் புத்தியை மென்மையாக்கிப் புந்தி என்று அமைத்திருக்கிறார் என்று பொருள் கொண்டால் இப்பாடலின் பொருள் மேலும் சிறக்கும்.

இதைப் போலவே மெலித்தல் விகாரம் வந்து செய்யுளின் பொருட்சிறப்பைக் கூட்டியிருப்பதற்கு மற்றொரு எடுத்துக்காட்டைக் காணலாம்.

கிருத்துவக் கம்பன் என்று அழைக்கப்படும்.

எச். ஏ. கிருஷ்ண பிள்ளை எழுதிய இரட்சணிய யாத்திரகத்தில் அமைந்த ஒரு பாடல். மனம் திருந்திய மைந்தன் என்ற கதையில் வரும் நிகழ்ச்சியைக் குறிப்பதாக அமைந்த பாடல்.

ஒரு தந்தைக்கு இருக்கும் இரண்டு ஆண் மக்களில் மூத்தவன் நல்லவனாகவும் இளையவன் நன்னெறிகளிருந்து விலகி தீய நெறிகளில் செல்பவனாகவும் அமைகிறது கதை. தந்தையின் அறிவுரைகளைக் கேட்காமல்

தீய வழிகளில் சென்று துன்பப்பட்டு மனம் வாடிப் பின்பு திருந்தி மீண்டும் தந்தையை அடைகிற மகன் தந்தையை நோக்கிப் பாடுவதாக அமைகிறது இந்தப் பாடல். இந்தப் பாடலில் தன் தவற்றை உணர்ந்த இளைய மகன் தன்னுடைய மனம் திடமாக இல்லாமல் மென்மையாக இருந்ததால் நல்ல வழியில் இருந்து நழுவி தீய வழிகளில் செல்வதற்குக் காரணமாக அமைந்த தன்னுடைய மனத்தின் மென்மைத் தன்மையைச் சுட்டுவதாக அமைகிறது.

“எந்தையே எந்தையே என்றேங்கி நெட்டுயிர்த்துக் கண்ணீர் சிந்தி

நொந்து உமக்கும் தெய்வத்துக்கும் எதிராய்

புந்தியற்ற அளவில் பாவம் புரிந்தனன் இனி நான்

உந்தன் மைந்தன் என்று உரைப்பதற்கும் பாத்திரன் அல்லன்”

என்று அமைகிறது பாடல்.

இப்பாடலில் புத்தியற்று நடந்து கொண்டேன் என்பதைக் குறிப்பதற்கு அந்த இளைய மையம் இளைய மகனின் வாய்ச்சொல்லாக புந்தியற்ற வகையில் இன்று கவிஞர் அமைத்துள்ளார்.

இதுவும் புத்தியானது தடுமாறும் இயல்புடையது என்றும் புத்தித் தடுமாற்றத்தால் தவறிழைத்தேன் என்பதைச் சுட்டுவதற்காக புந்தி என்ற சொல்லைப் பயன்படுத்தி இருக்கிறார் எச்.ஐ. கிருஷ்ணபிள்ளை என்று பொருள் கொண்டால் இந்தப் பாடலின் பொருள் இன்னும் சிறக்கும் என்பதில் ஐயமில்லை.

புத்தியின் இயல்பு எப்பொழுதும் திடமாக இருக்காது என்பதால் தான் பாரதியும்

திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல் அறிவு வேண்டும். என்று அவர் முன்வைக்கும் வேண்டுகோள் வழியாகவும் நாம் அறிய முடிகிறது.

எனவே கவிதை என்னும் இன்பக் கடலில் பயணம் செய்ய இலக்கணம் என்னும் படகு இன்றியமையாத ஒன்று என்பது புலன் ஆகிறது. இலக்கணப் பயிற்சி என்பது இலக்கிய இன்பத்தின் திறவுகோல் என்றால் அது மிகை இல்லை.

TAMILMAGAN'S Gene Notes in Vengai Anchor

(In English Dr. Mrs C. Rajeswari)

Chapter - 6

Tamilmagan

2037 – 2017 Malaysia – Chennai

What is Tamil? It is a language. Dev can understand this. But one thing he can't understand is why this language is disturbing him.

When he tapped his All Tab for Tamil, it recommended a page that showed the agitation held in Tamil Nadu for that language. He wished to read that.

He had a lot of work in his MM Unit. Many have applied to go and live on Mars and he has to scrutinize the physio poly reports of the applicants.

Initially, 1,200 people applied and their physio immigration documents were ready. These reports were prepared after those people had successful training, genetic test, work plans, depression therapy, maximum probabilities to communicate with the earth, oxygen balancing, and others. Now, Dev has to check with the International laws and UNESCO's recommendations too. Among these work tensions, he has been compelled to watch that document on Tamil. He couldn't know what was going on in himself. He felt that he has been activated by somebody.

He wanted to see the whole thing, but he complied with the advice of the computer and opted for a paraphrase. So the documentary ran for only five minutes and he watched it. It was the Tamils fighting against teaching Hindi in Tamil Nadu. The agitators said, 'Hindi is hundred years old whereas Tamil is six thousand years old. Moreover, a language spoken only in a few states can never

be the language of the nation. This agitation for a language has nothing to do with Dev, who has to travel to Mars.

When Dev was watching the documentary, he felt a Saravanan was traveling with him. On the contrary, in that film, there was no such person. Saravanan was the director of the documentary. But Dev could see Saravanan as he saw Rajendra Chola.

Who is Thamarai? What does she expect from Saravanan? What is that TV named some 'Thalaimurai'? All these scrolled on in Dev's mind like a movie.

The life story of a few people related to that documentary came fresh into his mind.



Hindi agitation was unique. Generally, people fight for food, justice, or employment. There were agitations in the history of the world fighting against genocide, but for a language, a mother tongue seems to be new and strange. They don't want Hindi to be included in their curriculum. The central government of India, at the request of the state government, sent a military force to put down the agitation. But some agitators set ablaze and burnt themselves, shouting at the arrogance of the Central Government of India. Some stood against the military, received bullets in their chest, and sacrificed their lives for their language. Some experienced a brutal lathi charge and bleed to death. Amidst all this chaos, the agitators were shouting 'Tamil is our breath,' 'Tamil is our life,' 'Body is for the earth and soul is for Tamil'. Dev was wondering why the Tamils die for their language.

How come the life of Saravanan, Thamarai, and Swapna is running parallel to the document? He got panic, thinking he was growing mad. The document was separate from these people's stories. There are no double exposures. What do I have in my mind? Thoughts or the metro garbage?

Saravanan felt 'Love is a slavery which is voluntarily accepted by a man'. How did I become a slave? He couldn't find out. I am like a slave without expecting anything from her. She is innocent. She is neither rich nor poor. She is not pretty or intelligent. She is of a medium level or even below average, but he is like a slave to this girl. It is mysterious.

She always asks him some unusual questions and never asks such questions to others. He is controlled by some differences she shows to him.

One day she rang his office and asked, When did you come to the office? He answered 'eight o'clock'.

She said 'At one o'clock only, you thought of informing me,' and dropped her receiver.

Yes. Every day she expects that from him. He must inform her as soon as he comes to the office. This is her expectation.

'Am I an itinerary chart to inform her of my every move by hours, minutes, and seconds? If I didn't join her for lunch or in the evening coffee, she will get angry.

She stops speaking to him. Then I beg for an apology. Will anyone ask apology for these silly things? But I do.

‘Ok I will inform you as soon as I enter this office.'

She uses to stare at me and then start doing her computer work. It means that I will be forgiven in another thirty minutes.

Saravanan is frustrated with the problems in his office. He doesn’t know whether it is only he or everyone in this office who experiences the same. It is not an office; it is hell. He is overloaded with work, doing the work of ten. He must check whether the cameras are ready. The vehicle is ready? The interviewing person is ready? If Dinesh is there, it would be fine. So he should check his availability. All these were never been ready at any time. All have various commitments.

The person to be interviewed will ask me, ‘Can you come a little earlier?’ Or he may say that one of his relatives had passed away so the interview can be postponed to another day. Then I need to look for another person for that interview program. I’ve to get everything done smoothly.

Dinesh would have taken a break, now. The vehicle and camera are coming from Nanganalluur. Meanwhile, he must mail everyone seeking permission. Amidst all this, he is having a meeting for half an hour. One thing the office has not yet told the staff to do is, ‘Walk on your head for half an hour’. Such strange rules. The production executive shouts at me whenever he gives me a tape for recording the interview. The company wants the TRB rating to hike, and the program should reach internationally. Thamarai, who is placed in the accounts department, is well aware of my problems. Still, she uses to shout at me if I didn’t give her attendance in the morning. She will justify her expectation by saying When you could manage all these, why don’t you take up a small commitment to inform me when you reach here?

Saravanan couldn’t ignore her. It is a voluntary slavery that he gladly accepted.

At six o'clock when she peeps into his cabin and says ‘Bye, see you’ he must run after her and talk to her but she won’t reciprocate. She will just turn her head and say, ‘Ok, let me make a move. Even at the age of seven, these things were boring and now it is irritating for him. But still, he wanted to cool her and said ‘sorry’. But she won’t cool down for this type of readymade ‘sorry’. She said Ok and left. There was another reason for leaving her to go. Swapna was on the way. She never liked Swapna speaking with Saravanan.

Swapna is a Gujarathi girl. She is a graduate of Media Studies and a model too. She couldn’t fix herself to become a full-time model or an anchor. She took part in some TV programs to attract viewers with her beauty and some funny movements. Saravanan had an important matter to discuss with her. Somebody had told him that in her backyard was an ancient stone inscription. He wanted to see that and prepare a documentary on that.

The news editor called him. He knew why he has been called for. Recently, there was a sensational incident about a chief education officer in Salem district who alleged the corruption of a huge amount from the government grant in the name of conducting some contests in the schools. He was arrested on the verge of his retirement, and all his retirement benefits were suspended. This news was not telecasted, so the editor is calling to scold him. The editor always uses very soft and sharp words to prick and hurt his subordinates. Even if a person brings the Himalayas and keeps it on his table, he will say ‘stupid, can’t you place this carefully’. People who show their love and people who show their power are chasing Saravanan. He really wanted to possess some land and do some farming for his livelihood. One can live without a mobile phone, air conditioning room, motorbike, internet, malls, etc, but we are working hard for these unnecessary things.

Rajasekar came and asked about his bike. He signaled for a coffee and both of them went near the coffee machine. Rajasekar asked Saravanan, Vijay TV is recruiting men. Do you like to go?

Oh, I am frustrated with the TV job. I wish to quit.

Then what are you going to do? Find a way to flourish. Puthiya Thalaimurai TV pays 70,000. If you wish to join, I'll speak to Ram.

Rajasekar's words are captivating. Many are rushing to new channels. This shifting gives a hike of at least twenty thousand bucks. I wonder how long this will go? One day, everything will start declining. Why so much suspicion in this field? All look like royal and powerful kings ruling within a sand fort. He felt 60,000 and 70,000 are too much for them. TV men don't deserve this amount.

Many veteran journalists are riding their motorbikes to go to the office and they live with a reasonable salary. TV people do not possess any knowledge or skill better than them. He wished to go and join a job where he could get a decent and low salary. His destiny smiled at him. He had a phone call.

A friend called him on his phone and asked him whether he likes to join a Malaysian TV Channel that has a branch here. He believed the work tension may be less on that channel. Moreover, he doesn't want to lose a good opportunity that comes on his way. So he said OK.

Malaysian TV Channels

Do you know where the interview was conducted? It was in his room. It is a big building with rows of rooms rented for office goers. The person from Malaysia came to his room and interviewed him. He asked him to shoot a documentary film on Hindi Agitation for the Malaysian Channel. He is very much interested in the Tamil language and literature. To his surprise, Saravanan didn't know anything about Hindi Agitation in Tamil Nadu and he asked him when did it happen?

That man was shocked. Meanwhile, Saravanan's telephone rang. His ringtone was a Hindi song. Malaysian man felt awkward, but Saravanan couldn't realize this.

Malaysian tried to answer, 'In the month of January in 1965…; and then he felt Saravanan was not the right person for that, so he said 'Bye see you later' and left the room. Saravanan wanted to tell him, with his 5D camera he can take clear pictures and he could work with that in ordinary light for three hours., but of no use, that man had left.

On that night, when he was in the Ranjit hotel bar. He asked his friend Vignesh, 'What is anti-Hindi Agitation?' Vignesh carelessly answered, 'That's nothing, these waste people shouting as No Hindi and No English. You want cubes?' he asked.

After some time Saravanan asked, 'Why that old man want to take a documentary on that?' He has been asking in fragments without any links. He didn't expect any reply, but many questions were arising in his mind. When Saravanan told Thamarai that he was going to take a documentary on anti-Hindi agitation, she shouted at him, 'Look I am toiling with poverty because of this agitation'

Saravanan wondered, Did Thamarai agitated against Hindi? Then he got the whole story. It was her father who participated ferociously in the agitation. Police charged him and broke his legs. So he married at a later age and now, being very old and poor, could not arrange the marriage for his daughter. Thamarai was angry with her father, so she was shouting against the anti-Hindi.

Shall I come to meet your father?

Look; He had lost his life in this agitation and I was angry about that. You want to meet him and make money out of it. Thamarai started crying. Tears rolled down her cheeks. Her eyes became red.

My goodness, I didn't plan like that. And he tried to console her.

She pulled her hands from him and ran away from that place

Now Saravanan wanted to find some other informant to collect details about the agitation. He heard that writer Prabanjan took an active role in the agitation and he went to see him in his house at Peters Colony. When he reached his house, he came to know that the writer was admitted to the hospital as he had a cardiac arrest. Then his friends told Pazha. Nedumaran Aiya and pa. Jeyaprakasam knew this agitation very well. When he was trying to contact Pazha. Nedumaran Aiya through his phone, had a call from Thamarai. He attended her call, and she said. Ok, come home. which means she had forgiven him.

Thamarai's house was on Tharna street at Purasaiwakkam. It was an old house. Saravanan whispered to her that he could make a documentary about this house. She just stared at him. She had two younger sisters. No one is married. They are becoming old. Their discipline, sorrow, and strictness made them look composed. They had very sweet names, Thamarai [Lotus], Mullai [Jasmine], and Thaenmalar [Honeyflower]. All three have applied oil to their hair and combed well, lined their eyes with eyeliner, and worn sandal paste and kumkum on their foreheads. They looked traditional. Since they had no money for marriage expenses, no one got married. Their age is another hindrance to their marriage. He vowed to make arrangements for their marriage before his own sister's marriage is arranged. Thamarai's father Ramanathan narrated the story of Hindi agitation. He had been shot by the police and put in jail, so he lost one of his legs. He could not continue his studies. He is very sad that his sacrifice for his mother tongue is not properly honored. His hair has become grey but not bald. 'After forty only I got married, I spent my youth in Hindi agitation and in Tamil. He proudly said. 'I was acquainted with Anna.' Ramanathan had memories of his

wife, who died after giving birth to three beautiful girls. Even now he arranges small meetings to speak about Thirukkural and his passion for Tamil has never ended. He has an association 'Learn through Kural'. So these girls are angry with their father, as he is not taking any steps to get them married.

When Saravanan asked about anti-Hindi agitation, Ramanathan felt happy to share all of them. Saravanan busily took note of them. Thamarai came with a cup of tea for Saravanan and he sipped. He thought hereafter he should not get angry with Thamarai even if she is rude to him.

Ramanathan continued, When the military was called to control the agitation, Anna felt sad and hesitated a bit; since many school and college students are involved in this agitation. But his next-level leaders were anxious about continuing the agitation and ready to face the consequences. Moreover, the chief minister Bhakthavatsalam stated it was ridiculous, but Kamaraj felt sorry for that. The chief minister's attitude added oil to the fire and motivated the agitators to fight till the end. The agitation is now not under the control of the DMK party but of the public and especially the youth.

Meanwhile, the president announced Hindi as the national language on republic day. At once, some agitators committed self-immolation, burnt themselves, and sacrificed their lives for their mother tongue. Military shot many people. And I had a bullet in my leg, so my leg was amputated. The military was here for eighteen days, shooting many youth agitators at sight. The famous Tamil newspaper Thinathanthi interpreted the agitation as the Mahabaratha war as it went on for eighteen days. More than a hundred people were put to death by the government forces. At that point, the people of Tamil Nadu took a vow not to vote for the Congress party anymore. Military being called to control an agitation for a language is the first incident the world history. This agitation is reflected in the United Nations Organisation.

When the students involved in the agitation went to the Thinaththanthi office to publish their reports, the sub-editor informed them that the owner and publisher had obliged to publish these reports without any deletion or editing.

Ravichandran, a student of Law college, came there to give the statement. He was good at English and Tamil. He prepared the statements, and they were published as such. When the public came to know of the agitators' hardships and the police atrocities, they supported them. Then the state ministers slowly resigned in support of the agitators. Pollachi Mahalingam announced a fast. Religious leaders and Tamil scholars such as Kunrakkudi AdikaLaar, ki. Aa. Pe Visuvanatham, Ci. Ilakkuvanaar joined hands with the agitators and they were put in jail. Finally, DMK leader Anna and the next-level leaders like Karunanait hi also were prisoned.

Ramanathan was like reading a well-prepared article. It was similar to the flowing water in a river. Thamarai was smiling at him. When she smiled, she looked ten years younger. Is it possible for a person to be smiling the whole life and look younger?

Saravan had a question in his mind and he asked, ‘Did MGR go to jail?

Ramanathan nodded his head, ‘He was silent during anti-Hindi agitation and during the emergency period.'

Dad, how many times will you emotionally outpour your agitation? Saravanan came back to reality. His mind felt this agitation deserves documentation. He thanked Ramanathan and came out of the house. Thamarai followed him. He told her "Hereafter I won’t quarrel with you".

"Look, You never quarreled with me. It is me who does that. And I will do it."

The next day, Saravanan expressed his interest and involvement in the documentation of Hindi agitation to the Malaysian man.

The documentation film and its making scrolled in Dev’s mind. It is not always going like this. Sometimes it happens in the interest of Tamil. He decided to inform this to doctor Maran.

எளிய முறையில் யாப்பறிவோம்

நெருப்பலையார் இராம. இளங்கோவன்,
பொருளாளர்,
பெங்களூரு தமிழ்ச் சங்கம்

பாடம் -33

நான்கசைச் சீர்கள்.

அசைச்சீர், மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர், கனிச்சீர் என்னும் ***ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச் சீர்*** ஆகியவற்றைத் தொடக்கப் பாடம் முதல் அறிந்தோம். இச்சீர்களே பாக்களில் அதிகமாகப் பயன்பட்டு வருவனவாகும். இவைகளுக்கடுத்து **வஞ்சிப்பா**வில் பயன்படுத்தக் கூடிய சீர்களான **நான்கசைச் சீர்**களை இப்பொழுது அறிவோம். இந் **நான்கசைச் சீர்கள்** பாடல்களில் அருகி வருவன. குறிப்பாக **வஞ்சிப்பா**வில் மட்டுமே கையாளப்படும் அசைகளே **நான்கசைச் சீர்**களாகும்.

இதில், நான்கசைச் சீர்கள் **மாச்சீர், விளச்சீர்,** அடுத்து **தண்பூ, தண்ணிழல், நறும்பூ, நறுநிழல்** என்ற வாய்பாடுகளைக் கொண்டு தனித்தனியே பெருக்கினால் நான்கசைச் சீர்கள் **பதினாறு** வரும். அதாவது, **தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்** ஆகிய நான்கு வாய்பாட்டோடும், **தண்பூ, தண்ணிழல், நறும்பூ, நறுநிழல்** என்னும் நான்கு வாய்பாட்டையும் இணைத்தால் நான்கசைச் சீர்கள் (4×4) **பதினாறு சீர்கள்** ஆகும். அவை எவை யெவையெனக் கீழே காண்போம்.

- ***பூச்சீர்கள்:***

1. நேர்+ நேர்+ நேர்+ நேர்= **தேமாந் தண்பூ**

(தேமா+ தேமா) இணைந்து வருவதாகும்.

2. நிரை+ நேர்+ நேர் + நேர்= **புளிமாந் தண்பூ**

(புளிமா+ தேமா) இணைந்து வருவதாகும்.

3. நேர்+நிரை+ நேர்+ நேர்= **கூவிளந் தண்பூ** (கூவிளம்+ தேமா) இணைந்து வருவதாகும்.

4. நிரை+ நிரை+ நேர்+ நேர்= **கருவிளந் தண்பூ**

(கருவிளம்+ தேமா) இணைந்து வருவதாகும்.

5. நேர்+ நேர்+ நிரை+ நேர்= **தேமா** *நறும்பூ (தேமா+ புளிமா) இணைந்து வருவதாகும்.*

6. நிரை+ நேர்+ நிரை+ நேர்= **புளிமா நறும்பூ**

(புளிமா+ புளிமா) இணைந்து வருவதாகும்.

7. நேர்+ நிரை+ நிரை+ நேர்= **கூவிள நறும்பூ**

(கூவிளம்+ புளிமா) இணைந்து வருவதாகும்.

8. நிரை+ நிரை+ நிரை+ நேர்= **கருவிள நறும்பூ**

(கருவிளம்+ புளிமா) இணைந்து வருவதாகும்

.

இந்த எட்டுச் சீர்களும் **தண்பூ** நான்கும், **தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்** ஆகிய நான்கும் சேர்ந்து இரண்டு ஈரசைச் சீர்களால் நான்கசைச் சீர்களாக வரும். இதில், நான்காவது அசை நேரசையைக் கொண்டு அமைவதாகும். இந்த ஈரசைச் சீர்களை… … … …

தண்பூ - நேர்+ நேர்= **தேமா.**

நறும்பூ- நிரை+ நேர்=**புளிமா.**

நறுநிழல்- நிரை+ நிரை= **கருவிளம்.**

தண்ணிழல்- நேர்+ நிரை= **கூவிளம்.**

என்று அறிக. முன்னமே மேலே சுட்டிக் காட்டியதில் நேரசையில் முடியும் நான்கசைச் சீர்கள் காண்க. இவற்றில் தளையைக் காணும்போது, பூச்சீர்களைக் காய்ச்சீர் போலக் கொள்க. அதாவது,

***காய் முன் நேர்** வருதல் - **வெண்சீர் வெண்டளை**யாகும். **பூ முன் நேர்** வருதலும் **வெண்சீர் வெண்டளை**யே!*

*காய் முன் நிரை வருதல் - **கலித்தளை.***

*பூ முன் நிரை வருதலும்-**கலித்தளை.***

*கனி முன் நிரை வருதல்-**ஒன்றிய வஞ்சித் தளை.***

*நிழல் முன் நிரை வருதலும்-**ஒன்றிய வஞ்சித் தளை.***

*கனி முன் நேர் வருதல்-**ஒன்றாத வஞ்சித் தளை.***

*நிழல் முன் நேர் வருதலும்-**ஒன்றாத வஞ்சித் தளை.***

இவற்றில் பூ முன் நேர் வருதலால் வெண்சீர் வெண்டளை என்றாலும் நான்கசை என்பதால் வெண்பாவுக்குரிய சீர்கள் இவையல்லவை என்பதும். இவை வஞ்சிப்பாவிற் குரியது என்பதும். இலக்கணத்தில் நான்கசைச் சீர்களுக்கு மேல் வேறு சீர்கள் இல்லை என்பதும் ஆகும். இனி நிரையசையான கனிச்சீரில் முடியும் எட்டு நான்கசைச் சீர்களைக் காண்போம்.

*1. நேர்+ நேர்+ நேர்+ நிரை= **தேமாந் தண்ணிழல்***

(தேமா+ கூவிளம்) இணைந்து வருவதாகும்.

*2. நிரை+ நேர்+ நேர்+ நிரை= **புளிமாந் தண்ணிழல்***

(புளிமா+ கூவிளம்) இணைந்து வருவதாகும்.

*3. நேர்+ நிரை+ நேர்+ நிரை= **கூவிளந் தண்ணிழல்***

(கூவிளம்+ கூவிளம்) இணைந்து வருவதாகும்.

*4. நிரை+ நிரை+ நேர்+ நிரை= **கருவிளந் தண்ணிழல்***

(கருவிளம்+ கூவிளம்) இணைந்து வருவதாகும்.

*5. நேர்+ நேர்+ நிரை+ நிரை= **தேமா நறுநிழல்***

(தேமா+ கருவிளம்) இணைந்து வருவதாகும்.

6. நிரை+ நேர்+ நிரை+ நிரை= ***புளிமா நறுநிழல்***

(புளிமா+ கருவிளம்) இணைந்து வருவதாகும்.

7. நேர்+ நிரை+ நிரை+ நிரை= ***கூவிள நறுநிழல்***

(கூவிளம் + கருவிளம்) இணைந்து வருவதாகும்.

8. நிரை+ நிரை+ நிரை+ நிரை= ***கருவிள நறுநிழல்***

(கருவிளம்+ கருவிளம்) இணைந்து வருவதாகும்.

இவை எட்டும் ***நிழற் சீர்கள்*** *ஆகும்.* ***நிழற் சீர்கள்*** *என்றால்* ***நான்கசைச் சீர்கள்*** *என்றும்,* ***நிரை*** *என்ற இறுதி அசையை உடையது என்றும் உணர்க. இந்த எட்டுச் சீர்களும் வஞ்சிப்பாவில் வரும்.* ***பூச்சீர்கள்*** *எட்டும் காய்ச்சீர்களாகும்.*

நிழற் சீர்கள் *எட்டும் கனிச்சீர்களாகும். எடுத்துக் காட்டாக ஒரு குறளடி வஞ்சிப்பாவைக் காண்போம். இப் பாடல் பதினாறு அடிக் கொண்டது.*

இந்த பதினாறு அடிகளிலும் அடிதோறும் பொதுவாக முதலில் வந்திருப்பவை யாவும் நான்கசைக் கொண்ட நேரசையில் முடியும் சீர்கள். இவற்றில் ஒரு எட்டு வரிகளை மட்டும் காண்போம். இவை தங்களுக்கு எடுத்துக்காட்டாக போதும் என்று நினைக்கிறேன். ஆகவே இதோ பாடல் அடிகள்... ... .

- ***குறளடி வஞ்சிப்பா:***

அங்/ கண்/ வா/ னத் - தமரரசரும்

வெங்/ களி/ யா/ னை - வேல்வேந்தரும்

வடி / வார் / கூந் / தல் - மங்கையரும்

கடி / மல / ருந் / திக் - கதழ்ந்திறைஞ்சச்

சிங் / கஞ் / சுமந் / த - மணியணைமிசைக்

கொங் / கவி/ ரசோ / கின் - கொழுநிழற்கீழ்ச்

செழு / நீர்ப்/ பவ/ ளத் - திரள்காம்பின்

முழு / மதி / புரை / யும் - முக்குடை நீழல்

இப்படி ஒவ்வோர் அடியின் முதற் சீர் ***நான்கசைச் சீர்களாக*** *வந்துள்ள அடிகள் நீண்டு,*

இனிதிருந்து
*என்று **தனிச்சொல்** வந்து,*
அருள்நெறி நடாத்திய ஆதிதன்
திருவடி பரவுதும் சித்திபெறற் பொருட்டே!

அசை	வாய்பாடு
நிரை நேர் நேர்	புளிமாங்காய்
நேர் நிரை	கூவிளம்
நேர் நேர் நேர்	தேமாங்காய்
நேர் நேர்	தேமா
நிரை நேர் நேர்	புளிமாங்காய்
நேர் நேர்	தேமா
நிரைபு	பிறப்பு

*என்று பாடல் நிறைவு பெறுகிறது. இனி இந்த நான்கசைச் சீர்களில் தெளிவு பெற ஈற்றுச் சீரில் **நான்கசைப் பூச்சீர்** வருகிற இரு பாடலடிகளைக் காண்போம்.*

மாதவர் குலத்துதித்த - நல்ல
மாட்டிடையர் ஆய்ச்சிசேதி கேட்டிடுவீரே!
மேவியமா சாத்துவா னென்பார் - பெற்று மேவளர்த்த மைந்தனென்பேர் கோவலனென்பார்!

*மேலேயுள்ள இப்பாடல் அடிகளில் **கேட்டிடுவீரே; கோவலனென்பார்** ஆகிய இரண்டு சீர்களும் நான்கசை கொண்ட **பூச்சீர்கள்** ஆகும். இவ்விரண்டு சீர்களைப் பிரித்தறிவோம்.*

கேட் / டிடு / வீ / ரே
நேர் / நிரை / நேர் / நேர்
கூ / விளந் / தண் / பூ
கோ / வல / னென் / பார்
நேர் / நிரை / நேர் / நேர்
கூ / விளந் / தண் / பூ

*நான்கசைக் கொண்ட பூச்சீர்களைக் கற்றுணர்ந்தோம். இந் நான்கசைச் சீர்களுடன் **அசைச்சீர், மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர், கனிச்சீர், பூச்சீர், நிழற்சீர்** என்று **ஏழு** வகையாகும்.*

தமிழி நகரம் மதுரை

சி. அபிஷேக்
சட்டக்கல்லூரி மாணவர், இராமநாதபுரம்

தமிழகத்தில் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தமிழி கல்வெட்டுகள், பெரும்பாலும் மதுரை மாவட்டத்தில் தான் அதிகளவில் கிடைத்துள்ளது.

தமிழியை தேடிய எனது பயணத்தில், நான் முதன் முதலாக தமிழி எழுத்துக்களை பார்த்த இடம், மதுரை மாவட்டம் மேலூர் அருகில் உள்ள கீழவளவில் தான்.

• மதுரையில் தமிழி கல்வெட்டுக்கள் உள்ள இடங்கள், நான் பார்த்த வரிசைப்படியாக:

1. கீழவளவு - 1 | (18.08.2019)

2. கொங்கர் புளியங்குளம் - 3 | (07.12.2020)

3. பெருமாள் மலை - 4 | (06.07.2022)

4. கீழக்குயில்குடி - 1 | (07.07.2022)

5. யானை மலை - 1 | (28.12.2023)

6. அழகர்மலை - 12 | (10.02.2024)

7. மீனாட்சிபுரம் - 6 | (11.01.2025)

8. திருப்பரங்குன்றம் - 4 | (14.01.2025)

9. கருங்காலக்குடி - 1 | (26.06.2025)

10. குன்னத்தூர் - 3 | (04.07.2025)

11. திருவாதவூர் - 2 | (04.07.2025)

12. சித்தர்மலை - 10 | (09.07.2025)

13. விக்கிரமங்கலம் - 1 | (09.07.2025)

14. முதலைக்குளம் - 6 | (09.07.2025)

15. அரிட்டாபட்டி - 2 | (15.07.2025)



மதுரையை சுற்றியுள்ள மலைகளில், இதுவரையில் 15 இடங்களில், 57 தமிழி கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்படுள்ளன. இது தவிர மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே உள்ள கொங்கப்பட்டி என்ற கிராமத்தில் 1 தமிழி நடுகல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையும் சேர்த்து மொத்தம் 16 இடங்களில் தமிழி கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. இவை அனைத்தும், தமிழக மற்றும் மத்திய தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் பாதுகாப்பாக உள்ளது. கொங்கப்பட்டி நடுகல் மட்டும் ஊராட்சி கட்டுப்பாட்டில் உள்ளது.

இதில் காலத்தால் முந்தைய கல்வெட்டு 1882 ம் ஆண்டு, ராபர்ட் சீவல் மற்றும் பிரான்ஸ் ஆகியோரால் கண்டறியப்பட்ட மீனாட்சிபுரம் (மாங்குளம்) கல்வெட்டுகளாகும். இதன் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

இக்கல்வெட்டுக்களில் சங்க கால பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது சிறப்புக்குரியதாகும்.

மதுரையில் கிடைத்துள்ள தமிழி கல்வெட்டுக்களில், மேலூர் பகுதிகளில் உள்ள மலைப்பகுதிகளில் தான் எண்ணிக்கையில் அதிகமான கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள படங்களில், தமிழி கல்வெட்டுகள் உள்ள இடங்களில் பார்க்க வேண்டிய பிற தொல்லியல் விடயங்கள் என்னென்ன இருக்கிறது என்றும் பதிவு செய்துள்ளேன்.



கொங்கர் புளியங்குளம்
• இங்கு பார்க்க வேண்டிய இடங்கள் :
1. செஞ்சாந்து, வெண்சாந்து பாறை ஓவியங்கள் 2. தமிழி கல்வெட்டுகள் (3) 3. கற்படுக்கைகள்
4. தீர்த்தங்கரர் சிற்பம் 5. பெருமாள் கோயில் 6. பாறைக் கோயில் 7. மாயன் கோயில்
8. பிராமி கோயில், பாறை கீறல்
அபிஷேக்



• இம்மலையில் பார்க்க வேண்டிய தொல்லியல் இடங்கள் :
1. தமிழி கல்வெட்டுகள் (2) 2. முற்கால பாண்டியர் குடைவரைக் கோயில்
3. கற்படுக்கை 4. தீர்த்தங்கரர் சிற்பம் (2) 5. கற் குழி 6. பாறை கீறல்கள்
7. வட்டெழுத்து கல்வெட்டு 8. தீர்த்தங்கரர் சிற்ப ஓவியங்கள் 9. பாறை கீறல்கள்
அரிட்டாபட்டி பல்லுயிர் பாரம்பரிய தலம்
அபிஷேக்


குன்னத்தூர் மலை
• இம்மலையில் பார்க்க வேண்டிய இடங்கள் :
1. தமிழி கல்வெட்டுகள் (2) 2. முற்கால பாண்டியர் குடைவரைக் கோயில்கள் (2)
3. கற்படுக்கைகள் 4. கற் குழிகள் 5. சிவன் கோயில் 6. நாயக்கர் கல்வெட்டு
7. மலை மேல் உள்ள கோயில், அதில் உள்ள வட்டெழுத்து கல்வெட்டு


• இம்மலையில் பார்க்க வேண்டிய தொல்லியல் இடங்கள் :
1. தமிழி கல்வெட்டுகள் (10) 2. கற்படுக்கைகள் (9) 3. கற் குழிகள் 4. பாதக் கோயில்
5. பிற்கால கல்வெட்டு (2) 6. பெரிய குகைத்தளம் 7. நீர் செல்லும் வடிகால்
8. சிவன் கோயில் 9. நந்தியின் பாறை செதுக்கல்
அபிஷேக்
சித்தர் மலை


முதலைக்குளம் உண்டாங்கல் மலை
• இங்கு பார்க்க வேண்டிய இடங்கள் :
1. வெண்சாந்து ஓவியங்கள் 2. தமிழி கல்வெட்டுகள் (6)
3. கற்படுக்கைகள் 4. சுனை 5. கற் குழிகள்


விக்கிரமங்கலம் சின்ன உண்டாங்கல் மலை
• இங்கு பார்க்க வேண்டியவை
1. வெண்சாந்து ஓவியங்கள்
2. தமிழி கல்வெட்டு 3. கற்படுக்கை


பெருமாள் மலை
• இங்கு பார்க்க வேண்டிய இடங்கள் :
1. செஞ்சாந்து, வெண் சாந்து பாறை ஓவியங்கள்
2. தமிழி கல்வெட்டுகள் (3)
3. தீர்த்தங்கரர் சிற்பம் (3)
4. கற்படுக்கைகள்
அபிஷேக்


மீனாட்சிபுரம்
• இங்கு பார்க்க வேண்டிய இடங்கள் :
1. செஞ்சாந்து, வெண் சாந்து பாறை ஓவியங்கள் 2. தமிழி கல்வெட்டுகள் (6)
3. கற் படுக்கைகள் 4. சங்ககால செங்கல் அடித்தளம்


கருங்காலக்குடி மலை
• இம்மலையில் பார்க்க வேண்டிய தொல்லியல் இடங்கள் :
• தரை தளம் : 1. தமிழி கல்வெட்டு 2. சிம்ம பீடம் 3. கற் படுக்கைகள்
4. அலங்கார கற்குழி 5. மகாவீரர் சிற்பம் அதன் கீழ் உள்ள வட்டெழுத்து கல்வெட்டு
• மலை மேல் : 5. கற் படுக்கைகள் 6. பாண்டியர் கால வட்டெழுத்து கல்வெட்டு
7. சிவப்பு மற்றும் வெண் சாந்து ஓவியங்கள் 8. பாறை கீறல


திருப்பரங்குன்றம் மலை
• இங்கு பார்க்க வேண்டிய தொல்லியல் இடங்கள் :

கீழடி அகழாய்வில் தமிழ்க் கடவுள் முருகன்

ப. தேவி அறிவுசெல்வம்

உதவி பேராசிரியர் மருந்தியல் கல்லூரி, மதுரை
கோயில் கட்டிடக்கலை மற்றும் சிற்பத்துறை கள ஆய்வாளர்
அலைபேசி எண்- 9865377764
devipharm18@gmail.com

சங்க நூல்கள் முருகனை வீரமிக்கவன், சீற்றமுடையவன், வலிமை மிக்க உடையவன் என்று குறிப்பிடுகிறது.

சங்க காலத்தில் முருகன் கோயில்கள் இருந்ததை புறநானூறு 299 அணங்குடை முருகன் கோட்டத்துக் கலம் தொடா என்று குறிப்பிடுகிறது.

மேலும் முருகன் பற்றி அகநானூறு, திருமுருகாற்றுப்படை, புறநானூறு போன்ற நூல்கள் விரிவாக எடுத்துக் கூறுகின்றன.

பூம்புகார் அகழாய்வில் ஆண் உருவம்:

மனிதனின் தலை முதல் மார்பு வரை உள்ள உருவப் பகுதி மட்டும் கிடைத்திருக்கிறது. இந்த உருவத்தின் நெற்றியில் கண்ணி மாலையும் கழுத்தில் மணிமாலை போன்றவை அணி செய்கின்றன. இதன் காலம் பொது ஆண்டு 4ஆம் நூற்றாண்டு என வரையறை செய்யப்பட்டுள்ளது. இந்த உருவம் தமிழ் நிலக் கடவுள் முருகனாக இருக்கலாம் என்றும் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

சாளுவன் குப்பம் கோயில்:

பொது ஆண்டு ஆறாம் நூற்றாண்டில் கடற்கோளால் அழிவுற்ற கோயில் 2004ஆம் நூற்றாண்டில் சுனாமி பேரழிவால் வெளிவந்துள்ள கோயில் ஆழிப் பேரலையின் பொழுது கிடைத்த தடையத்தைக் கொண்டு இப்பகுதியில் அகழாய்வு செய்யப்பட்டது. அதற்கு முன்பாக கிடைத்த கல்வெட்டுகளான கன்னரத்தேவர் 26ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு இரண்டு,

இரண்டாம் நந்திவர்மப் பல்லவனின் 12ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு, கம்பவர்ம பல்லவனின் 17ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டுகள் இரண்டு, முதலாம் இராசராசச் சோழன் கல்வெட்டு மற்றும் சில பிற்காலப் பாண்டியர் கல்வெட்டு ஆகியவற்றில் திருவிழச்சு என்னும் ஊரிலுள்ள முருகன் கோவிலுக்குச் சிலர் தானம் அளித்ததாக உள்ளது.

இதனைக் கொண்டு ஆழிப்பேரழிவில் வெளிவந்த கோயிலானது முருகன் கோயில் என தெரிந்து கொள்ள முடிகிறது.

மேலும் சங்க காலத்தைச் சேர்ந்த சோழர் காலத்து செப்பு நாணயங்கள் உட்பட பல்வேறு பொருள்கள் கிடைத்துள்ளன.

பொது ஆண்டு ஆறாம் நூற்றாண்டில் கடற்கோளால் அழிவுற்ற இக்கோயில் சங்ககாலக் கோயில் என்று இங்கு கட்டப்பட்ட செங்கற்களின் அமைப்பு மற்றும் அளவைக் கொண்டு உறுதிப்படுத்தி உள்ளனர்.

கீழடி அகழாய்வு ஆண் உருவம்: கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட சுடு மண்ணால் ஆன தலை மற்றும் உடல் பாகத்தை ஆய்வு செய்யும் பொழுது இந்த உருவம் முருகக் கடவுளுக்கு உரியதாக இருக்கலாம் என்று கருதத் தோன்றுகிறது.

பூம்புகார் அகழாய்வு, சாளுவன் குப்பம் அகழாய்வு, சங்க இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் கீழடியில் கிடைத்திருக்கும் சுடுமண் உருவமானது தமிழ் கடவுள் முருகனாக இருக்கலாம் என கருதத் தோன்றுகிறது. மேலும் இதற்கு ஆழ்ந்த அடுத்த கட்ட ஆய்வு அவசியமும் கூட.

துணை நின்ற நூல்கள்:

1. பூம்புகார் ஆழ்கடல் அகல் வைப்பக கையேடு 2008.

2.தமிழிணையம்- மின்னூலகம்

3.கீழடி- வைகை நதிக் கரையில் சங்க கால நகர நாகரிகம்- 2019

4. சங்க இலக்கிய நூல்கள்

சாதி பேதம் பார்க்காத பாரதியார்

கிருஷ்ணன் சங்கரன்

கடையம் ஊருக்கு அருகில் மேற்குத் தொடர்ச்சி மலையில் சாஸ்தா கோயில் உள்ளது. இங்குதான் ஒரு திருவாதிரை நாளில் மேலக்கடையத்து பிராமணர்கள் வழிபாடு செய்தபோது கீழக்கடையத்தைச் சேர்ந்த மற்ற சாதி மக்களும் வந்துவிட, பிராமணர்களுக்கு பொங்கல் இலையில் பரிமாறப்பட்டது. கீழ்க்கடையத்து மக்களுக்கு கையில் பிரசாதம் வழங்கப்பட்டது. பாரதி அவர்களோடு வரிசையில் நின்று பிரசாதம் வாங்கியிருக்கிறார். பிரசாதம் கொடுத்த அந்தணர் 'ஏண்டா, பூணல் போட்ட பாப்பானா நீ, இந்தக் கீழ் சாதிக்காரங்களோடு நிற்கிறாயே' என்று ஏச, இவர் பூணலை அறுத்து அவர் முகத்தில் வீச, ஏகக் களேபரமாகியிருக்கிறது. 'உஜ்ஜயினி நித்ய கல்யாணி' என்ற பாடலை வீராவேசமாகப் பாட, கீழே விழும் நிலையிலிருந்த பாரதியைப் பிடித்து அமைதிப் படுத்தியவர் அவருடைய அணுக்கத் தொண்டர் ஆறுமுகக் கம்பர். இதுபோலவே பத்திரகாளியம்மன் கோயிலிலும் முழுக்காப்பு நாளில் சாதி வாரியாக பிரசாதம் வழங்கப்பட்டபொழுது பாரதி பாடிய பாடல்தான் 'உலகத்து நாயகியே எங்கள் முத்து மாரியம்மா... ' இந்தப் பாட்டிலே வருகிற 'துணி வெளுக்க மண்ணுண்டு எங்கள் முத்து மாரியம்மா.. மனம் வெளுக்க வழியில்லை..' என்ற வரியில் வருகிற மனம் வெளுக்க வழியில்லை என்ற வரியை 'ஓயாமல்' பாடியதைக் கேட்டு எரிச்சலடைந்த ஒரு சாரார் பாரதியை கோயிலுக்கு வெளியே அடித்துத் தள்ளிவிட்டார்களாம்.

அப்போதும் காத்தவர் ஆறுமுகக்கம்பர்தான். இத்தகைய மோதல்களின் மூலமும் பிற சாதியினரிடம் நட்பு பாராட்டுவதன் மூலமும் பிராமணர்களின் ஏகோபித்த எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டார் பாரதி. சாஸ்தா என்கிற தலைமலை அய்யனைக் காண இன்றும்கூட பாரதி காலத்தில் இருந்தது போல தீப்பெட்டி முதற்கொண்டு எல்லாப் பாத்திரங்களையும் கொண்டு சென்று சமைத்துச் சாப்பிடும் வகையில்தான் இருக்கிறது. ஒரு மூன்று மைலாவது காட்டுக்குள் ஓடைகளும், பாறைகளும் கடந்து நடக்கவேண்டும்.

இங்கு 1919ல் நடந்த ஒரு விழாவில் ஊரோடு சென்று வழிபாடு செய்யும்போது, அனைவருக்கும் சாதி வாரியாகப் பிரசாதம் வழங்கப்பட, ஒவ்வொரு சாதி வரிசையிலும் அமர்ந்து பிரசாதம் உண்டார் பாரதி. இதைக் கண்ட கடையத்து பிராமணர்கள் கடுமையாகக் கோபமுற்றனர். பாரதி குடும்பத்தை 'சாதிப் பிரஷ்டம்' செய்தனர். அவர்களுக்கு நீரும், மோரும் தரக்கூடாது என்று கட்டுப்பாடு விதித்தனர். குழந்தைகள் யாரும் பாரதியின் குழந்தைகளோடு விளையாட அனுமதிக்கப்படவில்லை. சில நாள்களுக்குப் பாரதிக்குச் சாப்பாடு கொடுக்கவும் தடை இருந்தது. பாரதி மூன்று நாள்கள் பட்டினி கிடக்க நேரிட்டது.

பட்டினி வதை. இதைப் பார்த்த ஒரு குடியானவன் யாருக்கும் தெரியாமல் பழங்களைக் கொடுத்திருக்கிறான். யாருக்கும் தெரியாமல் நீர் எடுக்கப் போவதுபோல் குடத்தில் உணவெடுத்துச் சென்று கொடுத்திருக்கிறார் செல்லம்மா. இது வெளித்தெரிய வர, மலத்தைக் கரைத்து பாரதி வீட்டின் முன் தெளித்தார்களாம். இதை ஆசிரியரிடம் கூறியவர் தொண்ணூறு வயதான கல்யாணி ஆச்சி. இந்த உச்சகட்ட சாதிக் கொடுமையை அனுபவித்த பாரதி ஒரு பிராமணர் என்பதுதான் நகைமுரண்.

சம்பாதிக்கிற ஒரு ரூபாய் கூலியையும் முழுதாக வீட்டுக்குக் கொடுக்காமல் பாரதிக்குக் கொடுத்து உதவியவர் அணுக்கத் தொண்டர் ஆறுமுகக் கம்பர் என்கிற சாய வேட்டிக் கம்பர். விடிந்தும் விடியாத இளங்காலைப்பொழுதில் இருவரும் ஜம்பு நதிக்கருகே, தட்டப்பாறையில் அமர்ந்து பரந்த வயல் பரப்பையும் நீண்ட மலைத் தொடரையும், அடர்ந்த தென்னஞ் சோலைகளையும் கண்டு களிப்பார்கள். நீண்ட காலம் நெய்தல் நிலத்தை மட்டுமே கண்டு வந்திருந்த பாரதியை மருதமும், குறிஞ்சியும் கவர்ந்ததில் ஆச்சரியமென்ன? அந்த மோன நிலையில் பிறந்த பாடல்தான்,

‘காலைப் பொழுதினிலே கண்விழித்து மேனிலைமேல்
மேலைச் சுடர் வானை நோக்கிநின்றோம் விண்ணகத்தே
கீழ்த்திசையில் ஞாயிறுதான் கோடில் சுடர் விடுத்தான்’

அப்போது கையில் பேனா, பேப்பர் இல்லாததால் ஒரு மண்கட்டியை எடுத்து பாறையில் எழுதி முடித்தாராம் பாரதி. இந்த ஆறுமுகக் கம்பருக்குச் சின்னம்மை, மாடத்தி, தெய்வானை என்று மூன்று சகோதரிகள். பாடுவதிலும் ஆடுவதிலும்

வல்லவர்கள். இவர்களில் சின்னம்மையை (90 வயது) ஆசிரியர் சந்தித்து பேசும்போது " ராசா வருவாரு, இந்தப் பாட்டைப் பாடுன்னுவாரு, பாடுவோம். இந்தப் பாட்டுக்கு ஆடுன்னுவாரு, ஆடுவோம். கை கொட்டிச் சிரிப்பாரு" என்கிறார்.

அப்போதே பாரதியிடம் உதவியாளனாக இருந்தவர் சங்கரலிங்க மூப்பனார். அவருக்கு அப்போது வயது பன்னிரெண்டுதான். சரியாக மாதம் முதல் தேதி ஆறு ரூபாய் சம்பளத்தை அந்த பையனின் தகப்பனாரிடம் கொடுத்து விடுவாராம் பாரதி. சங்கரலிங்கத்தின் சகோதரர் சுப்பையா மூப்பனார் (90 வயது) பாரதியோடு நன்கு பழகியவர். அவர் ஆசிரியரிடம் கூறுகிறார் ' அய்யரு எங்க வீட்டுக்கு வருவாரு.. மோர் கேட்டு வாங்கிச் சாப்பிடுவாரு. அவர் கட்டியிருக்கிற வேட்டி நாக்கில் போட்டால் ஒட்டிக்கொள்ளும். அவ்வளவு 'பீசு' வேட்டி. மத்த அய்யருகளைப் போலத்தான் (பஞ்சகச்சம்) கட்டியிருப்பாரு. வந்தாருன்னா 'டே கொஞ்சம் தண்ணி கொடு' ன்னு அத ட்டலாகத்தான் கேப்பாரு. மோர் கேட்டுக் குடிப்பாரு. இவ கொடுத்திருக்கிறா. ஒரு முறை இங்ககூட சாப்பிட்டிருக்காரு, அன்னைக்கு காணத்தொவையல். ரொம்ப நல்லாருக்குன்னு சாப்பிட்டாரு. சங்கரலிங்கம் சம்பளத்தை எங்க அப்பா கிட்டதான் கொடுப்பாரு. ஒரு நா கருக்கல்ல வந்தாரு, ஒரே நாய்க் கொரைப்பு.

ஒருபாட்டு ஒன்னு பாடுனாரு, அத்தனையும் கப்புனு அடங்கிப் போச்சு. ஏவிளே? என்ன பாட்டு ஞாபகம் இருக்கா? (அவர் மனைவிக்குத் தெரியவில்லை) எங்க கூட பழக்கம் வைச்சுக்கிட்டதுக்கு அய்யருங்க எங்க அப்பாவெல்லாம் சண்டை போட்டிருக்கிறாங்க. கீழ்க்கடையத்தில் ஐயருக்கு ரெண்டு ஸ்நேகித ஆள் உண்டு. சங்கரலிங்க நாடார், பொன்னையா நாடார் . அவங்க கூடலாம் சண்டை போட மாட்டாங்க. ஏன்னா அவங்கள்லாம் பணக்காரங்க. அடிக்கடி ரயில் கெடி பக்கம் போவாங்க.. 'வெள்ளைப் பதினி' குடிப்பாங்க. ராத்திரி ரொம்ப நேரம் கழிச்சுத்தான் வீட்டுக்குப் போவாரு.' ஆசிரியர் கண்டு பேசிய பலரும் கவிஞருடைய ஒல்லியான உருவத்தையும், முறுக்கு மீசையையும், கூரிய பார்வையையும், தலைப்பாகைப் பின்தொங்கலையும் நினைவு கூறுகிறார்கள்

நன்றி: சொல்வனம்

முகநூல் பதிவு

வேளாண் மரபில் ஆடி மாதம்

முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி
தமிழணங்கு இதழாசிரியர்
மொழிபெயர்ப்பாளர்,எழுத்தாளர், பதிப்பாளர்

ஆடி மாதம் என்பது உலகெங்கும் வேளாண் மரபினரின் ஓர் பண்பாட்டு அடையாளம். உலக நாடுகள் எங்கும் இந்நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது. ஆடி மாதம் பொதுவாக தமிழ்நாட்டில் ஜூலை 13அல்லது 14 இல் பிறக்கும் . மேலை நாடுகளில் இந்நாளை ஜூன் 21 எனக் கணக்கிட்டுள்ளனர். அன்று கதிரவன் தன பயணத்தின் திசையை மாற்றுகிறான் என்று அங்கு கணித்துள்ளனர். இந்நாளை அவர்கள் Solar solstice என்பர். அன்று மேலை நாடுகளில் கோடை காலம் தொடங்குகிறது . இந்நாளை ஐ. நா. சபை ஜூன் 21 என்ற நாளை நிலத்தின் வளமை, வேளாண்மை & உணவு உற்பத்தி முறைகள் , பண்பாட்டுப் பாரம்பரியம்ஆகியவற்றுக்குரிய சிறப்பு நாளாக அறிவித்துள்ளது. [International day of Celebration of solstice] இந்நாளை அண்டை நாடுகளுடனான அன்புறவு, பரஸ்பர மதிப்பு, ஒற்றுமை மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியம் போற்றும் நாளாக அறிவுறுத்தியுள்ளது கதிரவன் தென் திசைப் பயணத்தைத் தொடங்கும் இந்நன்னாள் உலகெங்கும் வேளாண் சிறப்பு மிக்க நாளாகப் போற்றபடுகிறது.

வேளாண் சிறப்பு என்பது வளமைச் சடங்குகளால் பொலிவடைகிறது. கீழை நாடுகளில் மண்மாதா தரும் விளைச்சலும் மேலை நாடுகளில் மனித குலம் தழைக்க திருமணமும் இக்காலகட்டத்தில் உறுதி செய்யப்படுகிறது. இந் நன்னாள் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு நாளாக அமைந்தாலும் விழாவும் கொண்டாட்டங்களும் வேளாண் செயல்பாடுகளும் ஏறத்தாழ ஒன்றாகவே தோன்றுகின்றன.

வேளாண் சடங்கு

ஆடி மாதப் பிறப்பன்று கதிரவன் தன் தெற்கு நோக்கிய பயணத்தைத் தொடர்கிறான். இதனைத் தட்சிணாயனம் என்பர். தட்சினா என்றால் தெற்கு அயணம் என்றால் நகர்தல் அல்லது பயணம். இராமனின் அயணம் இராமாயணம் எனப்பட்டது. இத்திசை மாற்றத்தின் போது கதிரவன் கடக ரேகையின் மீது நிற்கிறான். இனி கோடை காலம் ஆர்மபமாகி வேளாண் குடி மக்கள் விதைப்பு, நாற்று நடுதல், களை எடுத்தல், மருந்து தெளித்தல், கதிர் அறுத்தல்,, தூற்றுதல், பதரடித்து நெல் மூட்டைளை விட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தல் ஆகிய

பணிகள் நடைபெறும். இவை முடிய தை பிறக்கும். கதிரவன் தன பாதையை வடக்கு நோக்கி திருப்புவான். அப்புறம் வேளாண் குடிகளுக்கு ஒய்வு காலம் அல்லது கொண்டாட்ட காலம் ஆகும். தை முதல் வைகாசி வரை விழாக்கள் நடை பெறும்.

விதையும் முளையும்

ஆடிப்பட்டம் தேடி விதை என்ற பழமொழிகேற்ப வயல்களில் ஆடி மாதம் பிறந்ததும் விதைப்பு பணிகள் தொடங்கிவிடும். ஏர் பூட்டி உழுது போட்ட நிலத்தில் ஆடி மாதம் பிறந்ததும் அது வரை பாதுகாத்து வைத்திருந்த விதை நெல்லை எடுத்துக்கொண்டு வந்து விதை தூவுவர். விதைத்தல் தொடர்பான வளமை சடங்கு *[fertility ritual]* அம்மன் கோயில்களில் முளைப்பாரி எடுத்தல் ஆகும். முளைப்பாரி என்பதை திருமணங்களில் முளைப்பாலிகை என்பர். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஆடி மாதம் நடை பெறும் விழா முளைக்கொட்டு திருவிழா எனப்படும். இத்திருவிழாவின் போது அன்னை மீனாட்சி திருக்கோயிலுக்குள் வீதி உலா வருவாள் . அந்த வீதி ஆடி வீதி எனப்படும் இவ்விழாவில் முளைப்பாரி மீனாட்சி சந்நிதியில் வளர்த்து கும்மி கொட்டி பெண்கள் கொண்டாடுவர். கிராம தேவதைக் கோயில்களில் முளைப்பாரி கொட்டுவது போல அன்னை மீனாட்சி அம்மன் கோவிலிலும் முளைப்பாரி கொட்டுவர் அதை முளைக்கொட்டு விழா என்பர்.

முளைப்பாரி எடுத்தல்

தமிழகக் கிராமங்களில் குறிப்பாக ஆற்று நீர் பாசனப் பகுதிகளில் நதிக்கரை நாகரிகம் செழித்த வேளாண் குடி மக்கள் வாழும் ஊர்களில் முளைப்பாரி எடுத்தல் என்பது ஆடி தை மாசி பங்குனி மாதங்களில் நடைபெறுகிறது. ஆடி

மாதம் அதிக ஊர்களில் நடைபெறுவது மரபு. அம்மன் கோயில்களில் தென்னங்கீற்றால் தனி அறை அமைத்து அங்கு கதிரொளி புகா வகையில் மண் ஓடுகளில் மூங்கில் குச்சி நட்டு அதில் விதையோடு பிசைந்த களிமண்ணைப் பூசி வைப்பார். அந்த விதைகள் இருட்டில் நீண்டு பொன்னிறமாக வளரும் இது ஒரு முன் சோதனை முயற்சி. முளைகள் பொன்னிறமாக மஞ்சள் பூத்து இருந்தால் அந்த ஆண்டு நல்ல விளைச்லை எதிர்பார்க்கலாம் என்று வேளாண் குடியினர் அறிந்துகொள்வர். விதை போடும் போது முளைப்பாரி கொட்டும் பெண்கள் பின் வரும் பாட்டைப் பாடி கொட்டுவர். பயறு வகைகள் நீண்டு வளரும் என்பதால் பெரும்பாலும் பயறு வகைகளை முளைக்க விடுவர். விதைகளை முத்து போடுதல் என்பர். விதையை முத்து என்று அழைப்பதும் மதிப்பதும் வேளாண் குடிப் பண்பாடு.

அவர துவர மொச்ச
அஞ்சுவகை ஆமணக்கு

எள்ளு சிறுபயறு
ஏத்த மணிப்பயறு

கடல சிறுபயறு
காராமணிப் பயறு

வாங்கிவந்த பயறுகள
வாளியில ஊறப்போட்டு

கொண்டுவந்த பயறுகள
கொடத்துல ஊறப்போட்டு

பெண்கள் விதைகளை ஊறப்போட்ட பிறகு மண்ஓடுகளில் வளர்ப்பதற்காக மண்பானையை வாங்கி வந்து அதில் பாதியை உடைத்து ஓடு தயாரித்து வைப்பார். தற்காலத்தில் *man* தொட்டிகளிலும் சில்வர் ஓடுகளிலும் வளர்க்கின்றனர். இவற்றை ஆண்டு தோறும் மாற்றாமல் கோயிலில் வைத்துப் பாதுக்காத்து ஒவ்வோர் ஆண்டும் திரும்பத் திரும்ப எடுத்துப் பயன்படுத்துகின்றனர். விதைகளை போட்டு வளர்க்க ஓடு தயாரிப்பதையும் பாட்டாகப் பாடுகின்றனர்.

ஆசாரி அழச்சு வந்து
அழகா ஓடொடச்சி

கொசவனோட கொல்லையில
கொடத்தோட ஓடொடச்சி

ஓடு தயாரித்து முத்துக்களைபோட்டதும் அதற்கு இரு அல்லது உரம் போட ஆடு மாட்டு மேய்க்கும் சிறுவர்களை அணுகி ஆட்டுப்புழுக்கையும் காய்ந்த மாட்டு சாணத்தையும் கொண்டு வந்து தர வேண்டுமென்று கேட்கின்றனர். அதற்கும் பாட்டு பாடுகின்றனர்.

ஆட்டாம் சிறுவர்களே ;
ஆடு மேய்க்கும் பாலர்களே

ஆட்டாந்தொளி தொறங்க ;
ஆட்டெருவெ வாரிவர

மாட்டாஞ்சிறுவர்களே ;
மாடு மேய்க்கும் பாலர்களே

மாட்டாந் தொளிதொறங்க ;
மாட்டெருவெ வாரிவர

வாரிவந்த எருவுகள
வயசுப்பிள்ள தானிடிச்சி

கொண்டுவந்த எருவுகள
கொழந்தப்புள்ள தானிடிச்சு

இவ்வாறு ஆடி மாதம் விதைப்பு சடங்கு நிறுவனச் சமயக் கோயில்களிலும் நாட்டுப்புறக் கோயில்களிலும் இறை வழிபாட்டுச் சடங்குகளிலும் வயலிலும் நடக்கின்றன.

ஆடிக் காற்றும் மழையும்

ஆடி மாதம் தென்னிந்தியாவில் தென் மேற்கு பருவக் காற்று வீசும் காலம் ஆகும். கேரளாவில் காற்று முடிந்து மழை தொடங்கிவிடும். அங்கு காற்று வீசத்

தொடங்கியதும் பொதிகை [குற்றாலம்] மலையில் தென்றல் வீசத் தொடங்கும். அங்கு மழை தொடங்கியதும் குற்றாலத்தில் சாரல் விழும். அருவிகளில் நீர் கொட்டும், தேனீ பள்ளத்தாக்கு வழியாக தென் மேற்கு பருவக் காற்று உள்ளே புகுந்து நல்ல மழையைப் பொழியும் . தமிழகத்தின் மற்ற பகுதிகள் மழை மறைவுப் பிரதேசங்கள் ஆவதால் அங்கு பேய்க்காற்று வீசும். ஆனி அமர்ந்து விடும் புரட்டாசியில் மழை பெய்யத் தொடங்கும். பயிர் பால் பிடிக்கும் அலறும் ; ஆடிக்காற்றில் அம்மியும் நகரும் என்ற பழமொழிகள் இந்தக் காற்றின் தன்மையை உரைக்கின்றன. ஆனி மாதத்தில் கொம்பு சுற்றி காற்றடிக்கும். காற்று வழி மகரந்தச் சேர்க்கைக்கு ஏற்ற பருவம் இது. ஆடி மாதம் காற்று பொருட்களை வீசி அடிக்கும் . ஆவணியில் காற்று அமர்ந்து விடும் அடுத்த மாதமான புரட்டாசி தமிழகத்துக்கு மழை கொண்டு வரும்.

காவிரி வைகை பாசனத்துக்கு ஆடி மழை

தமிழகத்தின் வேளாண் நிலங்கள் எதிர்பார்த்திருப்பது ஆடி மாதம் கேரளாவிலும் கர்நாடகாவிலும் பொழியும் தென் மேற்கு பருவமழையை தான் என்றால் மிகையில்லை. தென்மேற்கு பருவ மழை நீரால் கேரளாவில் உள்ள பெரியாறு [பெரியார் டேம்]பெருக்கெடுத்து ஓடும் . அந்தத் தண்ணிர் தமிழ் நாட்டிலுள்ள வைகை அணைக்கட்டுக்கு வந்து மதுரை , இராமநாதபுரம் புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களின் விளைநிலங்களில் வேளாண் பணிகளை ஊக்கபடுத்தும். இம்மாவட்டத்து வேளாண் குடியினர் ஆடியில் பெய்யும் தென் மேற்குப் பருவ மழையை எதிர்பார்த்து இறைவனை வணங்கி நிற்பர். பெரியாற்றுப் பாசனத்தை இந்நிலங்களும் வயல்களும் நம்பியுள்ளன.

ஆடி மாதத்தில் தென்மேற்குப் பருவ மழை அடை மழையாக வட கேரளம் மற்றும் கர்நாடகம் பகுதியில் பொழியும் போது தலைக்காவிரியில் வெள்ளம் பெருகி காவிரியில் நுரை புரள கரை தொட்டுப் பாய்ந்து வரும் . காவிரிக் கரைப் பகுதியில் ஆடி பதினெட்டாம் நாளன்று ஆடி பெருக்கு கொண்டாடப் படும். அன்று மக்கள் ஆற்றங்கரைக்குச் சென்று தாலி பெருக்கிப் போட்டு காவேரியம்மனை வணங்கி மகிழ்வர். புது மணமக்கள் வீட்டுப் பெரியவர்களுடன் அன்று காவிரிக் கரைக்குச் செல்வது பண்டைய மரபு. தமிழக நதிகளான வைகைக்கும் காவேரிக்கும் ஆடி மாதம் பொழியும் தென் மேற்குப் பருவ மழை நீர் அருங்கொடையாகத் திகழ்கிறது.

உலக வேளாண் மரபினரின் ஆடிக் கொண்டாட்டம்

கதிரவன் திசை திரும்பும் நாளை மேலை நாடுகளில் வாழும் வேளாண் மரபினரும் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். அவர்கள் ஜூன் 21 என்றும் சில பகுதிகளில் அதற்கு ஒரு வாரம் முன்னதாகவும் பின்னதாகவும் கொண்டு கொண்டாட்டத்தை நடத்துகின்றனர். கதிரவன் திசை திரும்பும் நாளை சில கொடியின் சரி பாதி காலம் [[MID SUMMER] என்றும் வேறு சிலர் கால் பகுதி [QUARTER DAYS] என்றும் அழைப்பதுண்டு. ச்விடனில் இந்நாளில் ஸ்ட்ரா பெரி பழம் பறிக்கும் நாளாகக் கொண்டாடுவர். அந்த ஸ்ட்ரா பெரி பழத்தின் மீது கிரிம் வைத்து குழந்தைகள் உண்பது வழக்கம். ஜூன் மாதப் பௌர்ணமி நாளன்று தோன்றும் முழு நிலவை ஸ்ட்ரா பெரி மூன் நேரே அழைப்பார்கள். தமிழகத்தில் ஆனி பௌர்ணமி அன்று கோயில்களில் முப்பழ சேவை என்று முக்கனிகளால் அபிஷேகம் செய்வர். ஆனி மாதத்தின் முழு நிலா அன்று ஆனித் திருமஞ்சனமும் தமிழகத் திருக்கோயில்களில் விசேஷமாக நடக்கும்.

நோய்க் காரணிகளை விரட்டுதல்

ஐரோப்பிய நாடுகளில் வேளாண் குடியினர் இக்காலகட்டத்தில் தன் இணைகளைத் தேடித் திருமணம் செய்வதும் உண்டு. அங்கு கோடை காலம் தொடங்கிவிட்டபடியால் திருமண நாட்டமும் அதிகரிக்கும். ஜூன் 21 அன்றைக்கு முதல் நாளிரவு BON FIRE என்ற பெயரில் தீ வளர்த்து அதைச சுற்றிலும் ஆடி பாடி சில சடங்குகளை நடத்தி மகிழ்வர். இது ஏறத்தாழ நமது சித்ரா பவுர்ணமியைப் போன்றது அல்லது இந்திர விழா போன்றது எனலாம். மறு நாள் பெரனி பூக்களை பறித்தது மகிழ்வர். பேரணி பூக்கள் நல்ல அதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும் என்று நம்புகின்றனர். இக்காலகட்டத்தில் சூனியக்காரிகளும் மந்திரவாதிகளும் இரவில் வெளியே வந்து வசிய மற்றும் மாரக் மூலிகைகளை விடியும் முன்பே பறித்து செல்லுவது வழக்கம். விடிந்த பிறகு பறித்தால் அம் மூலிகைகளின் பண்பு மாறிவிடும்.

தீ வளர்த்தலின் தத்துவம்

இளம்பருவத்தினர் சூனியக்காரிகளை விரட்ட வைக்கோல் மற்றும் துணிகளைக் கொண்டு அவர்களைப் போல ஒரு பொம்மை செய்து தங்கள் பகுதிகளில் வைப்பர். டென்மார்க்கில் அன்றிரவு சூனியக்காரிகள் அன்றிரவு கூட்டம் கூட்டமாக வெளியே வருவதுண்டாம். ப்ரோக்கேன் மலையில் இளைஞர்கள் எழுப்பும் தீ அவர்களைத் துரத்திவிடும் என்பது நம்பிக்கை. அங்கு அவர்கள் சூனியக்காரிகள் என்பது நோயின் அறிகுறி ஆகும். இங்கும் இதே பழக்கம் நம்மிடையே உள்ளது. டென்மார்க் சுவிடன் போன்ற நாடுகளில் அவர்களைத் துரத்தி அடிக்க தீ வளர்ப்பது போல நாமும் ஐப்பசியில் அடைமழை முடிந்த பிறகு கார்த்திகையில் காண மலை கொட்டும் நாட்களில் பெரிய கார்த்திகை அன்று சொக்கப்பனை வளர்த்தல் சுளுந்து சுற்றுதல் போன்ற தீ வரப்பு சடங்குகளைச் செய்கிறோம். இவை தீ நுன்மிகளைப் பொசுக்கிவிடும். தீ வளர்த்தல் என்பது நோய் காரணிகளை விரட்டிட இங்கும் அங்கும் பயன்பட்ட ஒரு சடங்கியல் மருத்துவ முறை ஆகும்.

பூ பறித்தல் ஓர் வளமைச் சடங்கு

வேளாண் குடியினர் விளைச்சலை பூ என்றும் போகம் என்றும் குறிப்பிடுவர். பூ என்பது வளமையை குறிக்கும் சொல் ஆகும். ஐரோப்பிய நாடுகளில் மே மாதத்திலேயே மெ கம்பம் *[May pole]* என்ற கம்பத்தை நட்டு இளைஞர்கள் அதனைச் சுற்றி சுற்றி வந்து நடனமாடுவர். அப்படியே த ங்களின் வாழ்க்கைத் துணைகளை முடிவு செய்வர். இந்த கொண்டாட்டத்திலும் பெண்கள் பூசேகரித்து வந்து தங்களை அழகு படுத்திக் கொள்வதுண்டு.

பர்சில் நாட்டிலும் இப்பழக்கம் இருந்து வருகிக்றது. நல்ல மாப்பிள்ளையும் அதிர்ஷ்டமும் தேடி வரும் என்ற நம்பிக்கையால் சுவிடனில் வீட்டு வாசலில் இந்தப் பூக்களைத் தோரணமாகக் கட்டித் தொங்க விடுவர். நார்வே நாட்டில் பூக்களை தலையணைக்கு அடியில் வைத்துப் படுத்துக்கொள்வது மரபு அப்போது இளம்பெண்களின் கனவில் அவர்களுக்கு வரப்போகும் மணமகனது முகம் தெரியும், என்பது நம்பிக்கை.

மணமகன் தேடல்

தமிழகத்தில் மணமகன் தேடல் என்ற சடங்கு வாழ்க்கைத் துணை தேடுதலும் ஆடி மாதத்தில் நடப்பது இல்லை. இங்கு திருமணமான் தமப்திகளையும் பிரித்து வைக்கும் மாதம் இது. சித்திரையில் குழந்தை பிறப்பதை த் தவிர்க்க மக்கள் விரும்பினர். சித்திரை செறுக்கன் பிறக்கில் அத் தர அக்குடி கெடும் என்று மலையாளத்திலும் பழமொழி உள்ளது. சித்திரையில் பிறந்த தலை மகன்

வளர்ந்து நிலையில் அவன் தலை தட்டும் போது தகப்பனைப் பிரிவான் என்று ஒரு நம்பிக்கை தமிழகத்திலும் உள்ளது.

ஆனால் மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்கும் சில சடங்குகள் செய்வதில் சில வாரங்கள் வித்தியாசம் காணப்படுவதால் அங்கு கோடை பிறந்தத்டும் நடக்கும் வாழ்க்கைத் துணை தேடுதல் திருமணம் போன்றன இங்கு சற்று முன்னர் மே மாதத்தில் அதாவது வைகாசியில் நிகழ்கிறது. இது தட்ப வெப்ப மாற்றத்தினால் அற்படும் பண்பாட்டு மாற்றம். இரண்டு பகுதியில் வேளாண் தொழில் செய்பவர்கள் கோடை காலத்தில் திருமான் செய்தனர். என்பது மாறாத உண்மை யும் நடைமுறையும் ஆகும்.

நிறைவு

ஆடி மாதமும் வேளாண் மக்களின் விதைப்பு சடங்கும், பூப்பறித்தல் , பழம் பறித்தல் , முப்பழ சேவை போன்ற வளமை சடங்குகல் மற்றும் மேலை நாட்டின் திருமணத் தேடலில் மேலை நாடுகளிலும் கீழை நாடுகளிலும் வசிக்கும் வேளாண் மரபினரிடம் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவ் ஒற்றுமைகளுக்குக் காரணம் அவர்களின் வேலன்மைக்கு வெயிலின் தேவை அதிகம் என்ற காரமே ஆகும். வெயில் காலத்தை உழவர்கள் கொண்டாடுகின்றனர். நல்ல மலையையும் அவர்கள் எதிர்பார்த்து வரவேற்கின்றனர். ஆடியும் அம்மனும். ஆடிச் சீர், தமிழக வேளாண்மையில் தென்மேற்கு பருவ காற்றின் பங்கு,, ஆடி அமாவாசை குறித்து அடுத்தடுத்த கட்டுரைகளில் காணலாம்.

"தமிழ்நாடு பெயர் வேண்டும்"

முனைவர் சிவ இளங்கோ,
புதுச்சேரி.



1967 ஆம் ஆண்டு. தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பேரறிஞர் அண்ணா பொறுப்பேற்ற பிறகு, "மெட்ராஸ் ஸ்டேட்" என்பதைத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றும் தீர்மானத்தை 18/7/1967 இல் முதலமைச்சர் அண்ணா கொண்டு வந்தார். அது சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுப் பின்னர் மத்திய அரசின் ஒப்புதலோடு, அதிகாரப்பூர்வமாக, 1969 ஜனவரியில், தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் பெற்றது.

இதற்கு முன்னரும் தமிழ்நாடு சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் தமிழ்நாடு பெயர் மாற்றம் கோரித் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்ட போதெல்லாம் அப்போதைய காங்கிரஸ் அரசாங்கங்கள் அதை ஏற்கவில்லை.

1957 ஆம் ஆண்டுதான் முதன் முதலாக "மெட்ராஸ் ஸ்டேட்" சட்டமன்றத்தில் "தமிழ்நாடு" பெயர் மாற்றத் தீர்மானம் திமுகவால் கொண்டுவரப்பட்டது. அ ப்போது திமுகவின் உறுப்பினர்கள் மொத்தம் 15 பேர்தான். அத்தீர்மானத்தின் மீது விவாதம் நடத்திய பிறகு, "ஓட்டெடுப்பு நடத்த வேண்டும்" என்று அறிஞர் அண்ணா கோரினார். இனி, இதுகுறித்து அண்ணாவே கூறுவதைக் கேட்போம்:

"எங்களுக்குத் தெரியும், வாக்கெடுப்பில் நாங்கள் தோற்று விடுவோம் என்று; ஆனால் யார் யார் தமிழர்? தமிழ்நாட்டிற்குத் தமிழ்நாடு என்ற பெயர் வேண்டாம் என்று எழுந்து நிற்கின்றவர்கள் யார் யார்? என்பதை நாடு பார்க்க வேண்டாமா?

"தமிழ்நாடு என்று பெயர் மாற்ற வேண்டும்" என்று நாங்கள் 15 பேரும், எங்களை ஆதரித்த சில சட்டமன்ற உறுப்பினர்களும் எழுந்து நின்றனர். அடுத்து, தமிழ்நாடு

பெயர் வேண்டாம் என்று காங்கிரஸ் தரப்பிலே இருந்த 150 பேரும், முதலமைச்சர் காமராஜர் தலைமையில், "தமிழ்நாடு பெயர் வேண்டாம்" என்பதற்காக எழுந்து நின்றார்கள்.

ஆனால் அத்தனை பேரும் கம்பீரமாக நிற்கின்றார்களா? என்று பார்த்தேன்; தலை குனிந்து தான் நின்றார்கள். ஏனென்றால் தமிழ்நாட்டிலேயே பிறந்து, தொட்டிலிலே படுத்த காலத்திலே இருந்து, பேசியது தமிழ் மொழி. "தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்ற பெயர் வைப்பதும் கூட வேண்டாம் என்று சொல்லுகிற தமிழர்கள் இவ்வளவு பேர் இருக்கிறோமே" என்ற வெட்கத்திலே அவர்கள் தலைகுனிந்து நின்றார்கள்.

நான் எழக் கூடாதல்லவா? ஆகையால், காமராசரை, உட்கார்ந்து கொண்டே கேட்டேன், "தமிழ்நாடு வேண்டாம் என்று சொல்லுகிற தமிழர்கள் இவ்வளவு பேரை அழைத்துக் கொண்டு வந்தீர்களே, நல்ல சாமர்த்தியசாலி ஐயா, நீங்கள்!" என்றேன். அதற்கு அவர், "பரவாயில்லை! பார்க்கலாம், பார்க்கலாம்" என்றார்.

(திராவிட நாடு, 11. 8. 1957)

யோகமும் ஞானமும் -3

சித்தர் காகபுசுண்டர்: யுகங்களைக் கடந்த ஞானத்தின் வரலாறு

டாக்டர். அண்ணாமலை சுகுமாரன்

சித்தரியல் ஆராய்ச்சியாளர், புதுவை.

அறிமுகம்: யார் இந்த காகபுசுண்டர்?

தமிழ் சித்தரியல் மரபில் பதினெண் சித்தர்கள் முக்கிய இடம் வகிக்கின்றனர். இந்த பதினெண் சித்தர்களுக்கும் மூத்தவராகவும், அவர்களின் குருவாகவும் பலரால் கருதப்படுபவரே காகபுசுண்டர். மற்ற சித்தர்கள் சில நூறு ஆண்டுகளோ அல்லது சில ஆயிரம் ஆண்டுகளோ வாழ்ந்ததாகக் கூறப்படும் நிலையில், காகபுசுண்டர் பல யுகங்களைக் கடந்து, பல பிரளயங்களைப் (உலக அழிவுகளை) பார்த்து, இன்றும் சூட்சும வடிவில் வாழ்ந்து வருவதாக நம்பப்படுகிறது. இதனால் இவர் 'காலத்தை வென்ற ஞானி' என்றும் 'சிரஞ்சீவி சித்தர்' என்றும் அழைக்கப்படுகிறார்.

காகபுசுண்டரின் வரலாறு: பெயர் வந்த காரணம்

இவரது இயற்பெயர் புசுண்டர். இவருக்கு 'காக' என்ற அடைமொழி வந்ததற்கு ஒரு சுவாரஸ்யமான வரலாறு உண்டு.

புசுண்டர், தனது குருவான போகரிடம் (சிலர்அல்லமாப் பிரபுவிடம்என்றும் கூறுவர்) சீடராக இருந்து யோகக் கலைகளைக் கற்றுவந்தார். ஒருமுறை, குரு தனது சீடர்களின் பக்குவ நிலையைச் சோதிக்க விரும்பினார். அவர் திடீரென கடும் கோபம் கொண்டது போல நடித்து, தன் கையிலிருந்த தண்டத்தால் சீடர்களைத் தாக்க ஓடினார். மற்ற சீடர்கள் பயந்து சிதறி ஓட, புசுண்டர் மட்டும் குருவின் கோபத்திற்கு அஞ்சாமல், அவர் பாதம் பணிந்து நின்றார்.

குருவின் கோபம் தணியாதது போல் தெரிந்ததால், புசுண்டர் தன் உயிரைக் காத்துக்கொள்ள, குருவின் கோபத்திலிருந்து தப்பிக்க ஒரு காகத்தின் வடிவம் எடுத்து, குருவின் தண்டத்திலேயே அமர்ந்துகொண்டார். தன் சீடனின் குருபக்தியையும், சமயோசித ஞானத்தையும் கண்ட போகர் மனமகிழ்ந்து, "நீ காகம் போல் வடிவெடுத்தாலும், யுகங்களைக் கடந்து காகபுசுண்டர் என்ற பெயருடன் சிரஞ்சீவியாக வாழ்வாயாக!" என்று ஆசிர்வதித்தார். அன்று முதல், அவர் 'காகபுசுண்டர்' என்று அழைக்கப்படலானார்.

இவரது ஜீவ சமாதி, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள தென்பொன்பரப்பி எனும் ஊரில் அமைந்திருக்கும் சொர்ணபுரீஸ்வரர் ஆலயத்தில் இருப்பதாகக் கருதப்படுகிறது.

பெருநூல் காவியம்: ஒரு ஞானக் களஞ்சியம்

காகபுசுண்டர் மானுட குலத்திற்காக அளித்த மாபெரும் ஞானப் பொக்கிஷம், அவர் எழுதிய *"**காகபுசுண்டர் பெருநூல் காவியம்**"* ஆகும். இது சுமார் ஒரு லட்சம் பாடல்களைக் கொண்ட மிக பிரம்மாண்டமான நூல் என்று கூறப்படுகிறது. இன்று நமக்கு முழுமையாகக் கிடைக்கப்பெறாவிட்டாலும், கிடைத்திருக்கும் பாகங்களே அவரின் ஞானத்தின் ஆழத்தைப் பறைசாற்றுகின்றன.

இந்த நூலின் மிக முக்கியச் சிறப்பு, அதன் நடையே ஆகும். பொதுவாக, சித்தர்கள் தங்கள் பாடல்களை மறைபொருளாகவும், புரிந்துகொள்ளக் கடினமான முறையிலும் எழுதுவார்கள். ஆனால், காகபுசுண்டர் தனது மனைவியான பகுளாதேவிக்கு உபதேசம் செய்வது போல, எளிய உரையாடல் வடிவத்தில் இந்த நூலை எழுதியுள்ளார். ஒரு அன்பான கணவன், தன் மனைவிக்கு இல்லறத்தையும், ஞானத்தையும் ஒருங்கே போதிப்பது போல அமைந்திருப்பதால், தத்துவங்கள் கூட எளிதில் புரியக்கூடிய வகையில் உள்ளன.

பெருநூல் காவியத்தின் சிறப்புகள்*

இந்த நூல், யோகம், ஞானம், மருத்துவம், இரசவாதம் எனப் பல துறைகளின் களஞ்சியமாகத் திகழ்கிறது. இதன் முக்கிய சிறப்பம்சங்கள்:

வாசி யோகம்: சித்தர்கள் அனைவரும் கூறும் மூச்சுப் பயிற்சியிலேயே தலையாயது 'வாசி யோகம்' ஆகும். இந்த வாசி யோகத்தின் நுட்பங்களையும், அதன் மூலம் பிராண சக்தியைக் கட்டுப்படுத்தி, மனதை அடக்கி, இறைநிலையை அடைவது எப்படி என்பதையும் மிக விரிவாக விளக்கியுள்ளார்.

கால ஞானம்: பல யுகங்களைக் கண்டவர் என்பதால், காலத்தைப் பற்றிய இவரது பார்வை தனித்துவமானது. நடந்த, நடக்கப்போகும் பல நிகழ்வுகளைத் தனது

ஞான திருஷ்டியால் கண்டு, கலியுகத்தின் போக்கு, எதிர்கால நிகழ்வுகள், உலக மாற்றங்கள் எனப் பலவற்றையும் தீர்க்கதரிசனமாகப் பாடியுள்ளார்.

காயகற்பம்: உடலைக் கல்பகாலம் வரை, அதாவது அழியாமல் வைத்திருக்கும் மூலிகைகள் மற்றும் யோக முறைகளே காயகற்பம் எனப்படும். நீண்ட ஆயுளையும், நோயற்ற வாழ்வையும், நரை, திரை, மூப்பு இன்றி வாழும் வழிமுறைகளையும் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

பஞ்சபூத அடக்கம்: இந்த உலகம் பஞ்சபூதங்களால் ஆனது. நம் உடலும் அப்படித்தான். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களையும் நம் உடலுக்குள் கட்டுப்படுத்தும் முறையை (, பஞ்சிகரணம்,பஞ்ச பூத பகுப்பு , பஞ்சபூத அடக்கம்) இவர் விளக்கியுள்ளார். இதைச் செய்வதன் மூலம் இயற்கையின் மீது ஆளுமை செலுத்த முடியும் என்பது சித்தர் தத்துவம்.

பன்முக அறிவு: மேற்கண்டவை மட்டுமல்லாமல், மருத்துவம் (வைத்தியம்), உலோகங்களை தங்கமாக மாற்றும் இரசவாதம், வானியல், மந்திரங்கள் எனப் பல நூறு கலைகளைப் பற்றிய இரகசியக் குறிப்புகளும் இந்த நூலில் நிறைந்துள்ளன.

சித்தர் காகபுசுண்டர், வெறுமனே ஒரு சித்தர் மட்டுமல்ல; அவர் ஒரு கால புருஷர் , ஒரு மகா விஞ்ஞானி. குருபக்தியின் சிறப்பையும், யோகத்தின் வலிமையையும் தன் வாழ்வின் மூலம் நமக்கு உணர்த்தியவர். அவரது "பெருநூல் காவியம்", மனிதன் தன்னை அறிந்து, இயற்கையோடு இயைந்து, மரணத்தை வென்று, பேரானந்த நிலையை அடைவதற்கான ஒரு முழுமையான வழிகாட்டி நூலாகும். அவரைப் பற்றிப் படிப்பது, தமிழ் மரபின் ஆழமான அறிவியலைப் புரிந்துகொள்ள உதவும் ஒரு ஞானப் பயணமாகும்.

காகபுசுண்டரின் பதினாறு மந்திரக் குறள்கள் விரிவான உரை

முதன் முதலாக "

ஞானத்தின் நுழைவாயில்: காகபுசுண்டரின் பதினாறு மந்திரக் குறள்கள்

காலத்தின் கரைகள் கரைந்து போகும் ஒரு பெரும் வெளியில், யுகங்களைக் கடந்து, பிரபஞ்சத்தின் ஆதி இரகசியங்களை மௌனமாகச் சுமந்து வாழும் மகா சித்தர்கள் இன்றும் உண்டு என்பது நம் மரபின் நம்பிக்கை.

அத்தகைய சித்தர்களின் வரிசையில், காலத்தை வென்ற ஞானியாக, பிரபஞ்சப் பெருவெளியின் சாட்சியாக, என்றும் சிரஞ்சீவியாகப் போற்றப்படுபவரே காகபுசுண்ட மாசித்தர் .

அவர் யார்? அவர் மனிதரா, தெய்வமா, அல்லது காக வடிவில் திரியும் ஒரு ஞான ஒளியா?

வரலாறு அவரைப் பலவாறு பேசுகிறது. இமயத்தின் உச்சியில், கற்பக விருட்சத்தின் கிளையில் அமர்ந்து, யுகங்கள் பிறப்பதையும், அழிவதையும் ஒருங்கே காணும் ஒப்பற்ற ஞானி அவர் என்று நூல்கள் போற்றுகின்றன.

பல்லாயிரம் பாடல்களைக் கொண்ட "பெருநூல் காவியம்" போன்ற பிரம்மாண்டமான படைப்புகளின் மூலம், யோகம், ஞானம், தத்துவம், வானவியல், மருத்துவம், காயகல்பம் என மனித அறிவின் அத்தனை எல்லைகளையும் தொட்டவர் அவர்.

*அவருடைய ஞானம் ஒரு பெருங்கடல். அந்தப் பெருங்கடலில் இருந்து, சாதகர்கள் எளிதில் பருகி, தங்கள் ஆன்ம தாகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக, அவரே தன் கருணையால் அளித்த பதினாறு அமுதத் துளிகளே இந்த "**காகபுசுண்டர் குறள்**".*

முதன்முதலாக முழுமையான விளக்கத்துடன்...

சித்தர் இலக்கியங்களில் ஆர்வமுள்ள பலரும், இந்த பதினாறு குறட்பாக்களை இணையத்திலும், சில அரிய நூல்களிலும் கண்டிருக்கலாம். ஆனால், அவை பெரும்பாலும் மூலப் பாடல்களாகவோ அல்லது மேலோட்டமான பொழிப்புரைகளுடனோ மட்டுமே இருந்து வந்தன. ஒவ்வொரு சொல்லுக்குள்ளும் புதைந்து கிடக்கும் யோக இரகசியங்களையும், தத்துவார்த்தமான குறியீடுகளையும், உளவியல் நுட்பங்களையும் முழுமையாக விளக்கும் ஒரு ஆய்வுரை இதுவரை வெளிவரவில்லை. அந்த மாபெரும்

குறையை நிறைவு செய்யும் ஒரு பணிவான முயற்சியே இந்தப் புத்தகம். இது, உலகியல் அறிவால் எழுதப்பட்ட உரையல்ல.

குரு-சிடப் பரம்பரையில், ஒரு சாதகனின் பார்வையில், ஒவ்வொரு குறளையும் எப்படி அணுக வேண்டும் என்ற தாகத்தோடு மேற்கொள்ளப்பட்ட ஒரு ஞான ஆய்வின் தொகுப்பு.

இந்த நூலில் நீங்கள் காணப்போவது என்ன?

வாசி யோகத்தின் திறவுகோல்: *சுவாசத்தை வசப்படுத்தி, பிரபஞ்ச சக்தியை ஆளும் சித்தர்களின் மூல இரகசியமான "வாசி"யின் நுட்பங்கள்.*

காயகல்பத்தின் ரகசியம்: *உடலை ஒரு வைரக் கவசம் போல மாற்றி, நோயும் மூப்பும் இன்றி நீண்ட காலம் வாழும் கற்ப முறைகளின் தத்துவம்.*

மும்மலங்களை எரிக்கும் வழி: *நம்மைப் பிறவிதோறும் பிணித்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை ஞான நெருப்பால் சுட்டெரிக்கும் அக யாகத்தின் செயல்முறை.*

அகப் பூசையின் மகத்துவம்:

புறச்சடங்குகளைக் கடந்து, தனக்குள்ளேயே சிவசக்தியை ஐக்கியப்படுத்தி, பேரின்பத்தை அடையும் உள்நிலை வழிபாட்டின் படிகள்.

குருவின் உத்திரவாதம்: *ஆன்மீகப் பாதையில், ஐயங்களாலும், அச்சங்களாலும் தவிக்கும் சாதகனுக்கு, "உனக்குத் தோல்வியே இல்லை" என்று குரு அளிக்கும் மாபெரும் சத்திய வாக்கு.*

யாருக்கானது இந்தப் புத்தகம்?

"நான் யார்?" என்ற கேள்வியுடன் தன் பயணத்தைத் தொடங்கும் ஒவ்வொரு ஆன்மீக சாதகனுக்கும், சித்தர் தத்துவத்தின் ஆழத்தை அறிய விரும்பும் ஆய்வாளர்களுக்கும், தங்கள் வாழ்க்கையின் சிக்கல்களுக்கு ஒரு ஆழ்ந்தகன்ற தீர்வைத் தேடும் ஒவ்வொரு மனிதருக்கும் இந்தப் புத்தகம் ஒரு வழிகாட்டி.

இது ஒரு நூல் அல்ல; இது உங்கள் ஆன்மாவின் கதவைத் தட்டும் ஒரு மகத்தான குருவின் அழைப்பு. இது வெறும் எழுத்துக்களின் தொகுப்பு அல்ல; இது உங்கள் வாழ்க்கை முறையை மாற்றியமைக்கப் போகும் ஒரு ஞான தீட்சை.

வாருங்கள், காலத்தை வென்ற அந்த மாபெரும் ஞானியின் கைப்பிடித்து, மரணத்தை வென்ற அந்தப் பெருவாழ்வை நோக்கி, நமது உள்நோக்கிய பயணத்தை இப்போதே தொடங்குவோம். இந்த பதினாறு மந்திரக் குறள்களும், உங்கள் வாழ்வில் பேரொளியேற்றுவது உறுதி.

அருந்தமிழ் வளர்த்த அருளாளர்கள் - VIII

திருநெல்லைத் திருத்தொண்டர் சார்லஸ் தியோப்பிலஸ் ஈவால்ட் இரேனியஸ்

பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே,

மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி

அன்னைத்தமிழுக்கும் அருந்தமிழ் நாட்டுக்கும் அளப்பரிய கொடைகளை அள்ளித்தந்து, அயராத தொண்டுபுரிந்த அயலக அருட்தொண்டர்களின் அரும்பணிகளை விவரிக்கும் இத்தொடரில், இந்தக் கட்டுரையில் நாம் கவனத்துக்குட்படுத்தும் அருளாளரின் வாழ்வும் பணிவும் அலாதியானது. அதிசயிக்க வைப்பது. ஒரு 48 ஆண்டுகளே இம் மண்ணுலகில் வாழும்வாய்ப்பு பெற்றவர் - அதிலும் தமிழகத்தில் சுமார் 25 ஆண்டுகள் மட்டுமே அருள் தொண்டு ஆற்றியவர் செய்து முடித்த பன்முகப் பணிகளை எண்ணுந்தோறும் பேசமுடியாத பிரமிப்பு மேலிடும் என்பதுண்மை.

தமிழகத் தலைநகர் சென்னையில் ஆறு ஆண்டுகளும், (1814-1819) தமிழ்மணம் கமழும் நெல்லைப் பகுதியில் (1820 - 1838) பத்தொன்பது ஆண்டுகளும் மட்டுமே, அவரது போராட்டம் மிக்க தொண்டு வாழ்வு அமைந்தது. அதற்குள், அவர் நிகழ்த்திக் காட்டியுள்ள அற்புதங்கள், அதுவும் நெல்லைப் பகுதியில் அவர் ஏற்படுத்திய மாற்றங்கள், வியக்கத்தக்கன. திருநெல்வேலி மாவட்டத்தில்தான், தமிழகத்தின் பெரும்பான்மையான கிறித்தவம் தழுவிய பெருமக்கள் அன்று முதல் இன்று வரை வாழ்கின்றனர் என்பதும், தமிழகத்தில் அருட்பணி புரிந்த அயல்நாட்டுத் திருத்தொண்டர்களுள் பெரும்பான்மையினர் திருநெல்லைப் பகுதியில்தான் அரும்பணி ஆற்றினர் என்பதும் தமிழக வரலாறுணர்த்தும் உணமை. அந்த வகையில், அத்தகு அருள் தொண்டர்களுள் தலையாயவராகத் திகழ்ந்தவர் சார்லஸ் தியோப்பிலஸ் ஈவால்ட் இரேனியஸ் எனப்படும் பெரியாரே ஆவார்.

(இனி, நீண்ட பெயர் கொண்ட அவரை இக்கட்டுரையில் இரேனியஸ் ஐயர் எனச் சுருக்கமாகவே சுட்டுவோம்.) திருநெல்வேலித் திருச்சபையின் வரலாற்றை எழுதிய பேராயர் A.J. பால் அப்பாசாமி என்பார், 'திருநெல்லைச் சபை வரலாறு என்பது, இரேனியஸ் ஐயரின் வரலாறே' எனக் குறிப்பிடுகிறார். அந்த அளவுக்கு, அவரது அரும்பணிகள் நெல்லைச் சீமையைச் செழுமைப்படுத்தியதால்தான், அவரை திருநெல்லையின் அப்போஸ்தலர் (திருத்தொண்டர்) என அனைவரும்

அழைத்து மகிழ்கின்றனர். இனி, அவரது வாழ்வும் பணிகளும் பற்றிச் சில சுருக்கமான குறிப்புகளாகப் பார்ப்போம்.

ஐயரின் இளமைப்பருவமும் இந்திய வருகையும்

மேற்கு பெர்சியாவில் (பிரஷியா என்றும் அழைக்கப்படும் இன்றைய ஜெர்மனியின் ஒருபகுதி) நேரியன் வெல்டர் என்ற ஊரில் 1790 ஆம் ஆண்டு நவம்பர் 5ஆம்நாள் பிறந்த இரேனியஸ், ஏழு வயதிலேயே தந்தையை இழந்தவர். பெரியப்பா (அவரும் ஒரு ரேனியஸ்)வின் பண்ணை வீட்டில் வளர்ந்த அவர், கிறித்தவப் பக்தி மார்க்கத்தில் வளர்க்கப்பட்டார். சிறு வயதிலேயே வெளிநாடு சென்று இறைப்பணியாற்ற வேண்டும் என்ற ஆவல் கொண்டார். பள்ளி, கல்லூரி படிப்புகளோடு, பெர்லின் சென்று 15 மாதங்கள் இறையியல் பயிற்சியும் பெற்றார். பின்னர் 1812ஆம் ஆண்டு பெர்சிய நாட்டு சுவிசேட லுத்தரன் திருச்சபையினரால் சமய குரு பட்டம் சூட்டப்பட்டார். அதைத் தொடர்ந்து அவரும் அவரது நண்பர் ஷனாரும் இங்கிலாந்தில் இலண்டன் மாநகர் சென்று, அங்கு சில காலம் சமயப் பணியாற்றினர். அதனைத் தொடர்ந்து, அவரது இந்தியக் கனவுக்குத் தடைகளாய் இருந்த பல சிக்கல்கள் நீங்கி, 1814 பிப்ரவரி 14ஆம்நாள் சென்னைக்குக் கப்பலில் புறப்பட்டு ஜூலை 4ஆம் நாள் சென்னைத் துறைமுகம் வந்து சேர்ந்தார்நண்பரோடு.

சென்னையில் கிறிஸ்தவ அறிவு அபிவிருத்தி சங்கத்தில் **(SPCK)** சில காலம் பயிற்சி பெற்றார். அதன்பிறகு தரங்கம்பாடி சென்று தம் நண்பரோடு ஊழியப்பயிற்சியும் தமிழ் மொழி அறிவும் பெற்றார். அவர் ஐந்தே மாதங்களில் தமிழைப் பேசவும் எழுதவும் கற்றுக்கொண்டதோடு, தெருவில் நின்று அருளுரையாற்றும் அளவு மொழியறிவில் தேர்ந்து நின்றதாக அவரது வாழ்க்கை வரலாற்று நூலாசிரியர் ஆர்.எஸ். ஜேக்கப் குறிப்பிடுகிறார். அக்காலத்துப் புகழ்பெற்ற தமிழ்ப் பண்டிதரான முகவை இராமானுசக் கவிராயரிடமும் திருப்பாற்கடல் நாதக் கவிராயரிடமும் அவர் தமிழ்ப் பயிற்சி பெற்றதாகக் கூறப்படுகிறது. அவரது தமிழ்ப் புலமையும் தமிழ்ச் சமய அறிவும் எந்த அளவுக்குச் சிறத்திருந்தது என்றால்,திருநெல்லையின் புகழ்மிகு நெல்லையப்பர் கோயில் முன்பும், காஞ்சிபுரம் வரதராசப்பெருமாள் கோயில் முன்பும் நின்று, இந்து சமய அறிஞர்களோடு சமய விவாதம் புரியுமளவு அவர் புலமை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சென்னையில் ஆறு ஆண்டுகள் தங்கி இருந்து, மக்களோடு கலந்துறவாடி, சமயப் பணியும் சமுதாயப் பணியும் ஆற்றினார். தாம் வாழ்ந்த இராயபுரத்தில் சிறிய ஜெபக்கூடமும் சிறுவர்களுக்கு ஞாயிறு பள்ளியும் நடத்தி வந்தார். பிறகு காஞ்சிபுரம் சென்றார். அங்கு சமயப் பணியோடு, அங்கிருந்தபிராமணர்களின் வேண்டுகோளுக்கிணங்கி தமிழ் - ஆங்கிலப் பள்ளிகளை ஏற்படுத்தினார். இந்து சமயத்தவருக்கு ஒருபுறம் கிறித்தவக் கொள்கைகளை அறிவித்து வந்தாலும், மறுபுறம் அவர்களோடு நட்புறவும் கொண்டிருந்தார். பிறகு பல காரணங்களால் திருநெல்லைப் பதிக்குச் சென்றார். அவரது இந்தியத் திருப்பணி வாழ்வின் பெரும் பகுதியாக 19 ஆண்டுகளை அங்கேயே கழித்து, அதிசயிக்கத்தக்க அரும்பணிகளைக் கடும் போராட்டங்களுக்கிடையிலும் நிகழ்த்தினார். அவரது பன்முகப்பணிகளான சபைகள் நிறுவுதல், பள்ளிகள் ஏற்படுத்தல், திருப்பணியாளர்களை ஏற்படுத்தல் நூல்கள் எழுதுதல், விவிலிய மொழிபெயர்ப்பு பிற சமுதாயப் பணிகள் போன்றவற்றைத் தொடர்ந்து சிறு சிறு தலைப்புகளில் தொகுத்துக் காண முற்படுவோம்.

II ஐயரின் பன்முகப் பணிகள்

அ. நற்செய்தி அறிவிப்பும் சபைகள் நாட்டலும்

அடிப்படையில், கிறிஸ்து பிரானின் நற்செய்தியை இந்திய மக்களுக்குப் பகிர்ந்திடும் நோக்கோடு இங்கு வந்த இரேனியஸ் ஐயர், அப்பணியைச் செய்யத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து வாழ்ந்தார். 1825இலும் பின்னரும் பல புதிய புதிய சபைகளை அவர் சென்னையிலும் நெல்லை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நிறுவினார். அவர் ஏற்படுத்திய பல புதிய சபைகளும் திருச்சபை மக்களும் அக்காலத்திலேயே நற்செய்தியை விரும்பாத எதிரிகளால் பல்வேறு இன்னல்களுக்குட்படுத்தப்பட்டனர். ஐயரும் அவரது சீடர்களும் அனைத்து இடர்களையும் பொறுமையுடன் சகித்தனர். திருச்சபைக்கு வெளியே இருந்த மக்களால் மட்டுமன்று, அவரைத் திருச்சபைப் பணியில்

நியமித்த சொந்த நிறுவனத் தலைவர்களாலும் உடன் ஊழியர்களாலும் கூட அவர் பல்வேறு பாடுகளுக்குட்படுத்தப்பட்டார். அக்காலத்தில் தமிழகத்தில், ஏன் கிறிஸ்தவ நிறுவனங்களில்கூட நிலவிய சாதியப் பாகுபாட்டை இரேனியஸ் ஐயர் கடுமையாக எதிர்த்து நின்றார். சாதிப் பாகுபாடுகளுடன் அவர் எத்தகைய சமரசமும் செய்து கொள்ள மறுத்துவிட்டதாலும்; அவர் பலரது பகையைச் சம்பாதித்துக் கொண்டதாக, அவரது வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

எவ்வாறாயினும், அவரது நற்செய்தி அறிவிப்புப் பணியிலும் திருச்சபைகள் ஏற்படுத்தும் பணியிலும் அவர் சோர்ந்து போகவில்லை. அவரது அருட்பணிக்கு அக்காலக் கிழக்கிந்தியக் கம்பெனி அரசு தந்த ஆதரவினும் எதிர்ப்பும் இடையூறுமே மிகுதி. இந்து மதத் தத்துவங்களை ஆழ்ந்து கற்று, அச்சமய அறிஞர்களோடும் மக்களோடும் உரையாடி, கிறிஸ்துவின் மீட்பின் வழியை அறிவித்தார். சில இந்துக்கள் அவருக்கு எதிர்ப்பு காட்டினாலும், பலரும் அவரது நற்பணிகளுக்கு ஆதரவளித்தனர். அவர்களுள் அக்காலத்தில் பெரும் செல்வந்தராகத் திகழ்ந்தவரும் தீவிர இந்து சமயப் பற்றாளருமான வெங்கு முதலியார் முக்கியமானவர். இரேனியஸ் ஐயரின் நெருங்கிய நண்பரான அவர், ஐயரின் திருப்பணித் தேவைகளை உணர்ந்து, அவருக்குத் தம் நிலத்தையும் கட்டடங்களையும் பணமும்கூட நன்கொடையாகவும், குறைந்த விலையிலும் கொடுத்தார். அவருக்கு நன்றி தெரிவித்து இரேனியஸ் ஐயர் எழுதிய கடிதத்தில் நம் நாட்டில் செல்வர்களும் மிராசுதார்கள் போன்ற நிலச்சுவான்தார்களும் ஏழை எளிய மக்களை ஒடுக்குவதைப் பற்றிய தம் ஆதங்கத்தை வெளியிட்டு, மெய்க்கடவுள் பற்றிய போதனையையும், கடவுளின் இறுதி நியாயத்தீர்ப்பு பற்றியும் குறிப்பிட்டு எழுதத் தயங்கவில்லை. அவ்வாறே, அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த இன்னொரு செல்வந்தரும் தமிழறிஞருமாகிய திருமணம் சுலோச்சன முதலியாருடனும் ஐயர் ஆழ்ந்த நட்பு கொண்டிருந்தார். அவரும் இவரது பணிகளுக்குப் பல்வகைகளில் உதவி செய்தார்.

ஆ, தமிழ் - ஆங்கிலப் பள்ளிகள் நிறுவியமை

ஐயர் காஞ்சிபுரத்திலும் நெல்லைப் பகுதிகளிலும் பல தமிழ் - ஆங்கிலப் பள்ளிகளை, ஏழை - எளிய மாணவர்கள், நலனுக்கென்று ஏற்படுத்தினார். இப்பளிகளில் அக்காலச் சமுதாய நிலைக்கு எதிராக, சாதி பேதமற்ற சமத்துவக் கல்வியை வழங்கினார். மாணவர்களாக மட்டுமன்றி, ஆசிரியர்களாகவும், அக்காலத்தில் உயர்சாதி இந்துக்கள் மட்டுமே நியமிக்கப்பட்டு வந்த நிலையில், ஐயர் சூத்திரர்களையும் பறையர்களையும் சாணார்களையும் ஆசிரியர்களாகச் சேர்த்துக் கொண்டார். இது பெரும் சர்ச்சையைக் கிளப்பியதால், பள்ளி விடுதியை மூட வேண்டி வந்தது. என்றாலும் அவர்பணி தொடர்ந்தது. இதற்காகவே ‘செமினரி’ எனப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்தினார். அவ்வாறே, பெண்களுக்குக் கல்வி புகட்டுவதில் பெரும் அக்கறை காட்டினார்.

அவர் ஏற்படுத்திய பெண்கள் பள்ளிகளுக்கு அவரது மனைவி ஆனி அம்மையாரும் இன்னொரு அருட்தொண்டரான ஸ்மிட் ஐயரின் மனைவியும் திருமதி சனார் அம்மையாரும் பொறுப்பாய் இருந்து பார்த்துக் கொண்டார்கள். வி டுதிகளுடன் கூடிய பள்ளிகளை அவர் ஏற்படுத்தி, எண்ணற்ற ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் பயன்பெறச் செய்தார். அவர் ஏற்படுத்திய பல பள்ளிகள் இன்றுவரை நிலைத்திருக்கின்றன. சான்றுகளாக, அவர் ஏற்படுத்திய பெண்கள் செமினரிதான் இன்று மேரி சார்ஜண்ட் பெண்கள் மேனிலைப் பள்ளியாக இயங்குகிறது. அவ்வாறே நெல்லை நகர் பள்ளி, சாத்தான் குளம் ஆண்கள் பள்ளி, டோனாவூர் பள்ளி, நல்லூர் அருணோதயம் பெண்கள் பாடசாலை எனப் பல நிறுவனங்களைக் குறிப்பிடலாம்.

இந்தியாவிலேயே, ரேனியஸ் ஐயர் முயற்சியால் தான் முதன்முதலாக பெண்களுக்கென உண்டுறைப் பள்ளி *(Boarding School)* நாகர் கோவிலிலும் இரண்டாவதாக பாளையங்கோட்டையிலுமே ஆரம்பிக்கப்பட்டன.

இ) சமுதாய நலப் பணிகள்

ஐயர் ஆற்றிய சமுதாய நலப் பணிகள் பல திறத்தன. அவற்றுள் முக்கியமான சிலவற்றைப் பார்க்கலாம்.

1. ஐயர், அக்காலத்தில் அருட்பணியாளர்களின் மறைவுக்குப் பிறகு (பலவகைத் துன்பங்களில் உழன்ற) அவர்களது விதவைகளின் நல்வாழ்வுக்கு ஏற்பாடு செய்திட அவர்கள் உதவித்தொகை (ஜீவனாம்சம்) பெற வழிவகுத்தார். அதற்காக, ‘கைம்பெண்கள் சங்கம்’ என ஒன்றை ஏற்படுத்தினார்.

2. தருமசங்கம் என ஒன்றை ஏற்படுத்தி, அதன்வழி பாடசாலைகள், வீடுகள், கோயில்கள் கட்டுவதற்கு நிலங்கள் வாங்கிக் கொடுத்தார். பாளைக்குத் தெற்கே 40 கி.மீ. தூரத்தில், ‘டோனா’ என்னும் ஜெர்மானிய மாதுவாகிய ஒரு வள்ளலின் பொருளுதவி பெற்று, ஒரு நிலம் வாங்கி, அதற்கு ‘டோனாவூர்’ எனப் பெயரிட்டு, அங்குக் கிறித்தவர்களைக் குடியேற்றினார். இன்றும் அங்கு ஒரு பள்ளி, விடுதி, எனப் பல சமுதாய நலப் பணிகள் நிகழ்ந்து வருகின்றன. இச்சங்கத்தின் வழியாக, அவர் 12 கிராமங்களை உருவாக்கியதாக வரலாறு கூறுகிறது.

3. அருள்பணிகளோடு, மக்களுக்குக் கொள்ளைநோய் தடுப்புப் பணியிலும் அவர் ஈடுபட்டார். 1818 இல் சென்னையில் பயங்கர காலரா நோய் பரவியது. எண்ணற்றோர் உயிரைக் காவு வாங்கிய அக் கொள்ளை நோயை, மாரியம்மை தேவதையின் கோபம் என நம்பி, மக்கள் செயலற்று நின்றனர். இரேனியஸ் ஐயர், அக்காலரா நோயைப் பற்றிய உண்மை நிலையை விளக்கி, துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டு, முதற் சிகிச்சையும் போதனைகளும் தந்து, மக்களைக் காப்பாற்றினார். 1832இல் நெல்லையிலும் இக்காலரா நோய் பரவியது. அங்கும் ஐயரின் பணி தொடர்ந்தது.

ஈ. இலக்கியப் பணிகள்

இரேனியஸ் ஐயரின் இலக்கியப் பணிகளை, எழுதுவதென்றால் மிக விரியும். அது தனி ஆய்வாகச் செய்யப்படக்கூடியது. சிலவற்றை மட்டும் குறிப்பிடலாம்.

i) சென்னைத் துண்டுத்தாள் பிரசுரக் கழகம் (Madras tract and Religious Book Society) மூலம் பல துண்டுப் பிரதிகளை அச்சடித்து விநியோகித்தார்.

ii) மேலும் பல்வேறு நூல்களை எழுதி வெளியிட்டார்.

வேதாகம சாத்திர வினாவிடை, கிறிஸ்து மார்க்க சித்தாந்தவினா விடை, வேத சரித்திரம் (தமிழாக்கம்) சுவிசேஷச் சமரசம், ஞானப் போதிப்பு, தெய்வீக சாராம்சம், வேதாகமத் துணை நூல் (தமிழாக்கம்), வேதாகம முடிவுரை முதலியன அவர் எழுதிய கிறிஸ்து சமயம் தொடர்பான நூல்கள்.

அவ்வாறே எபிரேய இலக்கணம், தமிழிலக்கணம், தமிழிலக்கணம் (ஆங்கிலத்தில்) ஆகிய இலக்கண நூல்களையும் தயாரித்து வெளியிட்டார்.

iii) வேதாகம மொழிபெயர்ப்பு

விவிலிய மொழிபெயர்ப்புக்காக, சென்னை வேதாகம சங்கத்தைத் தோற்றுவித்தவர் *(Madnas Bihlesociety)* அவரே. வேதாகம மொழிபெயர்ப்பில் பெரிதும் ஆர்வம் காட்டிய அவர், தமக்கு முன்னர் பெப்ரீசியஸ் ஐயர் வெளியிட்ட மொழிபெயர்ப்பைத் திருத்தி வெளியிட்டார். மொழிபெயர்ப்புக்கான கொள்கைகளை வகுத்து, கொச்சைமொழிகள் நீங்கிய – இலக்கணப் பிழைகளற்ற மொழிபெயர்ப்பைக் கொணர வழி வகுத்தார். 'கிறித்தவமும் தமிழும்' என்ற நூலை எழுதிய மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள், இவரது உரைநடையைப் பெரிதும் பாராட்டி, அதற்கான சான்றுப் பகுதிகளையும் தம் நூலில் எடுத்துத் தந்துள்ளார். இரேனியஸ் ஐயர், அருமுயற்சியால் விவிலியத்தின் புதிய ஏற்பாடு முழுமையையும் பழைய ஏற்பாட்டில் முந்திய மொழிபெயர்ப்புகளின் திருத்தத்தையும் வெளியிட்டார்.

iv) பாடநூல்கள்: பல்வேறு பள்ளிகளை ஏற் படுத்திய ஐயர் அவர்கள், தமது பள்ளி மாணவர்களுக்குத் தேவையான பாடநூல்களைத் தாமே தயாரித்து வெளியிட்டார். அவ்வாறு, பல அறிவியல் நூல்களையும், பூகோளம், பொதுஅறிவு, வரலாறு முதலிய பல பொருண்மைகளில் பாட நூல்களைத் தயாரித்து வெளியிட்டார். இவை, பள்ளி மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களாக அமைந்ததோடு, ஒருவகையில் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கும் பெரிதும் உதவின என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறாக, துண்டுப் பிரசுரங்கள் திருமறை விளக்க நூல்கள், பொது அறிவு நூல்கள், இலக்கண நூல்கள், பாட நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் மற்றும் விவிலிய மொழிபெயர்ப்பு எனப் பன்முக இலக்கியப் படைப்பாக்கங்களில் தலைசிறந்து நின்றார் இரேனியஸ் ஐயர்.

iv ஐயர் போற்றிய அறங்கள்

இத்தகு பெரு வாழ்வு வாழ்ந்த இரேனியஸ் ஐயரின் தொண்டு வாழ்வில் மேலோங்கி நிறை சில பண்பறங்களை இவ்வாறு சுட்டலாம்.

அ) அயராத உழைப்பும் மன உறுதியும் (மக்களின் சோம்பலை அவர் கடிந்து பேசிய குறிப்புகள் உள்ளன.)

ஆ. சாதிப் பாகுபாடு மறுத்த சமத்துவ நெஞ்சு (சமத்துவக் குடியிருப்புகளை அன்றே ஏற்படுத்தி, இந்நாளில் நாம் பேசும் சமத்துவ புரங்களுக்குக் கால்கோள் செய்தார்.)

இ) ஏழை எளியோர் நியாயத்துக்காக வாதாடும் உள்ளம்

(அவரது நண்பர் வெங்கு முதலியாருக்கு அவர் எழுதிய கடிதமே சான்று)

இத்தகு மாமனிதரின் அருளற வாழ்வ பற்றி, அவரது மறைவின்போது, புகழ்பெற்ற புலவர் திருப்பாற்கடல்நாதக் கவிராயர் பாடிய இரங்கற்பா (கையறு நிலை) வின் சில அடிகளுடன் இக்கட்டுரையை நிறைவு செய்வோம்.

“அன்பெனும் விளக்கில் அருளெனும் நெய்பெய்து
ஆழ்ந்த சிந்தையைத் திரியாக்கி
மன்பெரு மானத் தீபமதேற்றி வான்
கடவுளைக் கண்டு மனிதர்க்கு
என்புருகிட நல்லறிவினைப் புகட்டும்
இரேனியூ சென்னும் பேரிறைவன்
தன்பெரும் புகழை உலகினிற் பரப்பிச்
சார்ந்தனன் பரகதி தன்னில்

“அ(ன்)னை நிகரன்பும் இயேசுவின் அருளும்
அவனியிற் பொறையும் விண் சுடரோன்
தனை நிகர் ஒளியும் மலைநிகர் வலியும்
தழைத்திட வாழ்ந்துநன் மொழியால்
கனைகழல் வேந்தர் முதலினோர்க் கறிவு
காட்டிநற் கதியினைச் சார்ந்தான்
தினையள வையமின்றி நற்கலைகள்
தேர்ந்த இரேனியூசு என்போன்”

இங்கிலாந்து மண்ணில் இனிய தமிழ்விழா
‘தமிழணங்கு’ எழுத்தாளர்களுக்குப் பாராட்டு விருது

உலக முதன்மொழி என போற்றப்படும் அன்னைத் தமிழுக்கும் தமிழ்வழி மானுட சமுதாயத்துக்கும் பல்வேறு பங்களிப்புகளைப் பன்னாடுகளில் பன்முகங்களில் அர்ப்பணிப்புடன் ஆற்றிவரும் தமிழ்ச் சான்றோர்களையும் தமிழறிஞர்களையும் கவுரவிக்கும் ஒருவிழா அண்மையில் (ஜூன் 18 அன்று) நடைபெற்றது. அதுவும், நம் தாய்த் தமிழ்நாட்டில் அல்ல, நம் நாட்டைச் சில காலம் ஆண்ட பிரித்தானிய நாட்டின் பாராளுமன்ற வளாகத்தில் வைத்து, இப்படி ஒரு நிகழ்ச்சிக்கு சென்னையிலுள்ள ஆலந்தூர் மோகனரங்கன் ஆய்வு மையத்தினரும் இலண்டனில் இயங்கும் குரைடன் மாநகர் தமிழ்ச் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்வில் உலகெங்கிலும் இருந்து 24 நாடுகளைச் சேர்ந்த 104 தமிழறிஞர்களும் தமிழ்ச் சங்கங்களின் பொறுப்பாளர்களும் ‘செந்தமிழ்ச் சான்றோர்’ விருது வழங்கிப் பாராட்டப்பட்டனர். இந்நிகழ்வில் இங்கிலாந்து காமன்வெல்த் விவகாரத் துணை அமைச்சர், குரைடன் மாநகரத் துணைமேயர், இங்கிலாந்தின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் (எம்.பி.க்கள்) உள்ளிட்ட பலர் பங்கேற்று அறிஞர்களைப் பாராட்டிப் பேசினர். இவ்விழாவில் நமது ‘தமிழணங்கு’ இதழ்ப் பொறுப்பாசிரியர் டாக்டர் சந்திரிகா சுப்பிரமணியம் (ஆஸ்திரேலியா) அவர்களும் நமது இதழின் தொடர் எழுத்தாளர்

பேராசிரியர் முனைவர் மோசசு மைக்கேல் பாரடே (சென்னை) அவர்களும் செந்தமிழ்ச் சான்றோர் விருதும் பாராட்டுப் பத்திரங்களும் பொன்னாடையும் வழங்கிப் பாராட்டப்பட்டனர் என்பது நமக்கெல்லாம் மகிழ்வுதரும் செய்தி. அயல்நாட்டு மண்ணில் அருந்தமிழ்ச் சான்றோர்க்கு செய்யப்பட்ட இச்சீர்மிகு பெருமைகள், மறக்க முடியாத ஒரு வரலாற்று நிகழ்வாக நிலைத்துவிட்டது.

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்
சிட்னி ஆஸ்திரேலியா

பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை

3/422, Thiruvalluvar Street,
Dinamani Nagar, Madurai 625 018.
Mob: +91 7010997639

	நூல்கள்	விலை (Rs.)
1.	திருவிளையாடல் புராணக் கதைகள் (எளிய உரைநடையில்)	200
கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்		
1.	உன்னோடு உரையாடுதல்	100
2.	காதல் மொழி	200
3.	பார்வையில் பூத்த நிலா	100
4.	தேனடையும் வரலாறு	100
5.	நுண்கலை மருத்துவன்	200
6.	தொடரும் புழுதிக்கால்கள்	100
முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்		
1.	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர்.	200
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	200
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	200
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	200
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.	200
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	200
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	200
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	200
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I	200
10.	நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I]	200
11.	பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]	200
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.	200
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	200
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	200
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	200
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	200
17.	Unique Fandom of MGR	200
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	200
19.	எம்ஜிஆர் படத்தில்சண்டைக்காட்சிகளின்சுவாரஸ்யங்கள்–I	200
20.	எங்க வீட்டுப்பிள்ளை	200
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	200

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	*தலைமை பொறுப்பேற்கலாம்*	*120*
2.	*இணையத் தமிழ்*	*150*
3.	*ஊடகச் சட்டங்கள்*	*250*
4.	*ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்*	*200*
5.	*கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)*	*200*
6.	*மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)*	*200*

முனைவர் செ. இராஜேஸ்வரியின்
சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1.	*பண்பாட்டு நகர்வுகள் – தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு*	*200*
2.	*பெண் தெய்வ வழிபாடு*	*200*
3.	*தேவேந்திரன்*	*200*
4.	*மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)*	*200*
5.	*இரு நிலத்தில் திருமுருகன்*	*200*
6.	*முன்னோர் வழிபாடு (கதிரவன், காலதேவன், நாகர் வழிபாடும்)*	*200*
7.	*வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்*	*200*
8.	*யானைக்கடவுள்*	*200*
9.	*பெண் பூப்பின் புனித வழிபாடு*	*200*

முனைவர் செ. இராஜேஸ்வரியின்
கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	*பாடுபொருளும் பாசப்பொருளும்*	*250*
2.	*"பூ மர நிழலி"ன் களமும் காலமும்*	*200*
3.	*"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு*	*100*
4.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின்* **கவிதையில் காதல்**	*100*
5.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் பயணக் கவிதைகள்*	*200*

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு
முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*எட்டுத்திக் கும் செல்வீர்*	*200*
2.	*அவன் கடவுளுக்கு நிகரானவன்*	*200*
3.	*செக்கச் சிவந்த ரோஜா*	*200*
4.	*கலீல் ஜிப்ரா னின் "மணலும் நுரையும்"*	*200*
5.	*கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"*	*200*

Tamil Classics in English – (Dr. C. Rajeswari)

1.	Kurunthokai	*200*
2.	Aganaanooru	*200*
3.	Purananooru	*200*
4.	Naaladiyaar	*200*
5.	Aasaarakkovai	*200*
6.	Thiru Kutraala Kuravanji	*200*

தற்காலத் தமிழில் சங்க இலக்கிய நூல் வரிசை

1.	குறுந்தொகைக் கவிதைகள்	200

மொழிபெயர்ப்பு ஆய்வு நூல்கள் – முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)	200
2.	கவிதை மொழிபெயர்ப்பு	200
3.	நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)	200
4.	மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்	200

தமிழ் இலக்கண நூல்

1.	தமிழில் வேற்றுமை உருபுகள்	200

சிறு கதை, கவிதை

1.	அமராவதியின் காதல் - சத்யப்பிரபா	200
2.	ரோஜா மொட்டு (சித்திரக் கவிதைகள்) - சத்யப்பிரபா	200

மாத இதழ்கள்

1.	தமிழணங்கு மாத இதழ்	200
2.	Love Thamizh	500

பேராசிரியர் முனைவர் தே. ஞானசேகரனின் நூல்கள்
ஆங்கிலத்தில் – முனைவர் செ. இராஜேஸ்வரி

Moonstone Publication, Madurai

1.	Emerging Mallarism	200
2.	Festival of lord Indra	200
3.	Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam Kudumbanar)	200
4.	Re reading of Pallu literature	200
5.	Mallariyan Literature	200
6.	Frontyard without My Dad (Poem)	200

Poems of Er.Poet Muththamizh Virumbi - In English Dr. C. Rajeswari

[Moonstone Publication]

1.	Therapist of the Finest Art	200
2.	Following Dusty Feet	200

Other Books

1.	Concepts of Constitution - Dr.S. Kalai Arasu	300
2.	Aranyani By Vijeni (English Novel Part I & Part II)	200

தமிழணங்கு விருது வழங்கும் விழா

தமிழராய் இணைவோம்

தமிழணங்கு ஆய்விதழின் மூன்றாம் ஆண்டு நிறைவை ஒட்டி இவ்விதழில் தொடர்ந்து கட்டுரை எழுதி வரும் அறிஞர் பெருமக்களுக்கு விருது வழங்கப்படுகிறது.

நிகழ்ச்சி நிரல்

நேரம்	: 19-08-2025 செவாய்கிழமை பிற்பகல் 2.00 மணி
இடம்	: அண்ணா நினைவு நூலகம்,சென்னை.
விருது வழங்குபவர்	: **சைதை சா. துரைசாமி** அவர்கள், பெருநகரச் சென்னையின் முன்னாள் மேயர், மனிதநேய ஐ. ஏ. எஸ். அகாடமியின் தலைவர்
பிற்பகல் 2.00 மணி	: தமிழ்த்தாய் வாழ்த்து
பிற்பகல் 2.15 மணி	: விருதாளர்கள் அறிமுகம்
மாலை 4.00 மணி	: தேநீர் இடைவேளை
மாலை 5.00 மணி	: விருது வழங்குதல்
மாலை 5.55 மணி	: நாட்டுப் பண்

தமிழணங்கு இயற்றமிழறிஞர் விருதாளர்கள்

1. முனைவர் தேமொழி (சான்பிரன்ஸிஸ்கோ, யுஎஸ்ஏ)
2. முனைவர் மு. முத்துவேலு
3. முனைவர் மோ. மைக்கேல் ஃபாரடே
4. முனைவர் சந்திரிகா சுப்ரமணியன் (ஆஸ்திரேலியா)
5. முனைவர் சிவ. இளங்கோ
6. மு. பழநிசாமி, நூலகர்
7. முனைவர் ஆனந்த் அமலதாஸ்
8. முனைவர் புதேரி தானப்பன்

தமிழணங்கு இயல்தமிழ் விருதாளர்கள்

1. வழக்கறிஞர் கனிமொழி (வெர்ஜினியா, யுஎஸ்ஏ)
2. ஐயை திவ்யகுமாரி கண்ணம்மா
3. டாக்டர் மேனகா நரேஷ் (நியூ ஜெர்சி, யுஎஸ்ஏ)
4. ஆராய்ச்சியாளர் மாரிராஜன்
5. கவிஞர் வித்யா மனோகரன்
6. முனைவர் ஜெயந்தி
7. தமிழாசிரியர் ஜனக்புரி சீனிவாசன்
8. முனைவர் மெய். சித்ரா

தமிழணங்கு இலக்கணத் தமிழறிஞர் விருதாளர்கள்

1. நெருப்பலையார் இராம இளங்கோவன்
2. பேரா. முனைவர் கு. இராமகிருட்டிணன்

அனைவரும் வருக சிறப்புத் தருக!!!

சந்திரோதயம் பதிப்பகம்

தமிழணங்கு மாத இதழை வெளியிடுவோர்:

இ. சதீஷ் ராஜ்குமார் (அட்வகேட்), சந்திரோதயம் அறக்கட்டளை,
3/422, தினமணி நகர், மதுரை 625 018, Ph: +91 7871123226

அன்பளிப்பு ரூபாய்: 120/-